janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்
# ஜனசக்தி
மக்கள் வாரஇதழ்
மலர் 85 | 2022 அக்டோபர் 16 - அக்டோபர் 22 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 28




பேரபாயத்தை உணர்வோம்! போர்க்குணமிக்கவர்களாக உயர்வோம்! ப 02



மதச்சார்பின்மை... வெறும் சொல்லல்ல! ப 03



அருஞ்சொல்லின் கட்டுரைக்கு எமது பதில்! ப 05



## பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். மதவெறி சக்திகளுக்கு எதிராக

# லட்சக்கணக்கானோர் மனிதச் சங்கிலி

**காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் 2ம் தேதி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), விசிக கட்சிகளின் சார்பில் சமூக நல்லிணக்க மனிதச் சங்கிலி நடத்துவதாக அறிவிக்கப்பட்டது. இதற்கு பல்வேறு அரசியல் கட்சிகளும், மக்கள் அமைப்புகளும் ஆதரவு தெரிவித்தன. இதனிடையே, பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா அமைப்பு தடை காரணமாக ஆர்எஸ்எஸ் பேரணி மற்றும் சமூக நல்லிணக்க மனித சங்கிலி ஆகியவற்றுக்கு காவல் துறை அனுமதி மறுத்தது.**



இந்நிலையில், அக்.11ம் தேதி சமூக நல்லிணக்க மனித சங்கிலி நடைபெறும் என்று சிபிஐ, சிபிஎம், விசிக, மதிமுக, காங்கிரஸ் உள்ளிட்ட 10க்கு மேற்பட்ட கட்சிகள், 13க்கு மேற்பட்ட அமைப்புகள் சார்பில் அறிவிக்கப்பட்டது.

அதன்படி சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் அக்.11 அன்று மாலை 500 இடங்களில் மனிதச் சங்கிலி நடைபெற்றது.

சென்னையில் நடைபெற்ற மனிதச் சங்கிலியில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி, தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரி, மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன், விசிக தலைவர் திருமாவளவன், மனித நேய மக்கள் கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லா, தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர் வேல்முருகன் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர். இதேபோல் தமிழகம் முழுவதும் போக்குவரத்துக்கு இடையூறின்றி அமைதியாக இந்த மனிதச் சங்கிலி நடைபெற்றது.

**தஞ்சாவூர்:** தஞ்சை மாவட்டத்தில் மூன்று இடங்களில் மனித சங்கிலி போராட்டம் நடைபெற்றது.

தஞ்சாவூரில் ஆற்றுப்பாலத்திலிருந்து ரயிலடி வரையிலும், வடக்கு பகுதியில் பழைய பேருந்து நிலையம் வரையிலும் மனித சங்கிலி போராட்டம் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் சின்னை பாண்டியன், தி.க. பொதுச் செயலாளர் இரா.ஜெயக்குமார், விடுதலை சிறுத்தை கட்சி மாவட்ட செயலாளர் சொக்கா ரவி ஆகியோர் தலைமையில் மனித சங்கிலி போராட்டம் நடைபெற்றது.

**மதுரை:** மதுரையில் நடைபெற்ற சமூக நல்லிணக்க மனித சங்கிலி போராட்டத்தில், மார்க்சிஸ்ட் கட்சியின் மாநகர் மாவட்ட செயலாளர் மு.கணேசன் தலைமை ஏற்க மார்க்சிஸ்ட் கட்சியின் மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ். முருகன், காங்கிரஸ் மாநகர் மாவட்ட தலைவர் கார்த்திகேயன், விசிக கதிரவன், மதிமுக மாநகர் மாவட்ட செயலாளரும் மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மு.பூமிநாதன் , ஏஐடியூசி மாவட்ட செயலாளர் எம்.நந்தாசிங் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**மதுரை புறநகர்:** மதுரை புறநகர் யானைமலை ஒத்தக்கடை பேருந்து நிலையம் அருகே “சமூக நல்லிணக்க மனிதச் சங்கிலி” பேரணி நடைபெற்றது.

இதில், சி.பி.ஐ மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் காளிதாஸ், சி.பி.ஐ நகரச் செயலாளர் கார்த்திக் மற்றும் பல்வேறு கட்சிகள், இயக்கங்களின் நிர்வாகிகள் உள்பட ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

**திருமங்கலம்:** மதுரை திருமங்கலம் தேவர் சிலையில் தொடங்கி பேருந்து நிலையம் வரை நடைபெற்ற மனிதச் சங்கிலியில் அனைத்துக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இதில், சிபிஐ மாவட்டச் செயலர் முத்துவேல், காங்கிரஸ் தெற்கு மாவட்டத் தலைவர் பாண்டியன், மதிமுக தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயராமன், துணைச் செயலர் அனிதா பால்ராஜ், சிபிஎம் மாவட்டச் செயலர் ராஜேந்திரன், மாதர் சங்கத்தின் புறநகர் மாவட்ட பொறுப்புச் செயலாளர் நாகஜோதி, விசிக மாவட்டச் செயலர் இன்குலாப் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**செங்கல்பட்டு:** சமூக நல்லிணக்க மனித சங்கிலி போராட்டம் செங்கல்பட்டு மாவட்ட தலைநகரில் நடைபெற்றது இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கட்சியின் மாவட்ட செயலாளர் ஏ.ராஜ்குமார், மாவட்ட முன்னாள் செயலாளர் எல். மேகநாதன் மாவட்ட துணை செயலாளர் வி.வீராசாமி, இ.பாலாஜி, மாவட்ட பொருளாளர் சதீஷ் உள்ளிட்ட முன்னணி தோழர்கள் பங்கேற்றனர்.

**திண்டுக்கல்:** திண்டுக்கல் மாவட்டத்தில் திண்டுக்கல் மற்றும் பழனியில் நடைபெற்றது. மனித சங்கிலி போராட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி(சிபிஐ) சார்பாக இரண்டு மையங்களிலும் 200 க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்

**நெல்லை :** நெல்லையில் சமூக நல்லிணக்க மனித சங்கிலி பாளையங்கோட்டை பெரியார் சிலையிலிருந்து துவங்கி முருகன் குறிச்சி வரை மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் செ.லெட்சுமணன் தலைமையில் நமது தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர். மாவட்டத்தின் மற்ற பகுதிகளான வள்ளியூர் வி.கே.புரம் களக்காடு அம்பையிலும் மனித சங்கிலிப் போராட்டம் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

**திருப்பூர்:** திருப்பூர் மாவட்டம் உடுமலைப் பேட்டை நகரில் சமூக நல்லிணக்க மனித சங்கிலி இயக்கம் நடைபெற்றது.இந்த இயக்கத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வி.சௌந்தரராஜன், ரணதேவ், சி.சுப்பிரமணியம், கிருஷ்ணசாமி, திருமலைசாமி, செல்வராஜ், சித்ரா, ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர்,

தொடர்ச்சி 14ம் பக்கம்



இந்தியாவின் அரசியல் திசை வழியை நிர்ணயிக்க!
அக்டோபர் 14-18
ஆந்திரா - விஜயவாடாவில்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாடு
அக்டோபர் 14ல் மாபெரும் எழுச்சிப் பேரணி!

கட்சிக் கடிதம்

# பேரபாயத்தை உணர்வோம்! போர்க்குணமிக்கவர்களாக உயர்வோம்!







பேரன்புமிக்க தோழர்களே!

**நமது நாட்டை கவ்வியுள்ள வகுப்புவாத பேரபாயத்தை மற்ற எல்லோரைக் காட்டிலும் நாம் அதிகபட்சமாக அறிந்துள்ளோம் என்பது மிகைப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. நாம் நமது நாட்டின் மீதும், நமது மக்களின் மீதும் அளப்பரிய பற்றுள்ளவர்கள் என்பதனை எடுத்துக் கூற வேண்டியதில்லை.**

நாடுஎன்றால்நாட்டில்வாழும்மக்கள்இன்றிநாடுஇல்லை. மக்களின் வாழ்க்கை எவ்வாறு எல்லாம் சீரழிக்கப்பட்டு வருகின்றது என்பது குறித்து கவலைப்படுவது மட்டுமல்ல,

அம்மக்களின் வாழ்வாதாரம் காக்கப்பட வேண்டும் என்பதிலும், அவர்களின் வாழ்க்கைத் தரம் மேன்மேலும் மேம்பட வேண்டும் என்பதற்காகத்தான் இடையறாது களம் கண்டு வருகின்றோம்.

ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம், மறியல், நடைபயணம், சாலைமறியல் என்று ஜனநாயக முறையில், சட்டத்திற்கு உட்பட்டு நாம் நடத்திய இயக்கங்களை, நமது கிளை, இடைநிலை, மாவட்ட மற்றும் மாநில மாநாடுகளில் பட்டியலிட்டு பரிசீலித்த போது நமக்கே வியப்பாக உள்ளது.

இவ்வளவு போராட்டங்களை நடத்தியுள்ளோமா? என்று மலைக்கத் தோன்றுகிறது.

இவ்வாறு மலைக்கும் அளவிற்கு நாம் நடத்திய இயக்கங்கள் நமக்காக, நமது சொந்த நலனுக்காக நடத்தப்பட்டவை அல்ல.

மாறாக நமது நாட்டில் வாழும் கோடிக்கணக்கான தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், பெண்கள், மாணவர்கள், இளைஞர்கள் என அனைத்துப் பகுதி மக்களுக்காகவும் நடத்தியுள்ளோம்.

இத்தகைய மக்கள் இயக்கங்களை மேலும் மேலும் தீவிரப்படுத்திட வேண்டிய தேவை எழுந்துள்ளது.

**அனைத்துப் பகுதி மக்களையும் ஒன்றிணைத்து, அரசியல்படுத்தி, களம் காண, செய்வதன் மூலமே இன்று நாட்டிற்கு ஏற்பட்டுள்ள ஆபத்திலிருந்து காக்க முடியும் என்ற பேருண்மையை புரிந்து நாம் செயலாற்றிட முன்வர வேண்டும்.**

நமது கட்சியின் 24–வது பேராயம் அக்டோபர் திங்கள் 14 முதல் 18 முடிய ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் கூட உள்ளது.

இம் மாநாட்டில் முன்வைக்கப்படவுள்ள வரைவு அரசியல் தீர்மானம் அனைத்து தரப்பினராலும் வரவேற்கப்படுகின்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வகுப்புவாத பேராபத்தை நன்கு உணர்ந்து, அதனை வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் ஆட்சி அதிகாரத்திலிருந்து அகற்றிட வேண்டிய அவசியத்தை தனது அறிக்கையில் மிகத் தெளிவாக உணர்த்தியுள்ளது என்று பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களும், நண்பர்களும் வெளிப்படையாக மனம் விட்டு நம்மிடம் தெரிவிக்கின்றனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க அரசியல் தீர்மானத்தை நாம் நமது அகில இந்திய மாநாட்டில் விவாதித்து நிறைவேற்ற உள்ளோம்.

நாம் வகுப்புவாத பேரபாயம் குறித்து மிகத் தெளிவாக நாட்டு மக்களின் முன்னால் பகிரங்கமாக, ஆதாரபூர்வமாக எடுத்துக் கூறி வருகின்றோம்.

நமது கருத்துக்களுக்கு மக்களிடத்தில் நல்லதொரு வரவேற்பு உள்ளதை நம்மால் உணர முடிகிறது.

வகுப்புவாதத்தை எதிர்க்கக்கூடிய மதச்சார்பின்மை கொள்கையில் நம்பிக்கையுடைய நமது அரசியலமைப்புச் சட்டத்தை பாதுகாக்க வேண்டும் என்ற அக்கறையுடன் அனைத்து இடதுசாரி, ஜனநாயக சக்திகளும் ஓரணியில் திரள வேண்டும்; திரட்டப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

வகுப்புவாத ஆர்எஸ்எஸ்–பாஜக வை வரும் 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் தோற்கடிக்க வேண்டுமெனில் இத்தகைய ஒற்றுமை உணர்வு பூர்வமாக அமைந்திட வேண்டும்.

இவரும் வேண்டாம்; அவரும் வேண்டாம், மூன்றாவதாக ஒரு அணியை உருவாக்கலாம் என்று சிலர் பேசிவருவது, எதார்த்த நிலைக்கு புறம்பானதாகும்.

பாஜகவுடன் நீண்ட பயணம் மேற்கொண்ட பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ்குமார் அங்கிருந்து விலகியது மட்டுமல்ல, கம்யூனிஸ்ட்கள் மற்றும் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் அணி சேர்ந்து ஆட்சியில் தொடர்வது மட்டுமல்ல, அகில இந்திய தலைவர்களையும், மாநில கட்சி தலைவர்களையும் சந்தித்து, ஓர் ஒன்றுபட்ட மாற்று அணிக்கு உகந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

ஓர் பலம் பொருந்திய, சக்திவாய்ந்த அணியை உருவாக்க வேண்டும் என்பதுதான் நமது கட்சியின் அரசியல் நிலைபாடாகும்.

அத்தகைய அணி உருவாக நாம் என்ன செய்ய வேண்டும்? நமது அமைப்புகள் என்ன செய்யவேண்டும்? நமது கட்சி உறுப்பினர்களும், நமது அணிகளும் என்ன செய்ய வேண்டும்? என்பது குறித்து எதிர்காலப் பணிகள் என்ற தலைப்பில் 16 கட்டளைகளைப் பிறப்பித்துள்ளது.

அவைகளை நாம் ஆழ்ந்து படித்து, உணர்ந்து செயல்படுத்திட, நடைமுறைப்படுத்திட ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அவற்றுள் சிலவற்றை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

பல லட்சக்கணக்கான மக்களுக்கு, சுவர்களும், தலைக்குமேல் ஒரு கூரையும் கிடைக்காமல் வாடுகிறார்கள். கிராமப்புறங்களிலும், நகர்புற மற்றும் நகரப் பகுதிகளிலும் உள்ள இத்தகைய தொழிலாளர்களை அணிதிரட்டி அவர்களுடைய கோரிக்கைகளை நாம் முன்னெடுக்க வேண்டும்.

தனியார் துறையிலும் இட ஒதுக்கீடு கொள்கையை அறிமுகப்படுத்தி சமூக நீதியையும், பிரதிநிதித்துவத்தையும் உறுதி செய்ய வேண்டும் என அரசுக்கு நாம் அதிக அழுத்தம் தர வேண்டும்.

சமூகப் பாதுகாப்பு, சமூக நீதிக்கான கோரிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். நல்ல ஊதியம் மற்றும் இதர உரிமைகளுக்கான நமது போராட்டங்கள் அவசியமானவை. அவற்றின் மூலமாக தொழிலாளர்களை அரசியல் படுத்துவது என்பது முன்னுரிமை பெறுகின்றது.

2024 பொதுத் தேர்தலில் நமது நாட்டின் எதிர்காலத்திற்கும், அரசியலமைப்பிற்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்.

ஆட்சிப் பொறுப்பில் இருந்து ஆர்.எஸ்.எஸ்.–பா.ஜ.க. வை அகற்றுவது நமது முதலாவது இலக்காகும்.

ஆர்.எஸ்.எஸ்.–பா.ஜ.க.வின் பேரழிவு நடைமுறைகளை மக்களிடம் தோலுரித்து காட்ட எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டும்.

இதற்கான திட்டங்கள் மற்றும் உத்திகளை கட்சி தனித்தும், இதர மதச்சார்பற்ற, ஜனநாயக சக்திகளோடு இணைந்தும் வகுக்க வேண்டும்.

இந்தியாவிலுள்ள கம்யூனிஸ்ட் இயக்கத்தை மீண்டும் ஒற்றுமைப் படுத்துவதற்கான கோட்பாடு அடிப்படையில் எல்லா முயற்சிகளையும் கட்சி மேற்கொள்ளும்.

நாட்டின் அரசியல் சந்தித்து வரும் அபாயங்களை கவனத்திற்கொண்டு, இந்திய மக்களுடன் உள்ள நமது இணைப்பை உறுதி செய்ய வேண்டும்.

ஆர்.எஸ்.எஸ். – பா.ஜ.க. வலதுசாரி தாக்குதலை தோற்கடிக்க, எதிர்த்து நிற்க ஒரு முக்கியமான இடதுசாரி இருப்பு இந்த நாட்டிற்கு தேவைப்படுகிறது.

அந்த நோக்கத்திற்காக நாம் நமது கட்சியையும், இதர வர்க்க, வெகுஜன அரங்கங்களை வலிமைப்படுத்தியாக வேண்டும். அரசியல் ரீதியாக வகுப்புவாத எதேச்சதிகாரத்துக்கு எதிரான போராட்டத்தை இடதுசாரிகளுக்கும் – வலதுசாரிகளுக்கும் இடையிலான போராட்டமாக மாற்ற வேண்டுமானால் அதற்கு வலிமையுள்ள கட்சியை உருவாக்கும் வகையில் நமது நடவடிக்கைகள் அமைய வேண்டும்.

ஆர்.எஸ்.எஸ்.சின் சித்தாந்த ரீதியான சவால்களை இடதுசாரிகள் மட்டும்தான் எதிர்கொள்ள முடியும்.

நாம் இதற்கென போராட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும். நாட்டுக்கான ஆக்கபூர்வமான மாற்றுத் திட்டத்தை எடுத்துச் செல்ல ஒரு வலிமையான இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இந்தக் காலத்தினுடைய தேவையாக அமைந்திருக்கிறது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்

என நமது வரைவு அரசியல் தீர்மானம் வலியுறுத்துவதை, நாம் மிக கவனமாக கொண்டு அவற்றினை நடைமுறைப்படுத்திட, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தற்போதைய தேவை என்பது மிக வலிமையான இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்பதே ஆகும்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை பலப்படுத்திட வேண்டிய அவசியத்தை நாம் அனைவரும் ஒருசேர ஏற்கின்றோம்.

ஏற்பது மட்டும் போதுமா? அதனை செயல்படுத்திட, செயல் வடிவமாக்க என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து நமது மாநிலக் குழு மிக முக்கியமான முடிவுகளை மேற்கொண்டது.

மீண்டும் அதனை நினைவூட்ட வேண்டிய அவசியம் உள்ளது.

நமது அமைப்புகளின் மாநாடுகளை நடத்திட கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் நடைபெற்ற மாநிலக் குழுவில் முடிவு செய்தோம்.

அம்மாநிலக் குழுக் கூட்டத்தில் மாநாடுகளை எவ்வாறு நடத்திட வேண்டும்? என்று முடிவு செய்து, பிரசுரம் வெளியிட்டு அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டது.

குறிப்பாக கட்சியின் அடிப்படை அமைப்புகளான, மக்களுடன் நேரடித் தொடர்பில் உள்ள அமைப்பான கிளை மாநாடுகளில் கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொரு தோழருக்கும் வேலைப் பிரிவினையை செய்து, பொறுப்பளிக்க வேண்டும் என்று முடிவு செய்தோம்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பலப் பட வேண்டுமெனில், கட்சி முன்னைக் காட்டிலும் பலம் பொருந்திய அமைப்பாக

தொடர்ச்சி 3ம் பக்கம்



- மு.வீரபாண்டியன்

# மதச்சார்பின்மை... வெறும் சொல்லல்ல!



**மதச்சார்பின்மை எனும் சொல்லை இந்திய அரசியல் சட்டத்தில் இருந்து நீக்க வேண்டுமென சிலர் நீதிமன்றத்தை நாடியிருக்கிறார்கள்.**

ஆனால் பலமுறை உச்சநீதிமன்றமே பல வழக்குகளில் அரசியல் சாசன அடிப்படையை தகர்க்கக் கூடாது என்று தீர்ப்பளித்து உள்ளது. கேசவ பாரதி வழக்கு உட்பட.

சட்டப் பிரிவு 368 மதச்சார்பின்மையை உறுதிப்படுத்துகிறது. நாடாளுமன்றமே நினைத்தாலும் இத்தகைய அடிப்படைகளை தகர்க்கக் கூடாது என்கிறது நீதிமன்றம். சட்டமும் இதுதான்.

இந்தியா தனது நீண்ட நெடிய வரலாற்று வழியில் மதச்சார்பின்மையை பேணி வருகிறது. இந்திய அரசியல் சட்டமும் கூட இதை உறுதிப்படுத்துகிறது.

இந்தியாவில் பல்வேறு மதங்கள் தோன்றி தழைத்திருக்கும். எனினும் இந்தியாவிற்கென்று ஒரு மதம் கிடையாது. இந்தியாவில் பல மதங்கள் தழைத்திருந்தாலும் இந்தியா எந்த ஒரு மதத்தையும் சார்ந்ததல்ல. மதச்சார்பின்மையின் மகத்தான உச்சம் இது.

**பெரும்பான்மையுடன் இசைந்து போவதுதான் உலக இயல்பு என்பவர்களும் உண்டு. எனினும் பெரும்பான்மைக்கு என்ன நியதியோ, அது சிறுபான்மைக்கும் உண்டு என்பதுதான் இந்தியா. உண்மையில் உலகின் மகத்தான வியப்பு இது.**

அரசியல் சட்டம், ஆட்சி அதிகாரம் கூட அப்படிதான். சட்டத்தின் முன் அனைத்தும் சமம். சட்டப்படிதான் இங்கு மதங்கள் கூட இயங்க முடியும். இங்கு மதங்கள் சட்டத்திற்கு மேற்பட்டதல்ல.

ஆட்சி அதிகாரம் கூட எந்த மதமும் சாராதிருப்பதுதான். அனைத்து மதங்களையும் சார்ந்திருப்பதல்ல மதச்சார்பின்மை. எந்த மதத்தையும் சாராது இருப்பதே மதச்சார்பின்மை.

சோமநாதர் ஆலயம் புதுப்பிக்கப்பட்ட விழாவின் போது நேரு அளித்த விளக்கமே இது. அப்போதே நேரு இந்து விரோதியாக சித்தரிக்கப்பட்டார். ஆனால் தனது வாழ்நாளில் இந்து மதத்திற்கு எதிராகவோ, இந்துக்களுக்கு எதிராகவோ ஒரு வெறுப்புச் சொல்லையும் உதிர்க்காதவர் நேரு.

கங்கையில், காசியில் இந்துக்களின் புனித நீராடலை இது ஓர் உற்சாகத் திருவிழா என்றார். அஜந்தாவில், எல்லோராவில், இந்தியாவின் பிற பகுதிகளில் இந்து ஆலயச் சிற்பங்களைக் கண்டு அவர் வியந்தார்.

இந்தியாவில் மதச்சார்பின்மை தழைத்து வியாபித்தாலும் இதன் திறவுகோல் ஐரோப்பாதான். 17ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் கெப்ளர், புரூனே, கலிலியோ என மாபெரும் அறிவியலாளர்கள் இதனை துவக்கி வைத்தனர். கடவுள், மதம், பிரபஞ்சம் குறித்த கேள்விகளை அவர்கள் எழுப்பினர். ஐரோப்பாவில் மதமும், அரசும் இணைந்து இருந்ததை எதிர்த்தனர். அரசுடன் மதம் கலப்பதை எதிர்த்து அரசு, மதம் சாரக்கூடாது என்றனர். இதுதான் மதச்சார்பின்மையின் துவக்கமானது. மானுடச் சிந்தனையின் மகத்தான திறவு இது.

கடவுள், மதம், பேரண்டம் குறித்த புதியக் கருத்துக்கள் பிறப்பெடுத்தன. அதிர்ச்சியும், ஆச்சர்யமும் கலந்த புதிய யுகமாக அது கருதப்பட்டது. எனினும் கடவுள், மதம் எனும் போது பெரும் மேதைகளும், அறிவியல் அறிஞர்களும் கூட தடுமாறினார்கள்.

பொருண்மைக் கோட்டை உருவாக்கிய ஐசக் நியூட்டன் கூட கடவுள், மதம் எனும் போது தடுமாறினார். டார்வின் பரிணாம கோட்பாட்டை உருவாக்கிய போது இது கடவுள் மீது விழுந்த பலத்த அடி என்றார் கார்ல் மார்க்ஸ். இதனை டார்வின் அவ்வளவாக ரசிக்கவில்லை. கடவுள் குறித்த தடுமாற்றமே காரணம்.

பின்னர் தாமஸ் பெயின், வால்டேர், ரூசோ என மனித உரிமை பிரகடனங்கள் பிறந்தன. மதம், கடவுள் குறித்த விவாதங்கள் மீண்டும் எழுந்தன. இருவித கருத்துக்கள் இதுவரை முட்டி மோதுகின்றன.

நாம் சமூக அறிவியலின் பக்கம் நின்று மதம் மற்றும் மத அடிப்படைவாதிகளின் கருத்தியலை எதிர்கொள்கிறோம், அணுகுகிறோம், முரண் கொள்கிறோம், போராடுகிறோம்.

நமது கருத்தியலை எதிர்கொள்ள முடியாமல் நாம் பற்றி நிற்கும் கருத்தியல் பின்னால் ஒளிந்து மதங்களை முன்னெடுக்கும் முயற்சியும் தொடர்கிறது. இந்து அறிவியல், இஸ்லாம் அறிவியல் என்பதெல்லாம் இந்த வகையே.

தற்போது முன்னெப்போதும் இல்லாத வகையில் மதம் என்று பேசினாலேயே கோபப்படுகிறார்கள். அதிலும் இந்து மதம் குறித்த எத்தகைய விமர்சனக் கருத்துக்களும், இந்து விரோதமாக சித்தரிக்கிறார்கள். பதற்றமும், வெறுப்பும் தூண்டப்படுகிறது. இவையாவும் அரசியல் ஆக்கப்படுகிறது.

நீண்ட காலமாக இப்புவியில் மதத்தின் பெயரால் இரத்தம் கசிந்தோடுகிறது. இதனால் மனித ஆற்றல் சுருங்குகிறது. மதத்திற்குள் அடங்கும் மனிதன் தன்னை குறுக்கிக் கொள்கிறான். ஆற்றல் வீணாகிறது.

மனிதன் இயற்கையோடுதான் போராட வேண்டும். ஆனால் மதம் இதனை திசை திருப்பி மனிதன், மனிதனோடு போராட தூண்டுகிறது. இயற்கையோடு இசைவது, இயற்கையை தன்வயப்படுத்துவது, இயற்கையை அழிவின்றி வெற்றி கொள்வது என மனிதன் போராட வேண்டி உள்ளது.

எனவே மனிதனின் நலன் பொருட்டு மதத்தின் மீது நிகழ்கால கேள்வி அவசியப்படுகிறது. அது மதமா? நல்லிணக்கமா? என்பதுதான்.

நல்லிணக்கம் மதச்சார்பின்மையால் தூண்டப்படுவது. இது அறிவுச் சார்ந்தது மட்டுமல்ல, பண்பாடு சார்ந்ததும் கூட. ஒன்றை, ஒன்று ஏற்காவிட்டாலும், ஒன்றை பிரிதொன்று மதிப்பது. ஒன்றுக்கொன்று பாதுகாப்பாக இருப்பது. இதுதான் மதச்சார்பின்மை மற்றும் நல்லிணக்கத்தின் மையம்.

இதனை வலியுறுத்திதான் அக்டோபர் 11ல் நடைபெற்ற மாபெரும் மனிதச் சங்கிலி இயக்கம். நாம் அனைவரும் கரம் கோர்த்து கடமை ஆற்றியுள்ளோம்!

---

02ம் பக்கத் தொடர்ச்சி



முன்னெடுக்க வேண்டுமெனில் கட்சி மக்களின் கட்சியாக மாற்றப்படவேண்டும்.

மக்கள் என்பவர்கள் யார்? நாம் வசிக்கும், வாழும் பகுதியில் நம்மோடு உள்ள தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், ஆசிரியர்கள், அரசுப் பணியாளர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் என்ற பெரும் பட்டாளத்துடன்தான் நாம் வாழ்ந்து வருகின்றோம்.

இவர்களுக்கும் – நமக்குமான தொடர்புகள் என்ன? எவ்வாறு உள்ளது? என்பது குறித்து நாம் ஆழ்ந்து யோசிக்க வேண்டாமா?

இம்மக்களை அணிதிரட்டாமல், அரசியல் படுத்தாமல் நாம் எத்தகைய மாற்றத்தை உருவாக்க முடியும்? என்று கருதுகின்றோம்.

இவர்கள் அனைவருமே ஒன்றிய அரசால் பழிவாங்கப்படுகின்றார்கள். இவர்களின் உழைப்பை, ஆற்றலை, மோடி அரசாங்கம் ஈவிரக்கமின்றி பல்வேறு வழிகளிலும் சுரண்டிக் கொழுக்கின்றது.

மக்கள் அனைவரையும் இரக்கமற்ற முறையில் சுரண்டி, அவர்களது இரத்தத்தை உறிஞ்சி எடுத்து, அவைகள் அனைத்தையும் விரல் விட்டு எண்ணக்கூடிய குறிப்பிட்ட நபர்களுக்கு வழங்கி வருகின்றது.

பெரும் உள்நாட்டு, வெளிநாட்டு முதலாளி மார்களின் லாபத்தை ஒவ்வொரு நொடிப்பொழுதும் அதிகரித்துக் கொண்டே உள்ளது என்கிற பேருண்மையை மக்களுக்கு உணர்த்த வேண்டாமா?

மக்களிடத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தாமல் உண்மைகளை அவர்களுக்கு புரிய வைக்காமல் நாம் மட்டும் என்ன செய்துவிட முடியும்?

மிக உன்னதமான லட்சியத்தை ஏற்றுக்கொண்டு, அதை வெற்றிபெற வேண்டும் என்பதற்காக இரவு பகல் பாராது, வெயில் மழை என்று கருதாது, பசி பட்டினி குறித்து கவலை கொள்ளாமல், ஓய்வின்றி உறக்கமின்றி உழைத்து வருகின்றோம் என்பதில் நமக்கு எவ்வித ஐயப்பாடும் இல்லை.

நாம் ஒவ்வொருவரும் இலட்சியவாதிகள். எதனையும் எதிர்பார்க்காமல் பாடுபடுகின்ற, அர்ப்பணிப்பு உணர்வுடன், உணர்வுபூர்வமாக, தன்னலமற்ற சேவகர்கள் என்பதில் மாறுபட்ட கருத்திற்கு இடமில்லை.

நமது சேவையை, அர்ப்பணிப்பை, தியாகத்தை அனைவரும் போற்றுகின்றார்கள்; பாராட்டவும் செய்கின்றார்கள்.

அத்தகைய போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்கும் உரிய நாம், நமது உழைப்பை மேலும் செம்மையாக்க, செழுமைபடுத்திட, ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம் அல்லவா!

நமது கட்சி உறுப்பினர்களை அரசியல் ரீதியாக, அமைப்பு ரீதியாக செயல்படச் செய்வதன் மூலம் அவர்களை வளர்த்தெடுக்கும் அரிய பணிகளை நாம் மேற்கொள்ள வேண்டாமா?

நாம் ஒவ்வொரு ஒன்றியத்திலும் புதிய புதிய கட்சிக் கிளைகளை உருவாக்க வேண்டும்.

ஒவ்வொரு கிராமப்புற ஊராட்சிகள் தோறும் நமது கட்சிக் கிளைகள் அமைந்திடல் வேண்டும்.

பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள வார்டுகள் தோறும் கட்சிக் கிளை அமைப்புகளை அமைத்திடல் வேண்டும்.

இவை அமைய வேண்டுமெனில், இவை மூலம் புதிய கிளைகள் உருவாக வேண்டுமெனில், நமது கட்சி முன்னைக் காட்டிலும் பலம் வாய்ந்த கட்சியாக உருவாக வேண்டுமெனில், நாம் அனைவரும் அதற்கான முறையில் முனைப்பாக செயல்பட வேண்டுமெனில், நாம் மேற்கொள்ள வேண்டிய முதல் கடமை என்ன என்பதை நன்கறிந்து செயல்படுத்திட முன்வரவேண்டும்.

உண்மையில் நமது கட்சி பலப்பட வேண்டுமெனில், வர்க்க, வெகுஜன அமைப்புகள் பலப்பட வேண்டும்.

இந்த யதார்த்தமான உண்மையை ஏற்றுக் கொள்கிறோம். நாம் அனைவரும் வர்க்க, வெகுஜன அமைப்புகளை காலதாமதமின்றி, கிளைகள் தோறும் உருவாக்க, ஒவ்வொரு கட்சி உறுப்பினருக்கும் பொறுப்புகள் வழங்கவேண்டும்.

பொறுப்புகளை ஏற்றுக் கொண்ட தோழர்கள் அதுதான் தனது கட்சிப் பணிகள் என்பதனை உணர்ந்து செயல்பட வேண்டும்.

வர்க்க, வெகுஜன அமைப்புகளின் பலத்தை பொறுத்தே கட்சியின் பலம் அமையும்.

அஸ்திவாரம் இன்றி கட்டிடம் இல்லை என்பதுபோல், கம்யூனிஸ்ட் கட்சியின் அஸ்திவாரமாக உள்ளது வர்க்க, வெகுஜன அமைப்புகள் ஆகும்.

அத்தகைய அமைப்புகளை உருவாக்க, அமைக்க, பலப்படுத்திட கட்சி உறுப்பினர்களுக்கு பொறுப்புகள் வழங்க வேண்டுமென்ற மாநிலக்குழு முடிவை பல்வேறு மாவட்டங்களில் நிறைவேற்றி உள்ளது வரவேற்கத்தக்கது.

தனது பங்களிப்பை நிறைவேற்றாத மாவட்டங்கள் தாமதிக்காமல் இடைநிலை கூட்டங்களை நடத்தி, திட்டமிட்டு இடைநிலைக் குழு உறுப்பினர்களுக்கு கிளை வாரியாக பொறுப்பு அளித்திடல் வேண்டும்.

கிளைக் கூட்டங்களை நடத்தி உறுப்பினர்களுக்கு வர்க்க, வெகுஜன அமைப்புகள் வாரியாகவும், ஜனசக்தி, தாமரை பிரசுர விற்பனை உள்ளிட்டவைகளுக்கும் தனித்தனி பொறுப்பளித்தல் வேண்டும்.

உறுப்பினர்களுக்கு பொறுப்பு அளிப்பது மட்டுமல்ல, கால வரம்பு நிர்ணயம் செய்து, குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு உள்ளாக அவரவர்களுக்கு அளிக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்திட வேண்டும்.

இத்தகைய பணிகள் கடினமானதல்ல. சுலபமாக நிறைவேற்றக் கூடிய ஒன்றுதான் என்பதனை செயல்படுத்தும் போது நம்மால் உணரமுடியும்.

தோழர்களே நாட்டை சூழ்ந்துள்ள பாசிசம் என்கிற அபாயத்தை உணர்ந்து நாம் அச்சப்படத் தேவை இல்லை.

அதனை முளையிலேயே கிள்ளி எறிய முடியும்; எறிய வேண்டும்.

அதற்கான பணிகளை தொய்வின்றி முனைப்புடன் செயல்படுத்துவோம்.

ஒவ்வொரு கட்சி உறுப்பினரும், ஊழியரும் போர்க்குணம் மிக்கவர்களாக செயல்படுவோம்!

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

தோழமைமிக்க

இரா. முத்தரசன்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 28

## மோடி ஆட்சியில் 5.6 கோடி புதிய ஏழைகள்

உலக வங்கி அண்மையில் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கை, 2020க்குப்பின் உலகம் முழுவதும் ஏழு கோடி மக்கள் வறுமைக்குள் தள்ளப்பட்டு இருக்கிறார்கள் என்று கூறுகிறது.

இதில் 80 சதவீதம் பேர், அதாவது சுமார் 5.6 கோடி மக்கள் இந்தியாவில் வாழ்பவர்கள். இந்திய அரசு அதிகாரபூர்வமான புள்ளி விவரத்தை வெளியிடவில்லை என கவலை தெரிவித்த உலக வங்கி, உண்மையில் புதிதாக வறுமைக்குள் தள்ளப்பட்ட இந்தியர்களின் எண்ணிக்கை இதைவிட அதிகம் என்றும் கூறுகிறது.

ஏற்கனவே உலகில் 63 கோடிப்பேர் ஏழ்மையில் உழல்கிறார்கள். கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்பு வரை, உலகில் பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்கள் காரணமாக, வறுமையின் தீவிரம் சிறிது சிறிதாகக் குறைந்து வந்தது. இந்தப் பத்து ஆண்டுகளில் மீண்டும் உயரத் துவங்கியது.

இந்தியாவில் உள்ள ஆழ்நிலை ஏழைகள் உட்பட,மொத்த ஏழைகளின் எண்ணிக்கை 40 கோடி எனக் கணக்கிடப்பட்டது. உலகிலேயே அதிக எண்ணிக்கையில் ஏழைகளைக் கொண்ட இரண்டாவது நாடாக இந்தியா இருக்கிறது. மனித வளர்ச்சிக் குறியீடுகளின் அடிப்படையில் இந்தியா 131 வது இடத்தில் இருக்கிறது.

நாட்டில் உள்ள ஐந்து வயதுக்குட்பட்ட மொத்தக் குழந்தைகளில் மூன்றில் ஒரு பங்கினர், ஊட்டச்சத்து இல்லாமல் வளர்ச்சி குன்றியவர்கள். கேரளா, தமிழ்நாடு போன்ற சுகாதாரத் துறையில் வளர்ச்சி கண்ட மாநிலங்கள் இல்லாவிட்டால் இந்த விகிதம் இன்னும் மோசமானதாக இருக்கும். மக்கள்தொகையில் இளைஞர்களின் எண்ணிக்கை மற்ற நாடுகளைவிட அதிகமாக இருந்தாலும், வேலையின்மை அவர்களை உயிரோடு கொன்று கொண்டிருக்கிறது.

உலகளாவிய வறுமையைக் கணக்கிடுகையில், அதன் முடிகளையே மாற்றியமைக்கும் அளவுக்கு, இந்தியா மிக அதிக ஏழைகளைக் கொண்டது. ஆனால் மோடி அரசு வந்ததிலிருந்து, வறுமை குறித்த தரவுகளை வெளியிடுவதையே நிறுத்தப் பட்டு விட்டது. பல்வேறு விபரங்களை ஆய்வு செய்து தரவுகளை வெளியிடுவதற்காகவே "நேஷனல் சாம்ப்பிள் சர்வே ஆஃப் இந்தியா" என்ற அமைப்பை அரசு வைத்திருந்தாலும், அதன் வாய் மூடித் தைக்கப்பட்டு விட்டது.

உத்தியோகபூர்வ தரவு இல்லாததால், இந்தியப் பொருளாதாரத்தை கண்காணிக்கும் மையம் (CMIE) மற்றும் நுகர்வோர்

வீட்டுக் கணக்கெடுப்பின் முப்பிரிகை (CPHS) ஆகியவற்றின் ஆய்வை எடுத்துக் கொண்டதாக குறிப்பிட்டது உலக வங்கி. ஆக ஒன்றிய அரசு தரவுகளைத் தராவிட்டாலும், கைபடாமல் கறக்கும் கலையை ஏகாதிபத்தியம் கற்றிருக்கிறது.

"2020ம் ஆண்டு ஒரு திருப்பு முனை ஆகும். உலகத்தின் படு ஏழைகள், பெருந்தொற்றை எதிர்கொள்ள உயிர்களையும், தமது அற்ப சொற்ப கையிருப்பையும் இழந்து மிகக் கொடூரமான விலைதர நேர்ந்தது. ஆனால் பெரு முதலாளிகளான கார்ப்பரேட்டுகள் லாபத்தை முன் எப்போதும் இல்லாத வகையில் அள்ளி குவித்தார்கள். எவ்வளவு வேகமாக அவர்கள் லாபம் உயர்ந்ததோ அவ்வளவு அழுத்தமாக சாமானிய மக்கள் நசுக்கப்பட்டார்கள்.

வறுமையில் தள்ளப்படுவது 2030 வரை தொடரும் என ஆய்வுகள் கூறுகின்றன. விரைவில் ஆழ் வறுமையில் இருந்து மக்களை மீட்க வேண்டுமானால் மூன்று பரிந்துரைகளையும் அதே நிறுவனம் வெளியிட்டு இருக்கிறது.

ஒன்று, சாதாரண மக்களின் வாழ்வாதாரத்துக்கு போதிய பணத்தை மானியம் உள்ளிட்ட எந்த வகையிலாவது, அவர்கள் கையில் கிடைக்க செய்து, சந்தையையும் சுறுசுறுப்படைய வைப்பது.

இரண்டு, நீண்டகால மேம்பாட்டு திட்டங்களை உருவாக்கி அரசுகள் பொது நிதியை முதலீடு செய்வது,

மூன்று, ஏழைகளை மேலும் காயப்படுத்தாமல் செல்வ வளம் மிக்க அவர்களிடம் வரியை அதிகரித்து வசூலிப்பது.

நேர் எதிராக மோடி அரசு நடந்து கொள்கிறது. பெரும் கார்ப்பரேட்டுகளுக்கு வரிச் சலுகை, கடன் தள்ளுபடி, ஏறத்தாழ இலவசமாக பொதுத்துறை நிறுவனங்கள் என அள்ளித் தரப்படும் போது, சாமானியர்களுக்கு தேவைப்படும் பொருட்கள் மீது கூட 28% எனும் அநியாய வரி விதிக்கப்படுகிறது.

இந்த லட்சணத்தில் 2047ல் முழு வளர்ச்சியடைந்த இந்தியா என்ற வெற்று முழக்கத்தை வெட்கமில்லாமல் பாஜக முழங்குகிறது. ஒரு தடவை வாய்ப்பு கொடுத்தாலே இந்தியாவை புரட்டி விடுவதாக இவர்கள் பேசினார்கள். 2020இல் வல்லரசு ஆகிவிடும் என்றார்கள்.

இந்த திசைவழியில் மோடி அரசு தொடருமானால், ஏழை எளிய மக்கள் வறுமைப் படுகுழியில் இன்னும் தள்ளப்படுவார்கள். வளர்ச்சி மட்டும் அம்பானி, அதானிகளுக்கு போய்ச்சேரும்.

---

குறுவைநெல் அரசு கொள்முதலில் விவசாயிகளுக்கு மனரீதியான பிரச்சனைகள்

# முதல்வர் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை

**தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது:**

மேட்டூர் அணை திறப்பில் ஒரு புதிய வரலாறாக மே 24-ல் திறந்து, தமிழக நீர்வள உயர்வு, குறுவை நெல் சாகுபடி உள்ளிட்ட வேளாண் பயிர்கள் செழிப்பிற்கும், உற்பத்தி உயர்வுக்கும் காரணமான தங்களின் சிறப்பு நடவடிக்கையை பாராட்டுகிறோம்.

இந்த நிலையில் குறுவை அறுவடை மற்றும் இளம் சம்பா: தாளடி நாற்றுக்கள் வளிமண்டல சுழற்சி தொடர் மழையால் பாதித்து சில இடங்களில் அழிந்தும் உள்ளன. தங்களின் ஆலோசனையின் பேரில் வேளாண் துறை கணக்கீடு செய்து வருவதை பாராட்டுகிறோம்.

1) மழையினால் தப்பியதை அறுவடை செய்வதற்கு அரசு வேளாண் பொறியியல் துறையில் போதுமான தகுதியான இயந்திரங்கள் இல்லை.
2) அறுவடையாகும் நெல் ஈரப்பதம் 17 க்கு மேல் உள்ளதால் விற்பனை செய்ய முடியவில்லை.
3) காய வைக்கும் நெல்லோடு அவர்களும் சேர்ந்து காய்ந்து வந்து விற்பனை செய்தால் விற்பனைத் தொகை விவசாயிகளின் வங்கி கணக்கில் கிடைப்பதற்கு 20 நாட்களுக்கு மேலாகிறது.

இவ்வளவு தடைகளையும் தாண்ட வேண்டிய நிலையில் இருக்கும் ஒரு விவசாயி பயிர் வளர்க்கும் சிரமத்தை விட போட்ட பணத்தை எடுப்பதற்கு படும் துன்பதுயர் அடையும் ஒரு விவசாயி என்ன மனநிலையில் இருப்பார் என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம். இந்த நிலைகளின் மாறுதலுக்காக தான் தங்களின் சிறப்பு நடவடிக்கை வேண்டும் என நம்பி இதை எழுதி இருக்கிறோம்.

1) ரபி பருவம், கரீப் பருவம் கால அளவு என்பது தமிழ்நாட்டுக்கு பொருத்தமில்லை (என்பதை தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கடந்த ஆறு ஆண்டுகளாக அரசுக்கு எழுதியுள்ளது). ரபி பிற்பகுதி, கரீப் பிற்பகுதி ஒவ்வொரு ஆண்டும் பாதித்து வருகிறது. சிறப்பு விதிவிலக்குபெற்று தமிழ்நாட்டுக்கென்று தனி பருவகால அளவு தீர்மானித்திட வேண்டும். அதன் ஒரு அங்கமாக ஈரப்பதம் 21 சதம் வரை அனுமதிக்கும் நிரந்தர உத்தரவை பெற்றிட வேண்டும்.
2) எங்கள் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் கடந்த மூன்றாண்டு கோரிக்கையாக வைத்து வருகிற மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்களிடம் கடந்தாண்டு நேரடியாக நாங்கள் கூறி இருந்த நெல் உலர் இயந்திரங்களை டி.என்.சி.எஸ் மூலம் அமைச்சர் அவர்கள் வாங்கி பரீட்ச்சார்த்தமாக விவசாயிகள் முன் ஆய்வு செய்யப்பட்டு அந்த நிலையோடு நிற்கிறது. இந்த இயந்திரங்களைஅரவை மில்களில் வைத்தால் கூட 21 சதம் வரை ஈரத்துடன் உள்ள நெல்லை கொள்முதல் செய்து உடனுக்குடன் அரவை மில்லிற்கு அனுப்பிவைத்தால் அங்கேயே ஈரத்தை விலக்கி உடன் அரவை மேற்கொள்ளலாம்.

மேலும் உலர் இயந்திரங்களை கொள்முதல் மையங்களில் வைத்தால்கூட விரும்பும் விவசாயிகள் இதை பயன்படுத்தி 21 சதம் என்பதை குறைத்து விற்பனை செய்து கொள்ள இடைக்கால வாய்ப்பாக இருக்கும்.

3) விவசாயிகளின் வங்கி கணக்கில் நெல் விற்பனை தொகையை ஐந்து நாட்களுக்குள் அனுப்பி வைத்திட உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும்.
4) சில மையங்களில் கூடுதல் மூட்டைகள் தேங்கி இருப்பதால், மேலும் வரும் நெல்லை எடைபோட தடைபடுகிறது. இந்த மூட்டைகளை உடனுக்குடன் அனுப்பிட. சென்னை கூட்டத்தில் அமைச்சர் அவர்களிடம் நாங்கள் கூறியபடி, விவசாயிகளின் டிராக்டர்களில் மூட்டைகளை ஏற்றி அனுப்புவதற்கு வாடகைக்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.
5) சம்பாஅறுவடையாகும் காலங்களில் கூடுதல் இயந்திரங்களை வேளாண் பொறியியல் துறை வழங்கிட ஏதுவாக காலத்தில் நிதி ஒதுக்கீடு செய்து புதிய இயந்திரங்கள் வாங்கிட வேண்டும் என பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு பி.எஸ்.மாசிலாமணி கடிதத்தில் கூறியுள்ளார்.

---

# ஒன்றிய அரசின் இந்தி திணிப்பு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

**இந்திய ஒன்றியத்தில் இணைந்துள்ள மாநில மக்களின் பண்பாடு, கலாச்சாரம், பழக்க வழக்கங்கள், உணவு, உடைகளில் பல்வேறு வகையான வேறுபாடுகள் நிலவுகின்ற போதிலும் இந்திய ஒன்றிய ஒற்றுமையின் அச்சாணியாக 'வேற்றுமையில் ஒற்றுமை பேணும் பண்பு' தனித்துவம் கொண்டதாக விளங்கி வருகிறது.**

இதற்கு எதிராக ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே கலாச்சாரம், ஒரே தேர்தல் என்று பாஜக ஒன்றிய அரசும், ஆர்எஸ்எஸ் மற்றும் அதன் சார்பு அமைப்புகளும் முழங்கிவருவது நாட்டின் ஒற்றுமைக்கு பேராபத்து விளைவிக்கும் விபரீத செயலாகும்.

இதன் தொடர்ச்சியாக, அலுவல் மொழிக்கான நாடாளுமன்ற நிலைக்குழு ஒன்றிய அரசின் உயர்கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், எய்ம்ஸ் உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள் அனைத்திலும் ஆங்கில மொழியை கைவிட்டு இனி இந்தி மொழி மட்டுமே பயன்படுத்த வேண்டும்" என பரிந்துரை செய்துள்ளது. இந்தப் பரிந்துரை உள்ளடங்கிய அலுவல் மொழிக்குழுவின் அறிக்கையை ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர், குடியரசுத் தலைவரிடம் வழங்கியுள்ளார்.

அரசியல் சாசனத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகள் அனைத்தும் ஒன்றிய அரசின் அலுவல் மொழியாக ஏற்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மாநில மக்களால் வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில், அதனை நிராகரித்து 'இந்தி மொழியை திணிக்க முயற்சிப்பதை கைவிட வேண்டும்'. கடந்த காலத்தில் இந்தி திணிப்புக்கு எதிராக தமிழ்நாடே கொந்தளித்து எதிர்ப்பு தெரிவித்த போது, அப்போதைய பிரதமர் ஜவஹர்லால் நேரு, இந்தி பேசாத மாநிலங்கள் விரும்புகிற காலம் வரை ஆங்கிலம் அலுவல் மொழியாகவும், இணைப்பு மொழியாகவும் நீடிக்கும் என நாடாளுமன்றத்தில் அளித்த உறுதிமொழிக்கு எதிரானதாகும்.


இந்தி மொழித் திணிப்பின் மூலம் மாநில மக்களின் 'தாய் மொழி' உரிமையை அழிக்க நினைக்கும் ஒன்றிய அரசின் நடவடிக்கைகளை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், அரசியல் அமைப்புச் சட்டம் அங்கீகரித்துள்ள 22 மொழிகளையும் ஒன்றிய அரசின் அலுவல் மொழியாக ஏற்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



- வஹிதா

# அருஞ்சொல்லின் கட்டுரைக்கு எமது பதில்!



ஒரு மெய்நிகர் சந்திப்பில், நான் ஆற்றிய உரையின் தொகுப்பு, ஜனசக்தியில் (28.09.2022 பதிப்பு) 'பாட்டாளி படிப்பு வட்டம்' கோர்பச்சேவ் அமைதி நாயகரா? அவல நாயகரா? என்ற தலைப்பில் நடத்திய ஒரு கட்டுரையாக வெளிவந்தது. அக் கட்டுரையை விமர்சித்து 'அருஞ்சொல்' என்ற இணைய இதழில் எஸ்.வி.ராஜதுரை ஒரு கட்டுரையை எழுதியுள்ளார்.

என்னுடைய பேச்சுகள், எழுத்துகள் பற்றிய விமர்சனங்கள் ஆக்கபூர்வமாகவும், உண்மைகள் அடங்கியதாகவும் இருப்பின் நான் எப்போதும் தலைவணங்கி ஏற்றுக் கொள்வேன்.

ஆனால், எஸ்.வி.ராஜதுரை என் கட்டுரையில் விவரப் பிழைகள் என்றும் அபத்தங்கள் என்றும் சுட்டிக் காட்டியுள்ளவற்றிற்கு விளக்கம் அளித்துத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியம் என்று உணர்கிறேன்.

'மய்யப்படுத்தப்பட்ட பொருளாதாரமா லெனினுடையது?' என்ற கேள்வியை முன்வைத்து, தோழர் ஸ்டாலின் ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்துதான் சோவியத் யூனியனின் மய்யப்படுத்தப்பட்ட பொருளாதாரம் தொடங்கியது என்கிறார் ராஜதுரை.

மேலும், சோவியத் ஒன்றியம் 1922 ஆம் ஆண்டில்தான் உருவாக்கப்பட்டது என்றும், அதற்கு முன் ரஷ்யாவில் மட்டுமே பாட்டாளி வர்க்க புரட்சிகர அரசாங்கம் நிறுவப்பட்டது என்றும், உள்நாட்டு போர் முடிவடைந்த பிறகு, நசிவுக்குள்ளாகி இருந்த பொருளாதாரத்தை வலிமை மிக்கதாக மாற்றுவதற்கு 1921 ஆம் ஆண்டு தோழர்.லெனின் கொண்டு வந்ததே 'புதிய பொருளாதாரக் கொள்கை' என்றும் கூறியிருக்கிறார்.

இதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், பல்வேறு சோவியத் ஒன்றியம் உருவாவதற்கான அனைத்து ஆக்கபூர்வமான ஒப்பந்தங்களும் 1920 மற்றும் 21 ஆம் ஆண்டுகளிலேயே கையெழுத்திடப்பட்ட வரலாற்று விவரங்களை ராஜதுரை இணைக்க மறந்து விட்டார். அதனால் தான் என்னுடைய பேச்சில் விவரப் பிழை அவருக்கு தோன்றியிருக்க கூடும்.

1922ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 30ஆம் தேதியில்தான் சோவியத் ஒன்றிய உருவாக்கத்திற்கான ஒப்பந்தம் (Treaty of creation of USSR) முதல் அனைத்து சோவியத் யூனியன் பேராயத்தில் அங்கீகரிக்கப்பட்டது. பேரபத்தான முதலாளித்துவ சூழலில், ரஷ்ய பேரரசின் கீழ் இருந்த அனைத்து குடியரசுகளையும் ஒன்றிணைத்து, ஒரு வலிமைமிக்க ஒன்றியத்தை உருவாக்க வேண்டியது, மிகவும் அவசியம் என்று போல்ஷவிக்குகள் எண்ணினார்கள்.

சோவியத் குடியரசுகளான பெல்லாரிஸ், உக்ரேன், ரஷ்யா மற்றும் டிரான்ஸ் காக்கேசியன் சம்மேளன நாடுகளோடு ஏற்பட்ட ஒற்றுமை ஒப்பந்தங்களின் அடிப்படையில்தான் 1922ல் சோவியத் யூனியன் உருவானது. 1920ஆம் ஆண்டு ரஷ்யாவிற்கும், உக்ரைனுக்கும் இடையிலான ஒப்பந்தமும், 1921ல் ரஷ்யாவிற்கும், பெலாரஸ் மற்றும் காக்காசிய குடியரசு நாடுகளுக்கும் இடையிலான ஒப்பந்தமும் கையெழுத்தாயின.

இந்த ஒற்றுமை ஒப்பந்தங்களின் அடிப்படையில்தான், ரஷ்ய சம்மேளன சோஷலிசக் குடியரசு, அனைத்து குடியரசுகளின் சர்வதேச பிரதிநிதியாகவும், அவர்களின் சார்பாக அரசியல் செயல்பாட்டிற்குரிய ஆவணங்களில் கையெழுத்திடும் உரிமை பெற்றது. மேலும், 'மக்கள் கமிஸார்' எனப்படும் அரசியல் அதிகாரமுடைய அமைச்சர்கள், பாதுகாப்பு, தேசிய பொருளாதாரம், அந்நிய வணிகம், நீதி, தொழிலாளர் துறை, ரயில்வே, தபால் தந்தி போன்ற துறைகளை மய்யப்படுத்தினர்.

இவை மட்டுமன்றி, ஒன்றியத்தின் மற்ற சோஷலிசக் குடியரசுகளையும் உள்ளடக்கி மையப்படுத்தப்பட்ட ஆட்சி அதிகாரம் செலுத்தினர். எனவேதான், 1922 ஆம் ஆண்டிலேயே, சோவியத் யூனியன் அங்கீகாரத்திற்கு முன்பே, ஒப்பந்தங்களின் அடிப்படையில் மையப்படுத்தப்பட்ட நிர்வாகமும், பொருளாதாரமும் இயங்கத் துவங்கி விட்டன.

"மேற்குறிப்பிட்ட பதிவுகளின்படி மையப்படுத்தப்பட்ட பொருளாதாரமா லெனின் உடையது?" என்கிற வினாவிற்கான தெளிவான விடை "ஆம்" மையப்படுத்தப்பட்ட பொருளாதாரம் என்பதுதான். இதன் அடிப்படையில் லெனின் கொண்டு வந்த பொருளாதாரத் திட்டங்கள மையப்படுத்தப்பட்டவைதான்.

1921 ஆம் ஆண்டு கேஸ்பிளான் (GOS-PLAN) என்ற மையப்படுத்தப்பட்ட, திட்ட மேலாண்மைக் கமிஷன் நிறுவப்பட்டது. இது சோவியத் ஒன்றியத்தின் அனைத்து குடியரசுகளுக்குமான மைய அமைப்பாகும். 1928 ஆம் ஆண்டு, முதல் ஐந்தாண்டு திட்டத்தின் பொழுதுதான் இதன் முழுமையான செயல்பாடு இருந்தது என்றாலும் இது உருவாக்கம் பெற்றது லெனின் மையப்படுத்தப்பட்ட பொருளாதார கொள்கையின் அடிப்படையில் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் அழுத்தம்தான் முதலாளித்துவம் மீண்டும் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளத் தடையாகவும், சோசியலிச சமுதாயத்தை நிலை நாட்டுவதற்கான காரணியாகவும் இருந்தது. எனவே தான் சோவியத் யூனியனில் மையப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தின் முன்னோடியாக தோழர் லெனின் திகழ்கிறார்.

எனக்கு கொடுக்கப்பட்ட தலைப்பின்கீழ் நான் உரை நிகழ்த்தும்பொழுது தோழர் ஸ்டாலின் பொருளாதார திட்டத்திற்கும், தோழர் லெனின் பொருளாதார திட்டத்திற்கும் இடையேயான வேறுபாடு பற்றி பேசுவதற்கான வாய்ப்பே எழவில்லை.

சோசியலிச சமுதாயத்தின் முக்கிய மூலக்கூறும், அடிப்படையும் திட்டமிட்ட மையப்படுத்தப்பட்ட பொருளாதாரம்தான் என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை. இதன் செயல் முறையில் தோழர் லெனின் அவர்கள் மூல முன்மாதிரிகளை உருவாக்கி செயல்படுத்தி உள்ளார் என்பது வரலாற்று உண்மை.

பொருளாதார பேராசிரியருமான Leon Smolinski அவர்கள் 1960 ஆம் ஆண்டுகளில் சோசியலிச நாடுகளில் பொருளாதார விவாதங்கள், குறிப்பாக தோழர் லெனினின் திட்டமிட்ட மையப்படுத்தப்பட்ட பொருளாதார பற்றிய விவாதங்கள் பற்றி குறிப்பிடும் பொழுது, "இந்த விவாதங்களில் பங்கெடுத்தவர்களில் சிலர் தோழர் லெனினை decentralisation of decision making ஐ ஆதரிப்பவர் என்றும் வேறு பலர், "போல்ஷவிக்குகளாகிய நாங்கள் கொள்கை ரீதியாகவும் கோட்பாடு ரீதியாகவும் நம்பிக்கை ரீதியாகவும் மையநிலை வாதிகள். பொருளாதாரம் முழுவதும் மையத்திலிருந்து ஒரு பிரம்மாண்டமான எந்திரம் போல் நிதி ஒதுக்கீட்டிற்கு வழிகாட்டியாக செயல்படக்கூடிய திட்டத்தை வேண்டுபவர்கள்" என்று கூறிய தோழர் லெனினை நினைவூட்டியவர்களாக உள்ளனர் என்றும் கூறியுள்ளார்.

மதுவை ஊக்குவித்தார்கள கம்யூனிஸ்டுகள் என்ற தலைப்பிட்டு ஒரு விமர்சனம். விமர்சனங்களில் ஒரு வகை ஒரு சார்பு விமர்சனம், (biased criticism). இது அதுதான். என்னுடைய உரையிலும் அதன் தொகுப்பிலும் மது விலக்குப் பற்றி சொல்லி இருப்பது, ஏற்கனவே சீரழிந்து கிடந்த பொருளாதாரத்தில் சீர்திருத்தம் என்ற பெயரில் கொண்டுவரப்பட்ட கொள்கைகள், அதனால் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவு, அக, புற சூழல்களின் காரணமாக ஏற்பட்டிருந்த பொருளாதார வீழ்ச்சி இவற்றோடு அரசுக்கு வருமானம் ஈட்டி கொடுத்த மது விற்பனை தடை செய்யப்பட்டது, என பொருளாதார வீழ்ச்சியின் காரணங்களின் பட்டியலை தான் குறிப்பிட்டு இருந்தேனே தவிர இதில் மது அருந்துவது சரியா? தவறா? என்கிற கேள்வி எழவில்லை.

நான் இதை சொன்னதால் மதுப்பழக்கத்தை கம்யூனிஸ்டுகள் ஊக்குவிப்பதாக சொன்னதாக அர்த்தமும் இல்லை. கோர்ப்பசேவின் 'பெரெஸ்த்ர யிகா' பற்றி பேசுவதற்கு நான் மார்க் லாரன்ஸ் ஷார்ட் இன் ஓட்காபாலிட்டிக்ஸ் படிக்க வேண்டும் என்று ராஜதுரை சொல்வதுதான் அபத்தமாக இருக்கிறது.

வோட்கா பாலிடிக்ஸும் படித்திருக்கிறேன் அதோடு அதைப் பற்றிய விமர்சனங்களையும் படித்து இருக்கிறேன். ரஷ்யாவில் 400 ஆண்டுகால ஓட்காவின் அரசியல் வரலாறு பற்றின ஒரு நல்ல புத்தகம். பலவீனப்படுத்தும் சமூக மது பழக்கம் ரஷ்யர்களுடைய மரபணு குறியீடுகளில் இல்லை. மாறாக எதேச்சாதிகார அரசியல் அமைப்பின் ஆட்சிக் கலையாக கையாளப்பட்டது என்று விவரித்து எழுதப்பட்ட நல்ல புத்தகம். புத்தகத்தை நினைவூட்டிய வரையில் நன்றி.

1979 ஆம் ஆண்டு அரசின் ஏகபோக மது உற்பத்தியின் மூலம் வந்த வருவாய் 25.4 பில்லியன் ரூபில் சரிந்து கொண்டிருந்த பொருளாதாரத்தில் இது ஒரு மிகப்பெரிய தாக்குதலை ஏற்படுத்தியது என்பது உண்மை. பிராவ்தா விற்கு கோர்ப்பசேவ் கொடுத்த பேட்டி ஒன்றில் அவரே கூறியுள்ளார் "நான் மதுவிலக்கு அறிமுகப்படுத்தியது தவறு என்று பின்பு அறிந்து கொண்டேன். முறையாக நீண்ட கால திட்டமாக செய்திருக்க வேண்டும் என்று உணர்கிறேன்" என்று சொல்லி இருக்கிறார். என்னுடைய உரையில் இது ஒரு statement அவ்வளவுதான்.

இதில் எங்கே லெனினை இழிவு படுத்தினேன்? பொறுப்பற்ற அபத்தமான, உள்நோக்கம் கொண்ட விமர்சனம் இது. "பாட்டாளி வர்க்கத்திற்கு குடிப்பழக்கம் தேவையில்லை; அவர்களுக்கு தேவை தெளிவு, தெளிவு மீண்டும் தெளிவு" என்று தெளிவாக, ஆழமாக லெனின் கூறியிருப்பது தொழிலாளி வர்க்கத்தில் ஒலித்துக் கொண்டே இருக்க வேண்டிய முழக்கம். 1914 ஆம் ஆண்டு ஜார் நிக்கோலஸ் போட்ட மது தடையை லெனின் நீக்கமறுத்துவிட்டார். "மதுவிலக்கினால் கிடைக்கக்கூடிய எந்த ஒரு தற்காலிக அனுகூலத்தையும் தியாகம் செய்வோம்" என்று கூறியது வரலாற்றில் பதிவாகியுள்ள மகத்தான உண்மை.

ரஷ்யாவில் ஜார் ஆட்சியின் பொழுதும் சோவியத் யூனியன் வந்த பிறகும் பல்வேறு கட்டங்களில் மதுவிலக்கு அறிமுகப்படுத்தப்பட்டது, விலக்கிக் கொள்ளப்பட்டது. இந்த விவரங்களை இந்த உரையில் சொல்வதற்கான தேவையும் அவசியமும் இல்லை. மேலும், உரை முடிந்த பிறகு interactionகான அவகாசமும் இருந்தது. அன்றைக்கு அந்த உரையை கேட்டவர்களில் யாருக்கும் இத்தகைய ஒரு அபத்தமான கருத்து தோன்றவில்லை. அதனால் யாரும் கேட்கவும் இல்லை.

ஜனநாயக முன் நகர்வு பிழையானதா? என்று மூன்றாவது விமர்சனத்தை முன்வைக்கிறார் ராஜதுரை. என்னுடைய உரையில் எந்த இடத்திலும் ஜனநாயக முன் நகர்வு பிழையானது என்ற உணர்வை ஏற்படுத்தும் வகையில் நான் எந்த விவரத்தையும் கூறவில்லை.

தொடர்ச்சி 6ம் பக்கம்

## யாருடைய கருத்துக்களை, எந்தெந்த கட்டுரைகளில் ஜனசக்தி திரித்து கூறியுள்ளது என்பதை எஸ்.வி.ராஜதுரை தெளிவுபடுத்துவாரா?

தமிழ்நாட்டின் குறிப்பிடத்தக்க எழுத்தாளராகக் கருதப்படும் எஸ்.வி.ராஜதுரை "அருஞ்சொல்" இணைய இதழில் அக்.6, 2022 தேதியிட்ட பக்கத்தில் "அறிவுப் பாரம்பரியத்தை இழந்து விட்டதா ஜனசக்தி" என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார்.

ஏஐடியுசி தேசியச் செயலாளர் வஹிதா பாட்டாளி படிப்பு வட்டத்தில் நிகழ்த்திய உரையை பீட்டர் துரைராஜ் சுருக்கி எழுதி ஜனசக்தி இணைய இதழில் கடந்த 28.09.2022ல் வெளியிடப்பட்டுள்ளது. இக்கட்டுரை பற்றிதான் எஸ்.வி.ராஜதுரை தன் கருத்தை பதிலிட்டுள்ளார். வஹிதா பற்றியும், அவரது கருத்து பற்றியும் எஸ்.வி.ராஜதுரையின் விமர்சனத்திற்கு ஜனசக்தியில் வஹிதா தனியாக எதிர்வினையாற்றி எழுதியுள்ளார்.

வஹிதா கட்டுரையை மதிப்பீடு செய்யும் எஸ்.வி.ராஜதுரையின் கட்டுரையில் ஜனசக்தியின் அறிவு பாரம்பரியத்தின் மீது சில கேள்விகளை எழுப்பியுள்ளார். "60, 70 ஆண்டுகளுக்கு முன்பிருந்த புளித்துப்போன வறட்டு சூத்திரங்களை இன்றுவரை சிலர் உச்சாடனம் செய்வதாக" சொல்கின்றார். மேலும், 'புதிய' மார்க்சிய கருத்துக்களை கண்டு கொள்ளாமல் இருப்பதாகவும் சொல்கின்றார்.


எஸ்.வி.ராஜதுரை எதை புளித்துப் போன வறட்டு சூத்திரங்கள் என சொல்கின்றார்?

எதை 'புதிய' மார்க்சியம் என்று சொல்கின்றார்? என்பதை பற்றி அருஞ்சொல்லில் உள்ள கட்டுரையில் எந்த விளக்கமும் இல்லை. அதை விளக்கும் வகையில் இக்கேள்விகளை எழுப்புவாரெனில் ஜனசக்தி விவாதிக்க தயாராக உள்ளது.

அதன் பின்னர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாபெரும் தலைவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட "ஜனசக்தியின்" அறிவுப் பாரம்பரியம் தொடர்கிறதா? என எஸ்.வி.ராஜதுரை எழுப்புகிற ஐயத்திற்கு ஏதேனும் ஆதாரம் இருக்கிறதா? என முடிவு செய்யலாம் என்று ஜனசக்தி எஸ்.வி.ராஜதுரை அவர்களுக்கு சுட்டிக் காட்டுகிறது.

இவண்
ஜனசக்தி ஆசிரியர் குழு

# முலாயம் சிங் யாதவ் மறைவு



## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

**சமாஜ்வாதி கட்சியின் நிறுவனர் முலாயம் சிங் யாதவ் மறைந்தார். நாட்டின் மூத்த தலைவர்களில் ஒருவரான அவர் அனைவராலும் பெரிதும் மதிக்கப்பட்டவர். ராம் மனோகர் லோகியாவின் இலட்சியங்களில் பற்றுறுதி கொண்டு சமாஜ்வாதி கட்சிக்குத் தலைமை தாங்கியவர்.**

இவர் உத்தர பிரதேச மாநிலத்தின் முதலமைச்சராகப் பொறுப்பு வகித்தபோது, சமுதாயத்தின் ஏழை மற்றும் பிற்படுத்தப்பட்ட பிரிவு மக்களின் மேம்பாட்டிற்காக அயராது பாடுபட்டார். சமூக நீதி மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுடைய உரிமைகளின் பாற்பட்ட இவரது உறுதிப்பாடு நிகரற்றது ஆகும்.

ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தின் போது, பா.ஜ.க ஆட்சிக்கு வராமல் தடுப்பதில், தேசிய அளவில் அவர் மிகவும் முக்கியமான பங்காற்றினார்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவரது உடல்நலம் குறித்து அவரது மகன் அகிலேஷ் யாதவிடம் கட்சியின் பொதுச் செயலாளர் டி ராஜா நேரில் சந்தித்து கேட்டறிந்தார்.

நெருக்கடி மிகுந்த நேரத்தில், அவரது மரணம் தேசத்திற்கு ஓர் இழப்பாகும்.

முலாயம் சிங் யாதவின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது. அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## மாநிலக் குழு இரங்கல்

சமாஜ்வாதி கட்சியின் நிறுவனத் தலைவர்முலாயம் சிங் யாதவ் காலமானார் என்ற துயரச் செய்தி ஆழ்ந்த வேதனையளிக்கிறது.

நாட்டின் விடுதலைப் போராட்ட வீரர், சோசலிச சிந்தனையாளர் ராம் மனோகர் லோகியா, ராஜ் நாராயணன் போன்றவர்களின் வழிநின்று பொது வாழ்வில் ஈடுபட்டவர். சமூக சீர்த்திருந்த கொள்கைகளில் முற்போக்கு கண்ணோட்டம் கொண்டவர்.

லோக் தள் கட்சியின் உத்திரப் பிரதேச மாநிலத் தலைவராக செயல்பட்டு, அக்கட்சி ஜனதா கட்சியோடு இணைந்த போது அதில் பங்கேற்று பணியாற்றியவர். பின்னர் சமாஜ்வாதி கட்சியை நிறுவி, மாநில அரசியலில் தீவிரமாக ஈடுபட்டவர்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் மூன்று முறை முதலமைச்சர், ஒன்றிய அரசின் பாதுகாப்புத்துறை அமைச்சர் போன்ற பொறுப்புகளிலும் சிறப்பாக செயல்பட்டவர்.

மதச்சார்பற்ற, ஜனநாயக சக்திகளுக்கு நம்பிக்கையூட்டும் தலைவராக செயப்பட்டு வந்த முலாயம் சிங் யாதவ், வகுப்புவாத சக்திகளின் தீவிரத் தாக்குதலை எதிர்கொள்ளும் நேரத்தில் காலமானது ஜனநாயக இயக்கத்திற்கு ஏற்பட்ட இழப்பாகும்

சமாஜ்வாதி கட்சி தலைவர் முலாயம் சிங் யாதவ் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரை பிரிந்து வாடும் அவரது மகன் அகிலஷ் யாதவுக்கும், அவரது கட்சியினருக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# தனியார் காப்பகங்கள் தீவிரமாக கண்காணிக்கப்பட வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்



திருப்பூர் மாவட்டம், திருமுருகன்பூண்டி நகராட்சி பகுதியில் இயங்கி வரும் ஸ்ரீவிவேகானந்தா சேவாலயம் ஆதரவு ஏற்போர் குழந்தைகள் காப்பகத்தில் கெட்டுப்போன உணவு சாப்பிட்டதால் மூன்று குழந்தைகள் மரணமடைந்துள்ள அதிர்ச்சியளிக்கும் செய்தி வெளியாகியுள்ளது. உயிரிழந்த குழந்தைகள் தவிர மேலும் 12 பேர் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தனியார் குழந்தைகள் காப்பகம், முதியோர் காப்பகங்கள் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு விதிகளை பின்பற்றி செயல்படுகிறதா? என்பதை அரசு தொடர் கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும். காப்பகத்தில் தயாரிக்கப்பட்டு வழங்கிய உணவு கெட்டுப்போனதா? வெளியில் இருந்து வழங்கப்பட்ட உணவு விஷமாகி விட்டதா? என குழம்புவதும், குழப்புவதும் குற்றவாளிகளை தப்பிக்க செய்யும் வழிமுறையாக அமைந்துவிடக்கூடாது என்ற எச்சரிக்கையோடு விசாரணை அமைய வேண்டும். இந்த நிகழ்வில் தொடர்புடைய குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிவிடாமல், உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். தனியார் காப்பகங்கள் இயங்கும் முறை, அதில் உள்ளோர் உடல் நலன், வழங்கப்படும் உணவுகள் போன்றவைகளை காலமுறைப்படி பரிசோதித்து அறிக்கை பெறுவதை அரசு உறுதி செய்ய வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, மாநில அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்வதுடன் உயிரிழந்த குழந்தைகளுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

05ம் பக்கத் தொடர்ச்சி

மெய்யான ஜனநாயகமும் மக்களின் உரிமைகளும் கம்யூனிச சித்தாந்தத்தில் அல்லாது வேறு எந்த அமைப்பில் உத்தரவாதப்படுத்தப்படுகின்றன. அரசியல் வெளிப்படை தன்மை அவசியம்தான். 500 ஆண்டுகள் உலகம் முழுவதும் வியாபித்து அதிகாரத்தில் இருக்கும் முதலாளித்துவத்திற்கு எதிராக சவால் விடுகிற முறையில் வளர்ந்து வரும் சோஷலிச அமைப்பு ஒரு பரிசோதனை கட்டத்திலேயே இருக்கும் பொழுது கிளாஸ்நாஸ்ட் ஏற்படுத்திய தாக்கம் சோவியத் பரிசோதனைக்கு முற்றிலும் அன்னியமானது.

நான் முதலாளித்துவ ஜனநாயகத்திற்கும் சோஷலிச ஜனநாயகத்திற்கும் இடையிலான முரண்பாட்டைச் சொல்ல முயற்சிக்கவில்லை. முதலாளித்துவத்தில் மெய்யான ஜனநாயகமே இல்லை என்பது தான் உண்மை. ஆனால் கோர்பசேவ் சீர்திருத்த முயன்ற சோவியத் யூனியன், முதலாளித்துவத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக ஒரு சித்தாந்த போர் நடத்திக் கொண்டிருந்த பொழுது சில அரசியல் கட்டுப்பாடுகள் அவசியம் என்பதை சோவியத் யூனியன் வீழ்ச்சிக்குப் பிறகு நாம் உணர்கிறோம்.

இந்தப் பின்னணியில் தான் ஜனநாயகம் என்ற பெயரில் வெளிப்படைத் தன்மை என்ற பெயரில் சோவியத் யூனியன் வீழ்ச்சிக்கு காரணமாக இருந்த சீர்திருத்தங்கள் என்ற பெயரில் கொண்டுவரப்பட்ட கிளாஸ் நாஸ்டும் கட்சி அமைப்பில் கொண்டுவரப்பட்ட மாற்றங்களும் விவரிக்கப்பட்டது. இதில் எங்குமே ஜனநாயக முன் நகர்வு பிழையானது என்ற அர்த்தம் வரவில்லை.

“சோவியத் ஒன்றியத்தின் நெடிய பாரம்பரியத்தை மக்கள் மறந்தார்கள்” என்று என் உரையில் கூறியதற்கு அர்த்தம் அவர்களும் கோர்பசேவுடன் சேர்ந்து சோவியத் வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தார்கள் என்பது என் குற்றச்சாட்டல்ல.

போல்செவிக்குகள் ஆட்சி அமைத்த உடன் ரஷ்யாவின் பாரம்பரியத்தை பற்றி தோழர் லெனின் கூறுகிறார் (V ILenin, Collected Works), “அதுதான் மார்க்சியத்தைக் கண்டடைந்தோம் உலகின் ஒரே சரியான புரட்சிகர சித்தாந்தம் அரைநூற்றாண்டு துயரங்கள், இணையில்லா தியாகங்கள், ஈடில்லாத புரட்சிகர எழுச்சி, நம்ப முடியாத சக்தி, அர்ப்பணிப்பு மிக்க தேடல், கல்வி, செயல்பாடுகள், இழப்புகள், ஏமாற்றங்கள் ஐரோப்பிய பரிசோதனைகளோடு ஒப்பிடுகள்...”

ஒரு ரஷ்ய புரட்சியாளரை விவரிக்கும் பொழுது இளம் ட்ராஸ்கி சொல்கிறார், “ஆண்களும் பெண்களுமான ஒரு அதிசயிக்கத்தக்க தலைமுறை இந்த புரட்சியை செய்து முடிக்கப் பிறந்தது”. சோவியத் யூனியனின் மக்கள் மத்தியில் இருந்த இத்தகைய சோஷலிச உணர்வு அவர்களின் நெடிய பாரம்பரியம். “உணர்வு நிலை வாழ்க்கையை தீர்மானிப்பதில்லை; வாழ்க்கையே உணர்வு நிலையை தீர்மானிக்கிறது”, என்று கார்ல் மார்க்ஸ் சொன்னது சோவியத் யூனியன் வீழ்ச்சியில் காண முடிந்தது. இதற்கு மக்கள் காரணமாக இருந்தார்கள் என்று குற்றச்சாட்டு பொருத்தமானதல்ல.

எல்ஸ்டின் எவ்வாறு செல்வாக்கு பெற்றார் என்ற கேள்வியை எழுப்புகிறார் ராஜதுரை. இதைப் பற்றி என்னுடைய உரையில் பேசி இருந்தேன். உரைத் தொகுப்பில் அது இடம்பெறவில்லை. எல்ட்ஸினின் ரஷ்ய சோஷலிச சோவியத் குடியரசின் தலைவராகத்தான் தேர்ந்தெடுக்கப்பட்டார். எல்ட்ஸினின் தாராளவாத கொள்கைகளும் ரஷ்ய தேசியவாதத்திற்கு அவர் அளித்த ஆதரவும் அவருக்கு மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கை ஏற்படுத்திக் கொடுத்தது.

கோர்பச்சேவ் அமைதி நாயகரா? அவல நாயகரா? என்ற தலைப்பில் 45 நிமிடம் முதல் ஒரு மணி நேரம் வரையில் ஆற்ற வேண்டிய உரையில் எது எல்லாம் சம்பந்தப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களோ அவற்றையெல்லாம் சொல்ல முடிந்த அளவிற்கு சொல்லி இருக்கிறேன். ராஜதுரைக்கு விளக்கமளிக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை என்ற போதிலும் என்னுடைய உரைத்தொகுப்பை விமர்சிக்கும் பொழுது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகையான ஜன சக்தியையும் மிக மோசமாக விமர்சித்து இருப்பது காரணமாக நான் இந்த விளக்கத்தை அளிக்க முன் வந்தேன்.

## தோழர் சி.எஸ்.சுப்பிரமணியம் கட்டிட நிதி

| | | |
|---|---|---|
| தோழர் லெனின்வளவன் (தனி 4) | - | ரூ.20,000 |
| தோழர் சுபாஷ் - கன்னியாகுமரி | - | ரூ.2,000 |
| தோழர் சாமு தர்மராசன் தஞ்சைவடக்கு | - | ரூ.500 |
| தோழர் டி.கண்ணகி தஞ்சை வடக்கு | - | ரூ.500 |
| தோழர் பி.தாமரை செல்வி தஞ்சை வடக்கு | - | ரூ.500 |
| தோழர் கே.கண்ணன் சூலூர் கிளை பொருளாளர் | - | ரூ.6,000 |
| தோழர் க.பழனிச்சாமி ஆண்டிப்பட்டி ஒன்றியக்குழு உறுப்பினர் | - | ரூ.500 |
| தோழர் எம்.என்.சாமிநாதன் வடமதுரை ஒன்றியம், குரும்ப பட்டி கிளை | - | ரூ.101 |

## பத்மஸ்ரீ சுப்பு ஆறுமுகம் உடலுக்கு அஞ்சலி

பிரபல இசைக் கலைஞர் பத்மஸ்ரீ சுப்பு ஆறுமுகம் அக்.10 அன்று தனது 93 வயதில் மறைந்தார். சென்னை கே.கே. நகரில் உள்ள அவரது இல்லத்திற்கு சென்று தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில், மாநிலக் குழு உறுப்பினர், நாடகக் கலைஞர் ஆனந்த பாஸ்கர், சென்னை மாவட்டச் செயலாளர் கணபதி இளங்கோ ஆகியோர் இறுதி மரியாதை செலுத்தினர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 91. உபாயத்தி லாஅகா ஒன்று

**அரியதன் ஆற்றலில்லா தேதும் அரிதே**
**உபாயத்தி லாஅகா ஒன்று**

தந்திரத்தால் செய்து முடிக்காத அரிய செயலை, தனது வலிய ஆற்றலினால் செய்து முடிக்கலாம்.

**என்நிலை கண்இருப்பின் என்னாம் எடுத்ததை**
**துன்னிமுடி தூக்கித் தரும்**

ஒருவன் எத்தகைய (வலியற்ற) நிலையில் இருந்தாலும் கூட, துணிந்து நின்று எடுத்துக் கொண்ட செயலை முடிக்க முயன்றால், செயல் நன்கு முடிவுறும்.



- ஆர்.கிருஷ்ணமூர்த்தி

# ஒழிப்பது ஒன்றேதான் ஆர்.எஸ்.எஸ். நோக்கம்



**சமீபகாலமாக ஆர்.எஸ்.எஸ். சங்பரிவாரங்கள் ஒரு புதிய தந்திரம் மிகுந்த ஆயுதத்தைக் கையில் எடுத்திருக்கிறார்கள். தொடர்ந்த பொய்யுரைகளைக் கூறி மக்களை எப்படி ஏமாற்றுவது? எப்படி பொய்களை நம்பவைப்பது? அதன் மூலம் தங்களை எப்படியெல்லாம் மேலானவர்களாகக் காட்டிக் கொள்வது? என்பதே அவர்களின் சமீபத்திய கபட முயற்சி.**

ஆர்.எஸ்.எஸ். சங்பரிவாரங்களுக்கு காந்தி, நேரு, அம்பேத்கர் எல்லோருமே எதிரிகள் தான். ஜனநாயகம், அரசியல் தத்துவம், மதச்சார்பின்மை ஆகியவைகளுக்கு நேர் எதிரானதே ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தம், தேசப்பற்று. அதைச் சங்பரிவாரங்களால் வெளிப்படையாகச் சொல்ல முடியாது என்பதை விட சொல்ல மாட்டார்கள். ஆகவே அவைகளை மறைத்து அழிப்பதற்காக ஆர்.எஸ்.எஸ். எடுத்திருக்கும் ஆயுதமே அணைத்தலும், அரவணைத்தலும், எதிர்த்தலும்.

அண்ணல் காந்தி, அண்ணல் அம்பேத்கர் புகழை மறைத்தொழிக்க நரியை மிஞ்சும் ஆர்.எஸ்.எஸ்.சின் சாகசம் என்பது அவர்களைப் புகழ்வது, பின்னர் அவர்களும் தங்கள் சித்தாந்தத்தைப் புகழ்ந்து ஏற்றதாகச் சொல்வது. அதை இன்று மோடி செய்து கொண்டிருக்கிறார் என்று முடிப்பது.

அதேபோன்று நேரு விஷயத்தில் சொல்ல முடியாது. அது அவர்களின் சித்தாந்தங்களுக்கு எதிர்மறை ஆகிவிடும். நேருவின் ஆளுமைத் திறனை, காங்கிரஸ் கட்சி அரசியலை ஏற்றுக் கொண்டதாகி விடும். எனவே நேரு விஷயத்தில் வேறு அணுகுமுறை.

நேரு அவர்களைப் பற்றி தனிநபர் விமர்சனம் செய்வது, அவரது அரசியலையும், இமாலய சாதனைகளையும் கொச்சைப்படுத்தி விமர்சிப்பது. இன்றைய அத்தனை சீர்கேடுகளுக்கும் நேருவும், அவரது ஆட்சி கால நடவடிக்கைகளுமே காரணம் என விடாது பிரச்சாரம் செய்வது , அதன் வழியே அவரின் புகழுக்குக் களங்கம் ஏற்படுத்தி அவரின் புகழை மறைத்தொழிப்பது என்பதையே ஆர்.எஸ்.எஸ். செய்து வருகிறது.

ஆர்.எஸ்.எஸ். ன் அபாய குறுக்கு தந்திர வழிகளைப் புரிந்து முறியடிக்க வேண்டும்.

மகாத்மா காந்தி....

காந்தி மீது ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் முதல், தொண்டர்கள் வரை எவ்வளவு வெறுப்புணர்வு கொண்டவர்கள் என்பதை நாம் அறிவோம். ஆனால் இன்று அதை அப்படியே தலைகீழாக மாற்றி மறைத்து எவ்வளவு பச்சையாக பொய்யுரைக்கிறார்கள்.

"மகாத்மா காந்தி ஆர்.எஸ்.எஸ். பணியாளர்களின் ஒழுக்கத்தை வெகுவாகப் பாராட்டினார். காந்தி தேசப் பிரிவினை காலத்தில் எங்களுடன் நெருக்கமாக இருந்தார். ஆர்.எஸ்.எஸ். ஷாகாவைப் பார்வையிட்டார். ஆர்.எஸ்.எஸ். சுயம் சேவகர்களுடன் உரையாடினார். ஆர்.எஸ்.எஸ். களின் ஒழுக்கம் மற்றும் அவர்களிடம் பிரிவினை உணர்வு இன்மையால் ஈர்க்கப் பட்டார்'' என்கிறார் ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத்.

காந்தி அங்கு சென்றது செப். 27 1947ல். அப்போதைய நிகழ்வாக இதையெல்லாம் மோகன் பகவத் இப்போது சொல்கிறார்.

இரண்டாண்டுகள் முன்பு காந்தியின் 150 வது பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. இதில் பேசிய முன்னாள் ஆர்.எஸ்.எஸ். தொண்டர் இப்போதைய பிரதமர் மோடியும், மோகன் பகவத் பேசியதையேப் பேசினார். இதன் நோக்கம் என்ன? ஆர்.எஸ்.எஸ். இயக்கம் காந்தியால் உயர்வாகப் போற்றப்பட்ட இயக்கம் என்ற கருத்தைப் பொதுவெளியில் பதிவு செய்வதுதான்.

1947 ஏப்ரல் மாதம் நடந்த ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்தி இவ்வாறு கூறுகிறார்.

"நான் குரான் மற்றும் பகவத் கீதை இடையே காணப்படும் ஒற்றுமைகளைக் கூறி இந்து மற்றும் இஸ்லாமியக் கோட்பாடுகள் நெருக்கமானதே என்றேன். உடனே பொங்கி எழுந்த ஆர்.எஸ்.எஸ். எனக்கு மிகவும் கோபம் கொந்தளிக்கும் கீழ்த்தரமான மறுப்பு கடிதம் ஒன்றை எழுதியது. இதுதான் ஆர்.எஸ்.எஸ்.சின் மதம் சார்ந்த ஒழுக்கம் போலும் " என்கிறார் காந்தி.

**1947 ம் வருடம் கொல்கத்தாவில் இந்து முஸ்லிம் கலவரம். ஏராளமானோர் உயிரிழப்பு. கலவரத்தை நிறுத்த காந்தி தனது காலவரையற்ற உண்ணாவிரதத்தை மேற்கொள்கிறார். அப்போது ஆர்.எஸ்.எஸ். ஏடு ஆர்கனைசர் என்ன எழுதியது தெரியுமா? "ரோம் பற்றி எரியும் போது நீரோ மன்னன் பிடில் வாசிக்கிறார்" என எழுதி காந்தியின் உண்ணாவிரதத்தைக் கொச்சைப்படுத்தியது.**

இஸ்லாம் வேஷத்தில் ஆர்.எஸ்.எஸ். இந்துக்களைத் தாக்க ஆரம்பித்த நோக்கம் இந்துக்களிடம் இஸ்லாமிய வெறுப்பை, கோபத்தை ஏற்படுத்தி கலவரத்தைத் தூண்டிவிட வேண்டும் என்பதுதான்.

காந்தி ஆர்.எஸ்.எஸ். சூழ்ச்சியை அறிந்து கொண்டார். இந்துக்களிடம் "அல்லாஹு அக்பர்'' கோஷம் எழுப்பச் சொன்னார். ஆர்.எஸ்.எஸ். சங்பரிவாரங்கள் இஸ்லாமிய எதிர்ப்பு என்ற மத வெறியைத் தூண்டி விடுவதைக் கண்டித்தார்.

காந்தி பற்றிய ஒரு புத்தகம் வெளியீட்டு விழா சமீபத்தில் நடந்தது. அதில் ஆர்.எஸ். எஸ். மோகன் பகவத் "இந்தியா பற்றிய காந்தியின் பார்வைக்கும், ஆர்.எஸ்.எஸ்.ன் பார்வைக்கும் நிறைய ஒற்றுமைகள் உள்ளன. காந்தி ஒருபோதும் தான் ஒரு இந்து என்று கூறிக்கொள்வதிலிருந்து தவறியதே இல்லை. சில சமயங்களில் தன்னை சனாதன இந்து என்றே சொல்லிக் கொண்டார். இன்றைய இளைஞர்கள் காந்தியை ஆர்.எஸ்.எஸ். பார்வையிலிருந்து பார்க்க வேண்டும்'' என்ற ஒரு மாபாதக பொய்யை வாய்கூசாது கூறி வரலாற்றையே மாற்றப் பார்க்கிறார்.

அண்ணல் அம்பேத்கர்

அண்ணல் அம்பேத்கர் வடித்தெடுத்த அரசியல் அமைப்பு சட்டத்தையே நாசமாக்கி மாற்றியமைக்கத் துடிக்கும் ஆர்.எஸ்.எஸ். பாசிசக் கும்பல்தான் இப்போது அம்பேத்கரைப் புகழ்ந்து தள்ளி வழிகிறது. அதில், அம்பேத்கர் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார் என்று ஒரு பெரும் பொய்யை உண்மை போல கூற ஆரம்பித்திருக்கிறது.

ஆனால் உண்மை வேறு என்பதுதான் உண்மை.

அம்பேத்கரின் சித்தாந்தம் ஆர்.எஸ். எஸ். சித்தாந்தத்திற்கு நேர் எதிரானவை. உதாரணமாக இந்திய தேசியம், மதச் சார்பின்மை மற்றும் சமூக நீதி இவைகளைத் தூக்கிப் பிடித்தவர் அம்பேத்கர். இவைகள் எல்லாம் அம்பேத்கர் சித்தாந்தத்தின் அடிப்படை. ஆனால் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தம் இவைகளுக்கு நேர் எதிரானவை. பார்ப்பனிய சனாதனத் தன்மை கொண்ட இந்துத்துவா, இந்து ராஷ்டிரம் என்பவை ஆர்.எஸ்.எஸ்.சின் சித்தாந்தம்.

சூத்திரர்களையும் இதர சாதியினரையும் வர்ண சாதிய முறையில் இழிவு படுத்தும் இந்து மதத்தவனாக இருக்க நான் விரும்பவில்லை என்று வெறுத்து கூறியவர் அம்பேத்கர்.

" இந்து ராஜ்யம் என்று ஒன்று வரும் பட்சத்தில் அது நாட்டிற்கு மிகப் பெரிய பேரழிவாக இருக்கும். இந்துத்துவா என்பது சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்திற்கு எதிரான ஆகப் பெரிய அச்சுறுத்தலாகவே இருக்கும். இந்து ராஜ்யம் என்பது ஜனநாயகத்திற்கு எதிரானது. ஆகவே எப்பாடு பட்டாவது ஒற்றை இந்து ராஜ்யம் வருவதைத் தடுத்து நிறுத்தியே ஆக வேண்டும் " என்று எச்சரிக்கை விடுத்தார் அம்பேத்கர்.

இப்படி அம்பேத்கர் கூறியதை அடியோடு மறைத்து விட்டு அம்பேத்கர் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தின் மீது அளவற்ற நம்பிக்கை வைத்திருந்தார் என்று ஜமுக்காளத்தில் வடிகட்டிய பொய்யை உண்மை போல கூறத் துவங்கியிருக்கின்றனர் ஆர்.எஸ்.எஸ். தலைவர்களும் சங் பரிவார கூட்டமும்.

மோடியை அம்பேத்கருடன் ஒப்பிட்டு " சீர்திருத்த வாதியின் சிந்தனையும் செயல் வீரரின் நடவடிக்கையும்" என்ற ஒரு புத்தகம் சமீபத்தில் வெளியிடப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற ஆர்.எஸ். எஸ். பாசிசத் தலைவர்கள் ஒரு மாபெரும் பொய்யை உரக்கப் பேசினர். அது அம்பேத்கர் உயிரோடு இருப்பாரேயானால் மோடியைக் கட்டித் தழுவி பாராட்டியிருப்பார் என்பது. இதே பொய்யை வெளியில் உளர பல ராஜாக்களையும் ஏற்பாடு செய்திருக்கின்றனர். இந்த பொய்யான பரப்புரையின் நோக்கம் மோடி அம்பேத்கரையும் மிஞ்சிவிட்டார் என ஒரு பில்டப் செய்தியை நிஜமாக்க வேண்டும் என்பதுதான்.

ஜவஹர்லால் நேரு

இந்தியா விடுதலை பெற்று 17 ஆண்டுகள் தன்னிகரற்ற ஆளுமையுடன் பிரதமராக கோலோச்சியவர் நேரு.

தந்தை மோதிலால் நேரு, தாய் சொரூபராணி, நேரு உள்ளிட்ட குடும்பமே விடுதலைப் போராட்டத்தில் முழுப்பங்கேற்றவர்கள்.

நேரு பிரதமராக இருந்த காலத்தில் இந்தியா தன்னிகரற்ற நாடாக தலை நிமிர்ந்து உலக அரங்கில் திகழ ஏராளமாகச் செய்தார். நாட்டின் கட்டுமானத்தில் அதிக கவனம் செலுத்தினார். இரும்பு உருக்காலை, தொழிற்சாலைகள், நிலக்கரி சுரங்கங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் என தேசத்தின் வளர்ச்சியை உயரத்திற்குக் கொண்டு சென்றார்.

அண்டை நாடுகளுடனான உறவு, பஞ்ச சீலக்கொள்கை உலகத்தையே இந்தியாவை நோக்கி உற்றுப்பார்க்க வைத்தது.

இந்தியா ஒரு சோசலிச நாடாக மலரவேண்டும் என்பதை அரசியல் அமைப்புச் சட்டத்தில் தெளிவாக்கி அவ்வழியில் ஆட்சி நடத்தினார்.

இந்தியா மதச்சார்பின்மை நாடாக, பன் முகத்தன்மையுடன் பன் முகக் கலாச்சாரம் உடைய நாடாக, மாநிலங்களின் உரிமைகளைப் பேணிக் காத்திடும் நாடாக இருக்க வேண்டும் என்பதில் முழுக் கவனம் செலுத்தினார்.

இந்த நிலையில் நேருவை ஆர்.எஸ்.எஸ். சங்கிகள் ஏற்றுக்கொண்டால் அவரது ஆட்சி ஆளுமையை, ஆட்சிகால நல்ல திட்டங்களை, உள்நாட்டு வெளிநாட்டு கொள்கைகளை ஏற்றுக் கொண்டதாகிவிடும்.

எனவே நேரு விஷயத்தில் ஆர்.எஸ்.எஸ். நரித்தந்திர திட்டம் மாறுகிறது.

கவனம் தேவை..

இன்றைய ஆட்சியின் சீர் கேடுகளுக் கெல்லாம் பொருளாதார சரிவுகளுக்கெல்லாம் 50 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற நேருவின் ஆட்சியே காரணம் என்ற ஒரு அபாண்டத்தை விடாது சொல்லி, நேருவின் புகழை எதிர்த்து ஒழிப்பது என்பதுதான் ஆர்.எஸ்.எஸ்.சின் அபாயகரமான சூழ்ச்சித் திட்டம்.

ஆர்.எஸ்.எஸ். சித்தாந்த சங்கிகளின் அரசியல் சதித்திட்டத்தை நாமும் நாடும் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆர்.எஸ்.எஸ். இந்துத்துவா பாசிசம் பாம்பின் விஷத்தை விட பன்மடங்கு கொடியது.

இடதுசாரி ஜனநாயகப் பாதை விலகாது வீறு கொண்டு போராடுவோம்!

அழிக்க முடியாத ஒன்றல்ல. ஆர்.எஸ்.எஸ். அமைப்பை வேறொடும் வேரடி மண்ணோடும் வீழ்த்துவோம்! இன்குலாப் ஜிந்தாபாத்!

தொடர்புக்கு: 94449 56694

# புதுச்சேரியின் தந்தை வ



- வி.எஸ்.அபிஷேகம்

புதுச்சேரி கல்வே காலேஜ் அப்போதிருந்த பிரெஞ்ச் கல்வி சாலை. அப்போது கேட் சிஸ்டம் (Gate System) வடிகட்டும் முறை இருந்தது. 9ம் வகுப்பில் அனைத்துப் பிரிவுகளிலும் தேர்ச்சி பெற வேண்டும். அப்போதுதான் அடுத்து பிரவே (10-ம் வகுப்பு) வகுப்புக்கு செல்ல முடியும்.

இந்த முறை மாற்றப்பட்ட வேண்டும் என வலியுறுத்தியும், ஆசிரியர் பயிற்சி பெறாதவர்களைக் கொண்டு வகுப்பு நடத்தியதையும், அதுபோன்ற பயிற்சி முடிக்காத ஆசிரியர்களை மெட்ரிக்குலேன் தேர்வுக்கு ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டதை கண்டித்தும், மாணவர்களை ஒன்றிணைத்து முதன்முதலில் மாணவர் போராட்டம் நடைபெற்றது.

வ.சுப்பையா இந்த போராட்டத்தை நடத்த காரணமாக திகழ்ந்தவர் என்பதை அறிந்த பள்ளி நிர்வாகம் அவரை ஒரு கலகக்காரன் என்று முத்திரை குத்தியது. வேலை நிறுத்தம் 3 வாரம் நடந்தது. சுப்பையா 6 மாதம் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்.

அவருடன் இருந்து செயல்பட்டவர்கள் 21 பேர் 1 மாதம் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர். பள்ளி நிர்வாகத்தின் இந்த நடவடிக்கையை கண்டித்து மாணவர்களையும், பெற்றோர்களையும் திரட்டி போராட்டம் நடத்தினார். சுப்பையா மற்றும் சஸ்பெண்ட் செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரும் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

அந்தப் போராட்டம் நடந்ததிலிருந்து வ.சுப்பையா அரசுக்கு எதிரானவர் என்று கருதப்பட்டார். 1927ம் ஆண்டு கடலூருக்கு வருகை தந்த மகாத்மா காந்தி அடிகளை மாணவர்களுடன் சென்று நேரில் சந்தித்துப் பேசினார். அதே ஆண்டு டிசம்பரில் சென்னையில் டாக்டர்.அன்சாரி தலைமையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் என்ன நடக்கிறது என்பதை பார்ப்பதற்காக செல்கிறார். தலைவர்கள் ஆற்றிய உரை சுப்பையாவின் தேச பக்தியை தூண்டுகிறது. ஒரு போராளியாக மாற்றுகிறது.

1928ல் தோழர் சிங்காரவேலர் தலைமையில் தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம் நடைபெற்றது.

8.4.1929 அன்று தோழர் பகத்சிங் டெல்லியில் மத்திய சட்டசபைக்குள் (பாராளுமன்றத்துக்குள்) குண்டு வீசிய சம்பவம் நடந்தது.

சுப்பையாவின் கவனத்தை இந்நிகழ்வுகள் ஈர்த்தன. சுயமரியாதை இயக்கத்தை பற்றியும், பகுத்தறிவு இயக்கம் குறித்தும் ஆர்வம் மேலோங்கியது. சாதி மத பாகுபாடுகளை




வெறுத்தார். குடியரசு புத்தகங்களையும் படிக்கலானார்.

சுபாஷ் சந்திரபோசின் பேச்சு சுப்பையாவுக்கு போராட்ட உணர்வை தூண்டியது. ஒரு பக்கம் தேசிய நீரோட்டம், மறுபக்கம் பகுத்தறிவு நீரோட்டம் அவரது சிந்தனையில் ஆட் கொண்டது.

1929-30ல் உலக பொருளாதார நெருக்கடி ஏற்படுகிறது. இந்தியாவிலும் பொருளாதார நெருக்கடி உருவானது.

சுப்பையாவின் சிறுவயதிலேயே அவரது தந்தை வரதராஜுலு இறந்து விட்டார். இந்த நேரத்தில் சுப்பையாவின் தாயார் (பங்காரு அம்மாள்) அவரை சென்னைக்கு வேலைக்கு அனுப்ப விரும்புகிறார். சென்னையில் நடைபெற்ற விடுதலை போராட்டங்களில் கலந்து கொள்கிறார்.

விடுதலை போராட்டத்தில் கலந்து கொண்டு கைதாகும் நிலை ஏற்படும். எனவே மீண்டும் புதுச்சேரிக்கு அழைத்துக் கொள்ள வேண்டிய நிலை உருவாகிறது.

அதைத் தொடர்ந்து தாயாருக்கு உடல்நிலை சரி யில்லை என்று தந்தி கொடுத்து மீண்டும் சுப்பையாவை புதுச்சேரிக்கு அழைத்து விடுகிறார்கள்.

1929ல் நட்புறவு கழகம் என்கிற இலக்கிய அமைப்பையும், 1930ம் ஆண்டு சுப்பையா பிரெஞ்சிந்திய இளைஞர் கழகம் ஆரம்பித்து நடத்துகிறார். அப்போதுதான் ராமகிருஷ்ணா வாசக சாலை அமைத்து மாணவர்களுக்கு இரவு பள்ளிக்கூடம் நடத்தப்படுகிறது. ராமகிருஷ்ணா பாட சாலை மூலம் மக்களுக்கு தேச பக்த உணர்வூட்டப்பட்டது.

1932-பூனா ஒப்பந்தத்தை அடுத்து, 1933ம் ஆண்டு மகாத்மா காந்தி அரிசன சேவா சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினார். நாடு முழுவதும் அதை விரிவுபடுத்தினார்.

அரிசனா சேவா சங்கத்தின் புதுச்சேரி பிரிவு செயலாளராக சுப்பையா நியமிக்கப்பட்டார்.

1934ம் ஆண்டு அரிசன நல நிதி திரட்டிட மகாத்மா காந்தி சுற்றுப்பயணம் மேற்கொண்டார். பயண பட்டியலில் புதுச்சேரி இல்லை என்பதை அறிந்து கொண்ட சுப்பையா, நீலகிரியை அடுத்துள்ள குன்னூரில் தங்குகிறார் என்பதை கேள்விப்பட்டு அங்கு சென்று காந்தியை சந்தித்துப் பேச சென்றார்.

கடுங்குளிர்! தாளாமல் சுப்பையா அவிநாசிலிங்கத்துடன் சென்று காந்தியைப் பார்த்தார். தாழ்வாரத்தில் கயிற்றுக் கட்டிலில் கடுங்குளிரிலும், ஒரே ஒரு போர்வையுடன் உறங்கினார் காந்தி. பொழுது புலர்ந்தது. அதிகாலை நடைப யிற்சி சென்றார் காந்தி, சுப்பையாவும் அவருடன் சென்றார்.

காலை 10 மணிக்கு காந்தியடிகளை சந்திக்க சுப்பையா அழைக்கப்பட்டார். அப்போதும் காந்தி ராட்டையில் நூல் நூற்றபடி இருந்தார்.அடக்கமாக காந்தி பக்கத்தில் அமர்ந்த சுப்பையா புதுச்சேரி எழுச்சியுற தாங்கள் வருகை புரிய வேண்டும். அரிசன நல நிதி ரூ.5000 சேர்ந்துள்ளது என்றார்.

அதை கேட்டறிந்த காந்தி ''ஐயாயிரம் போதாது. புதுச்சேரி ஒரு துறைமுக நகரம், அங்கு 1.ராலி பிரதர்ஸ், 2.ஓல்க்கரா 3. கிழக்காசிய கம்பெனி உள்ளிட்ட கப்பல் ஏஜென்சீஸ் கம்பெனிகள் உள்ளன. வாரத்துக்கு 2 கப்பல்கள் அங்கு வருகின்றன. எனவே ரூ.10 ஆயிரம் வசூல் செய்து சேவா சங்கத்தின் அகில இந்திய தலைவர் தக்கர் பாபாவுக்கு அனுப்பி விடுங்கள்'' என்று காந்தி கூறினார்.

அப்படி கூறிய பிறகும் புதுச்சேரிக்கு வருவதாக காந்தி கூறாததால், சுப்பையா மனம் விட்டு காந்தியிடம் கேட்டு விட்டார். அரவிந்த கோஷை சந்திக்க வாய்ப்பில்லை என்பதால், புதுச்சேரி பயணத்தையே நீங்கள் கேள்விக்குறி ஆக்கியுள்ளீர்கள் என்றார் சுப்பையா.

இதைக் கேட்ட காந்தி சுப்பையாவின் முகத்தை புன்முருவலுடன் திரும்பி பார்த்தார். ராட்டை சுற்றுவதை அவரது கை நிறுத்தியது. ஒரு நிமிடம் யோசித்து விட்டு அதுவும் உனக்கு தெரிந்துவிட்டதா? என்று கேட்டார். பயணப் பட்டியலில் புதுச்சேரியை சேர்க்கும் படி பயண அமைப்பாளரிடம் கூறினார் காந்தி. அதை கேட்ட சுப்பையா அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

16 வயதில் கடலூரில் தன்னை சந்திக்க வந்த சிறுவன், இடைப்பட்ட காலத்தில் பிரெஞ்சிந்திய வாலிபர் சங்கம், ராமகிருஷ்ணா வாசக சாலை, நட்புறவு கழகம், அரிசன சேவா சங்கம்

# பாலன் உலாவிய மண்



எஸ். காசி விஸ்வநாதன்

அடக்குமுறைகளை நேரடியாக களங்களில் சந்தித்த அருமை தோழர் பாலதண்டாயுதம் அப்போது கோவை பாராளுமன்ற உறுப்பினர். அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் தொடங்கிய காலகட்டம். திண்டுக்கல்லில் இடைத் தேர்தல் பணிகளில் தோழர் பாலன் ஈடுபட்டிருக்கிறார். செய்தி அறிந்தவுடன் தோழர்களுக்கு ஆறுதல் கூறவில்லை. மாறாத ஆத்திரத்தோடு மே 13ஆம் நாள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாபெரும் கண்டன பேரணி பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள் நானே நேரில் வருகிறேன் என்று உத்தரவிடுகிறார். தேர்தல் பணிகள் காரணமாக சற்று காலதாமதமாக வருகிறார். திருப்பூர் சிவந்தது. ஆயிரமாயிரம் தோழர்கள் கைகளில் செங்கொடிகளோடு வீதிகளில் ஊர்வலமாக அணிதிரண்டு ஆர்ப்பரித்து திரண்டனர். தோழர்கள் எழுச்சியோடு அணிதிரண்டு காத்திருந்த கூட்டத்தில் காலதாமதமாகவே பாலதண்டாயுதம் வருகை தந்தார். காவல்துறையை கண்டித்து எழுச்சி முழக்கம். பாலன் வாயிலிருந்து வார்த்தைகள் அருவியாகக் கொட்டின. “இந்தக் கண்டன ஊர்வலத்திற்கு நானே தலைமை தாங்குவதாக இருந்தேன். ஆனால் குறிப்பிட்ட காலத்தில் வந்து கலந்து கொள்ள முடியாததற்கு பெரிதும் வருந்துகிறேன்”

“இடைத்தேர்தலில் நடைபெற்ற அராஜகத்தை நாணயங் கெட்ட தனத்தை எதிர்த்துப் போராடியதால் தான் நான் குறிப்பிட்ட நேரத்திற்கு இங்கு வந்து சேர முடியவில்லை. எனது அரசியல் வாழ்வில் இது போன்ற ஊர்வலங்களுக்கு தலைமை தாங்குவதைத்தான் பெருமையாகவும், கடமையாகவும் கருதுகிறேன். எங்கள் தோழர்கள் தாக்கப்பட்டதாகவோ, அவர்கள் காயம்பட்டு விட்டார்கள் என்பதற்காகவோ, நான் அழ மாட்டேன். கண்ணீர் வடிக்க மாட்டேன். அனுதாபம் காட்ட மாட்டேன். ஏனெனில் இன்று தான் அந்தத் துடிப்பு மிக்க இளைஞர்களைக் கம்யூனிஸ்டுகளாக ஞானஸ்தானம் செய்து வைத்துள்ளீர்கள்.

எனவே டிஎஸ்பி ‘பெத்த’பெருமாளே! ‘சித்த’ இளங்கோவே ‘குட்டி’ ராஜமாணிக்கமே உங்களை நான் பாராட்டுகிறேன். ஏய் பெத்த பெருமாளே உங்கள் அடக்குமுறைச் சவாலை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவன் என்ற முறையில் ஏற்றுக் கொள்கிறேன். பள்ளிப்பாளையத்திலும், பரமத்திவேலூரிலும் அடக்குமுறைக்கு காரணமாக இருந்த கேடுகெட்ட ஜென்மமே! இந்த தொகுதிகுள்ளுமா வாலாட்டுகிறாய்? இது தொழிலாளி வர்க்கம் நிறைந்த இடம் பார்த்துவிடுகிறோம்.. உனது அடக்குமுறையைஞ் இந்த தொகுதிக்குள் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் நான் அரசியல் நடத்துவதா? இல்லை நீ பொழப்புத்தனம் நடத்துகிறாயா? என்பதை நான் ஒரு கை பார்த்து விடுகிறேன். ரத்தம் குடிக்கின்ற உனது திமிரை அடக்கும் வரை இந்த பாலதண்டாயுதம் ஓய மாட்டான் என்பதை நினைவில் வைத்துக் கொள்! கம்யூனிஸ்டுகளை அடித்து விரட்ட பார்க்கிறீர்களா? அது ஒருபோதும் நடக்காது.. அடிபட்டு, அடிபட்டு மரத்துப் போய்விட்ட எங்கள் சதை வலிக்காது. சிறைகளையும், சித்திரவதைகளையும் சந்தித்துக் கொண்டுதான் நாங்கள் அரசியல் நடத்துகிறோம்.




**நாங்கள் உயிருக்கு பயந்தவர்கள் அல்ல. எனது உயிர் எனது பாக்கெட்டிலேயே இருக்கிறது.. எப்போது, எவன் கேட்டாலும் எடுத்துக் கொடுத்து விடுவேன். நான் வீட்டைவிட்டு புறப்படுகிற போதே என் மனைவியிடம் சொல்லி விட்டுத்தான் புறப்பட்டிருக்கிறேன். ‘வந்தால் வரவில் வை.. வராவிட்டால் செலவில் வை’ என்று.**

நீ அடித்தது சுப்பராயனையோ, நடராஜனையோ, எங்களுடைய தோழர்களையோ அல்ல.. என்னை.. இந்த பாலதண்டாயுதத்தை.. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை என்பதை மறக்காதே!

# .சுப்பையா

அமைத்தும் அவற்றை தலைமை தாங்கி திறம்பட நடத்துவதை கேட்டு வியந்தார் காந்தி.

1934 பிப்ரவரி 17ல் புதுச்சேரிக்கு வந்தார் காந்தி. ஒதியஞ்சாலை திடலில் பொதுக்கூட்டம் நடந்தது. காந்தியின் பேச்சை ராஜாஜி தமிழில் மொழி பெயர்த்து கூறினார். இந்த சிறுவர்கள் அழைத்து காந்தி புதுச்சேரிக்கு வருவாரா? என்று எள்ளி நகையாடிய சிலர் காந்தி வந்தது கண்டு வாயடைத்துப் போயினர்.

அக்காலக்கட்டத்தில் பொதுக்கூட்டம் நடத்துவது எளிதல்ல. அனுமதி பெறுவதும் கடினம். காந்தி வருகை என்பதால், அப்போதிருந்த கவர்னர் ஜார்ஜ் பொர்ரே அனுமதி அளித்தார். அதுமட்டுமின்றி காந்தியடிகளிடம் தனக்கிருந்த மதிப்பையும் வெளிப்படுத்தினார். கூட்டம் நடந்த ஒதியஞ்சாலை திடலுக்கே வந்து தனது காரில் இருந்தபடியே காந்தியை தரிசித்தார்.

3-வது கம்யூனிஸ்ட் அகிலம் அமீர் ஐதர்கானை கட்சியை கட்டும் பணிக்காக தென்னிந்தியாவுக்கு அனுப்புகிறது. பாகிஸ்தான்-பெஷா வரிலிருந்து அமீர் ஐதர்கான் 1931 ஜூனில் சென்னைக்கு வருகிறார். கட்சி சட்டவிரோதம் என தடை செய்யப்பட்டிருந்த காலம் அது.

அதுமட்டுமல்ல, அமீர் ஐதர்கான் மீரத் சதி வழக்கில் தேடப்படும் குற்றவாளியும் ஆவார். எனவே தலைமறைவாகவே இருந்து கட்சியை கட்ட வேண்டி இருந்தது. அவர் சிவப்பு நிறம்! ஐயங்கார் வீட்டு பிள்ளை போல் இருப்பார் என்பதால், தன்னை ஒரு பார்ப்பனன் என்று கூறிக் கொண்டும் தன்னுடைய பெயர் சங்கர் என்று சொல்லிக் கொண்டும், ஒரு பார்ப்பனர் வீட்டிலேயே வாடகைக்கு குடியேறினார்.

வரத முத்தயப்பன் தெரு, சென்னை என்பது அமீர் ஐதர் கான் தங்கியிருந்த வீட்டின் முகவரியாகும்.

அமீர் ஐதர்கான் பாஷ்யத்தை (1932ம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாள் சென்னைக் கோட்டையில் காவலர்கள் கண்ணில் படாமல் ஏமாற்றி விட்டு இருநூறு அடி உயர கொடி கம்பத்தில் ஏறி வெற்றிகரமாக ஆங்கிலேயேர் கொடியை இறக்கிவிட்டு இந்திய தேசிய கொடியை ஏற்றிவிட்டு சிறை சென்றவர்). தொடர்பு கொண்டு கட்சியைக் கட்டுவதில் தீவிரம் காட்டினார். புதுச்சேரியில் நடக்கும் நிகழ்வுகள் குறித்து அறிந்து அங்கு கட்சியை கட்டுவதற்கு துடிப்பானவர்கள் யார் இருக்கிறார்கள் என்று பாஷ்யத்திடம் கேட்டார் அமீர் ஐதர்கான்.

பாஷ்யத்தின் உறவினர்கள் வில்லியனூரில் இருந்தனர். பாஷ்யம் அவரது உறவினர்களிடம் கேட்க, அவர்கள் வில்லியனூர் ஆசிரியர் முத்துகுமாரசாமி தீவிர கம்யூனிச பற்றாளர் என்பது குறித்தும், பாரதிக்கே அவர் தோழன் என்பது குறித்தும் கூறினர். பாஷ்யம் ஆசிரியர் முத்து குமாரசாமியிடம் கேட்க, முத்துக்குமாரசாமி ஆசிரியர்தான் சுப்பையாவை பாஷ்யத்துடன் இணைப்பை ஏற்படுத்துகிறார். அவர் மூலம் அமீர் ஐதர்கானை சுப்பையா சந்திக்கிறார்.

அமீர் ஐதர்கானை சென்னையில் சுப்பையா சந்திக்கிற நாளில் தொழிற்சங்க தலைவர் சுந்தரய்யாவும் அங்கு வருகிறார். இவர்களின் சந்திப்பின் போது உலகை குலுக்கிய 10 நாட்கள், கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை புத்தகங்களை சுப்பையாவுக்கு வழங்குகிறார்கள்.

இவர்களை உள்ளடக்கியும் மேலும் சில தோழர்களை இணைத்தும் சர்வதேச மார்க்சிய வாசகர் வட்டம் ஆரம்பிக்கிறார்கள். நீண்ட காலம் அது நீடிக்கவில்லை. அமீர் ஐதர்கான் தங்கியிருந்த வீட்டிற்கு பலரும் வந்து போவதை மோப்பம் பிடித்து காவல்துறை அவரை கைது செய்து விடுகிறது. 1934ல் தான் மார்க்கிய சித்தாந்தங்களை படிக்கும் வாய்ப்பு தோழர் சுப்பையாவுக்கு கிடைக்கிறது.

வர்க்கப் போராட்டம் நடத்த வேண்டும் என்கிற உணர்வு சுப்பையாவுக்கு மேலோங்குகிறது. அரிசன சேவா சங்கம் அமைத்து அதன் மூலம் நண்பர்களுடன் சேரிகளுக்குச் சென்று சேவை புரிந்தார். சுப்பையாவுக்கு, அந்தக் குடும்பங்களுடன் நெருக்கமாக சந்தித்து பேசி பழகும் வாய்ப்பு கிடைத்தது.

ரோடியர் மில் (ஏஎப்டி), சவானா ஆலை (சுதேசி காட்டன் மில்) , கெப்ளே ஆலை (ஸ்ரீ பாரதி மில்) ஆகிய மூன்று பஞ்சாலைகளே அப்போது இருந்தன. வெள்ளை முதலாளிகள் ஆண்களையும், பெண்களையும், குழந்தைகளையும் வைத்து கசக்கிப் பிழிந்து வேலை வாங்கினர். காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை வேலை நேரம் என இருந்தது.

இதற்கு முடிவு காணவும், சட்டரீதியான உரிமைகளைப் பெற்றுத் தரவும் சுப்பையா உறுதி பூண்டார். தொழிலாளர்கள் வாழும் ஊர்களுக்கும், வீடு வீடாகவும் சென்று தலைமறைவாகவே கூட்டம் போட்டு பேசினார். 3 ஆலைகளின் தொழிலாளர்களையும் தயார் செய்தார்.

இயக்க பணிகள் குறித்தும், போராட்டம் பற்றியும் தொழிலாளர்கள் மற்றும் மக்களுக்கு கொண்டு செல்லும் நோக்கில் 1934 ஜூன் 15ல் சுதந்திரம் மாத பத்திரிக்கையாக ஆரம்பிக்கப்பட்டது. வா.ரா (வா. ராமசாமி), சங்கு சுப்ரமணியம், யோகி சுப்ரமணியம், பரலி நெல்லையப்பர், சுத்தானந்தபாரதி, பாரதியார் ஆகியோர் எழுதிய கதைகளும், கவிதைகளும் சுதந்திரம் பத்திரிக்கையில் வெளி வந்தன.

**1908லிருந்து பாரதியார் புதுச்சேரியில் இருந்ததால் ஆசிரியர் முத்துக்குமரசாமிக்கும் பாரதியாருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்துள்ளது. பாரதியார் எழுதிய பிரசுரிக்கப்படாத கவிதைகள் முத்துக்குமார சாமியிடம் இருந்துள்ளது. அதை அவர் பாரதியார் இறந்த பிறகும் சுதந்திரம் பத்திரிக்கையில் அச்சிட அளித்து, அச்சிட்டு வெளியாகியுள்ளது.**

1935 ஜனவரி 15 முதல் சுதந்திரம் வாரப்பத்திரிக்கையாக வெளி வந்துள்ளது. ஒரு பிரதியின் விலை 3 தம்டி என இருந்துள்ளது. 8 ஆயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளது. புதுச்சேரி, தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர் என எங்கும் சுதந்திரம் வினியோகிக்கப்பட்டுள்ளது. பெண்கள் மடியில் சுமந்து சுதந்திரத்தை கொண்டு போய் தொழிலாளர்களிடமும் மக்களிடமும் சேர்த்துள்ளனர்.

1934-35 ஆண்டுகளில் தலைமறைவாக சங்கம் அமைத்து செயல்பட்ட தொழிலாளர்கள் இறுதியாக 1936ல் 3 மில்களிலும் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போராட்டத்தை தலைமையேற்று நடத்தினார் சுப்பையா. ஜூலை 30 காலையில் பிரெஞ்சு அரசு போராடும் தொழிலாளர்கள் மீது சுழல் பீரங்கியால் சுட்டதில் 12 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

சுப்பையா இச்சம்பவம் குறித்து நேருவிடம் கூற, ''இந்நிகழ்ச்சி குறித்து பிரான்சுக்கு சென்றுஅங்குள்ள மக்கள் முன்னணி கட்சி அமைச்சர்களோடு நேரில் விவாதிப்பது நல்லது என்று ஆலோசனை அளித்தார் நேரு '' அதன் பேரில் நேரு அளித்த அறிமுக கடிதத்தை பெற்றுக் கொண்டு 1937 மார்ச்சில் பிரான்சுக்கு சென்றார் சுப்பையா.

பிரான்சுக்கு சென்ற சுப்பையா அங்குள்ள தொழிற்சங்க நிர்வாகிகளையும், கம்யூனிஸ்ட் கட்சியினரையும், அமைச்சர்களையும் சந்தித்தார். புதுச்சேரியில் நடந்த ஜூலை 30 படுகொலை பற்றி விரிவாக கூறினார்.

பிரெஞ்சு நாடாளுமன்றத்தில் கம்யூனிஸ்ட் எம்.பி.க்கள் கபிரியேல் பெரி, செமேர் ப்யர் ஆகியோர் இப்படுகொலை குறித்து கண்டித்து பேசினர். தொழிலாளர் சட்ட உரிமை, 8 மணி நேர வேலை உரிமை புதுச்சேரிக்கு உடனடியாக வழங்கப்பட வேண்டும், அதற்கான சட்டம் இயற்றப்பட வேண்டும் என வலியுறுத்தினர்.

பிரெஞ்சு நாடாளுமன்றத்தில் தொழிலாளர் நலச்சட்டங்கள் இயற்றப்பட்டன.

1937 ஏப்ரல் 6ம் நாள் 8 மணி நேர வேலை உரிமை சட்ட ரீதியான தொழிலாளர் சட்டங்கள் தொழிலாளர்களுக்கு கிடைத்தது.

தங்கள் உரிமைகளுக்காக போராடிய தொழிலாளர்களை ஒன்றிணைத்து பிரெஞ்சிந்திய விடுதலை போராட்டத்தை நடத்தினார் சுப்பையா. பல்வேறு சித்திரவதை கொடுமைகளுக்கு மத்தியில் 1947 ஆகஸ்ட் 15க்கு பிறகும் 7 ஆண்டு காலம் புதுச்சேரி விடுதலை போராட்டம் நடந்தது. 1954 நவம்பர் 1ல் புதுச்சேரிக்கு விடுதலை கிடைத்தது.

1993 அக்டோபர் 12 சுப்பையா நினைவு நாள்!

தொடர்புக்கு 9443135254

# ..ணுக்கு வாருங்கள்!

நீ சட்டப்படி யாரையும் அடிக்க முடியாது.. ஆனால் உங்களால் தாக்க படிக்கிறவன் தற்காப்புக்காக தாக்க சட்ட உரிமை இருக்கிறது. தேசப்பிதா காந்திஜியை சுட்டுக் கொன்றவனை போலீஸ் அதிகாரி அடித்துக் கொன்றதுண்டா? இல்லை! நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது. அவன் குற்றவாளி என்று ஊர்ஜிதம் ஆனபின்னர், சட்டம் தண்டனை தந்தது. அப்படி இருக்க, நீ எப்படி எனது புத்திரர்களை அடிக்கலாம்?

நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவன் என்ற முறையில் பகிரங்கமாக சொல்கிறேன். இனி எந்த தொழிலாளி யாவது போலீஸ் நிலையத்தில் வைத்து தாக்கப்பட்டால் திருப்பித் தாக்குங்கள். தாக்குகிற போலீஸ் அதிகாரியின் குரல்வளையை கடித்து பிணம் ஆக்குங்கள். ஒன்று அடிபட்டு செத்து நமது பிணம் வெளியே வரவேண்டும் அல்லது அடிக்கிற போலீஸ் அதிகாரியின் பிணம் வெளியே வரவேண்டும்.

திருப்பூர் தொழிலாளி வர்க்கத்தின் சார்பில் நான் போர் பிரகடனம் செய்கிறேன். பொய் வழக்குப் போட்டு, மிரட்டி, பணம் பறிக்கும் இந்த கூட்டத்தை, அடக்குமுறை நடத்த துணிந்து விட்ட கொடுமைகாரர்களை, லஞ்சத்தில் ஊறிப்போன இந்த நாணயம் கெட்ட கூட்டத்தை, அடிபணிய வைக்காமல் நான் விட போவதில்லை" என்று பாலனால் தன்னுடைய புத்திரன் என்று ஏற்கப்பட்ட தமிழ்நாடு ஏஐடியுசி தலைவர் தோழர் கே. சுப்பராயன் இன்று திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர்.

விக்கிரமசிங்கபுரம் தூத்துக்குடி தொழிலாளி வர்க்கத்தின் மதிப்புமிக்க தலைவர் பாலன். திருப்பூரிலே முழக்கம் இட்டதற்கு திருநெல்வேலி மாவட்ட தொழிலாளி வர்க்கத்தின் களத்திலே, மக்களுக்காக போராட்டங்களை நடத்தியது தான் அடித்தளம்.

தூத்துக்குடியில் தோணி தொழிலாளர்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆட்பட்டு இருந்த நேரம்.. கிடைக்கும் வருமானத்தில் பாதியை முதலாளிகளுக்கு கொடுக்க வேண்டும். 'மகமை' என்ற பெயரில் சாதியை வளர வைக்க கொடூர சுரண்டல் நடத்தப்பட்டது. பொங்கி எழுந்த பாலன் தொழிலாளர்களை சங்கமாக அணி திரட்டினார். சாதி, மத சக்திகளுடன் சேர்ந்துகொண்டு போலீஸ்காரர்களும் தொழிலாளர்கள் மீது தாக்குதலை தொடுத்தனர். கத்தோலிக்க பெண்கள் தங்களிடமிருந்த ஒரே ஆயுதமான உலக்கையுடன் களத்தில் இறங்கினர். இருபத்தி மூன்று நாட்கள் நடந்த போராட்டம் வெற்றி பெற்றது.

1946இல் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பாலன் மீது வாரன்ட் பிறப்பிக்கப்பட்டது. தலைமறைவானார் பாலன். விக்கிரமசிங்கபுரத்தில் தடை உத்தரவை மீறி கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டத்தில் பாலன் பேசுகிறார் என்று அறிவிக்கப்பட்டது. போலீசார் சுறுசுறுப்பு அடைந்தனர். கூட்டத்தை தடை செய்தால் பாலனை கைது செய்ய இயலாது என்று கூட்டத்தை தடை செய்யவில்லை. சிவந்தியப்பர் திடலில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் திரண்டிருந்தனர். பாலன் வருவாரா? வருவாரா? என்று ஆவலோடு மக்களும், கைது செய்யும் முனைப்போடு போலீசாரும் காத்திருந்தனர். பாலன் வந்தார்.

திடீரென்று மேடையில் தோன்றினார். பேசவும் செய்தார். "நான் இந்த மண்ணின், மக்களின் மைந்தன். அதிகார வர்க்கமே! நீ என்னை கைது செய்ய முயன்றால் இங்கு இரத்தம் கரைபுரண்டு ஓடும். தாமிரபரணி ஆற்றின் தண்ணீர் செந்நீர் ஆகும் ஜாக்கிரதை "மக்கள் ஆவேசமாக எழுந்தனர். "போலீசே திரும்பிப் போ! பாலனை கைது செய்ய அனுமதியோம்." ஆவேச முழக்கம் எதிரொலித்தது. பாலன் மீண்டும் தலைமறைவானார்.

நாடு விடுதலைக்குப்பின் வெளி உலகத்திற்கு வந்தார். 1948 இல் மீண்டும் தலைமறைவானார். நெல்லைச் சதி வழக்கு புனையப்பட்டது. கடைசிவரை பாலதண்டாயுதத்தை காவல்துறையினரால் கைது செய்ய முடியவில்லை. சூழ்ச்சியினால் ஆயுள் தண்டனை அனுபவித்த மாபெரும் தோழன் பாலன் உலவிய திருநெல்வேலியில் தமிழ்நாடு ஏஐடியூசி இருபதாவது மாநாடு 2022 டிசம்பர் 1,2,3 தேதிகளில் நடைபெறுகிறது.

மூன்றாம் தேதி சனிக்கிழமை மாலை தென்னகத்தின் ஆக்ஸ்போர்ட் என்று அழைக்கப்படுகின்ற பாளையங்கோட்டை புனித சேவியர் கல்லூரி அருகில் உள்ள கேன்டீன் ஸ்டாப்பிலிருந்து மாபெரும் பேரணி தொடங்குகிறது. 1972 ஆம் ஆண்டு மாணவர்களின் உரிமைக்காக நடைபெற்ற போராட்டத்தில் உயிர் நீத்த மாணவ தோழன் லூர்தநாதன் சிலையருகே மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறும். தமிழகத்தின் தொழிலாளி வர்க்கமே ஆயிரமாயிரமாய் அணி திரண்டு வாருங்கள்.. என அன்போடு அழைக்கிறோம்.. உங்கள் வருகைக்காக வழிமேல் விழி வைத்து வரவேற்கக் காத்திருக்கிறோம். நெல்லையை சிவப்பு நிறமாக மாற்ற வாரீர்!

தொடர்புக்கு 9443468710

# காக்கழனி மகாலிங்கம் மறைவு
## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நாகை மாவட்ட முன்னணி தலைவர் காக்கழனி வை.மகாலிங்கம் (77) அக்.10 அன்று அதிகாலை, அவரது இல்லத்தில் காலமானார் என்ற துயரச் செய்தி ஆழ்ந்த வேதனை அளிக்கிறது.

வை.மகாலிங்கம் சிறுவயது முதலே விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் சங்கங்களில் செயல்படத் தொடங்கியவர், தொடர்ந்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து, கிளைச் செயலாளர், கீவளூர் ஒன்றியச் செயலாளர், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் என பல்வேறு நிலைகளில் பொறுப்பேற்று செயல்பட்டவர்.

மக்கள் நன்மதிப்பை பெற்ற மகாலிங்கம் காக்கழனி ஊராட்சி தலைவர் பொறுப்புக்கு தேர்வு செய்யப்பட்டு, சிறப்பாக பணியாற்றியவர். இவருக்கு ஒரு மகனும் இரண்டு மகள்களும் உள்ளனர். இதில் மகன் வி.எம். மகேந்திரன் டாஸ்மாக் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். தொழிற்சங்க நடவடிக்கையில் தீவிரமாக செயல்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

தோழர் வை.மகாலிங்கத்தின் மறைவுக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# வில்லிசை கலைஞர் சுப்பு ஆறுமுகம் மறைவு
## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

தமிழ்நாட்டின் தலைசிறந்த வில்லிசை கலைஞர் சுப்பு ஆறுமுகம் (94) அக்.10 அன்று காலமானார் என்ற துயரச் செய்தி ஆழ்ந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

நெல்லை மாவட்டம், புதுக்குளம் கிராமத்தில் 1928ஆம் ஆண்டு பிறந்த சுப்பு ஆறுமுகம், வில்லிசை கலையில் பதினான்கு வயதில் பிரபலமடையத் தொடங்கியவர். நவீன இசை உலகில் “வில்லிசை” மருகிவரும் சூழலில் சுப்பு ஆறுமுகம் தனது தனித்துவமிக்க “வில்லிசை” கலையில் முத்திரை பதித்தவர். பேராசான் ஜீவா வாழ்க்கையை வில்லிசையில் வடித்தவர். அண்ணல் மகாத்மா காந்தி, பாரதி, திலகர், புத்தர் என ஏராளமான ஆளுமைகளை வில்லிசை கலை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்த அற்புதக் கலைஞர். பாரம்பரியப் பெருமை கொண்ட “வில்லிசை” கலையின் உயிர் வடிவமாக திகழ்ந்த சுப்பு ஆறுமுகத்தின் இழப்பு எளிதில் ஈடுசெய்ய இயலாதது.

அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரை பிரிந்து வாடும் அவரது வாழ்விணையர் திருமதி. மகாலெட்சுமி உள்ளிட்ட குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# திருப்பூர் குமரன் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை

ஈரோடு: தேச விடுதலைப் போராட்டத் தியாகி ‘கொடி காத்த குமரன்’ எனப் போற்றப்படும் திருப்பூர் குமரனின் 118வது பிறந்த நாளையொட்டி அவர் பிறந்த ஊரான சென்னிமலையில் அக்.04 அன்று, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அவரது திருவுருவச் சிலைக்கு மாலையணிவித்து அவரது திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டத் துணைச் செயலாளர் எஸ்.சின்னசாமி, மாவட்டக்குழு உறுப்பினர் எஸ்.பொன்னுசாமி, சென்னிமலை ஒன்றியச் செயலாளர் எம்.செங்கோட்டையன், ஒன்றியத் துணைச் செயலாளர் ஆர்.கண்ணுசாமி, முன்னாள் ஒன்றியச் செயலாளர் எம்.நாகப்பன், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் ஆர்.ரவி, ஜி.வீரக்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சுங்கச் சாவடி தொழிலாளர் போராட்டத்திற்கு ஒன்றிய அரசு தீர்வு காண வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

கள்ளக்குறிச்சி மாவட்டம், செங்குறிச்சியில் இயங்கி வரும் நெடுச்சாலை சுங்கச் சாவடியில் 120 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்கள் தொழிற்சங்கம் அமைத்து, சட்டபூர்வ உரிமைகளை அமலாக்குமாறு நிர்வாகத்திடம் கோரிக்கை வைத்தனர். இதனால் ஆத்திரமடைந்த நிர்வாகம் 28 முன்னணி தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டது.

நிர்வாகத்தின் பழிவாங்கும் நடவடிக்கையை கண்டித்தும், ஆட்குறைப்பு நடவடிக்கையை கைவிட்டு அனைவருக்கும் வேலை வழங்க வேண்டும் என வலியுறுத்தி, தொழிலாளர்கள் அனைவரும் இம்மாதம் முதல் தேதியில் (01.10.2022) முதல், சுங்கச் சாவடியில் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். தொழிலாளர்களுக்கு ஆதரவாக, அவர்களது குடும்பத்தினரும் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர். தொழிலாளர் போராட்டத்தில் தலையிட்டு தீர்வுகாண வேண்டிய ஒன்றிய அரசின் நெடுஞ்சாலைத்துறை மௌனம் காத்து, தனியார் கார்ப்ரேட் நிறுவனத்துக்கு ஆதரவு காட்டி வருகிறது.

இந்த நிலையில் கடந்த 04.10.2022 முதல் தொழிலாளர்கள் உண்ணாநிலைப் போராட்டத்தை துவக்கியுள்ளனர். மூன்றாவது நாளான அக்.07 அன்று ஜெகதீசன் த/பெ. நாகராஜன் என்ற தொழிலாளி மயக்கமடைந்த நிலையில், உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

போராட்டம் மேலும் தீவிரமடைந்தது, விரிவடையும் முன்பு ஒன்றிய அரசு தொழிலாளர் கோரிக்கைகளில் தீர்வு கண்டு, போராட்டத்தை விரைந்து முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்றும், நூற்றுக்கணக்கான தொழிலாளர் குடும்பங்கள் போராடி வரும் நிலையை தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசுக்கு எடுத்துக் கூறி, சுமூகத் தீர்வு காண அழுத்தம் தர வேண்டும் என்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# அரசியல் கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற/சட்டமன்றங்களின் அதிகார வரம்பிற்குள் தேர்தல் ஆணையத்தின் அத்துமீறல்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு கண்டனம்

அரசியல் கட்சிகள் மற்றும் சட்டமன்றங்களின் அதிகார வரம்பிற்குள் தேர்தல் ஆணையம் அத்துமீறி தலையிட்டு இருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு கண்டித்துள்ளது. இது தொடர்பாக கட்சியின் தேசிய செயற்குழு விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பது பின்வருமாறு:

அரசியல் கட்சிகள் வாக்காளர்களுக்கு அளிக்கும் தேர்தல் வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துவதற்கான நிதியை அக்கட்சிகள் எவ்வாறு திட்டமிடப் போகின்றன என்பதை அரசியல் கட்சிகள் வெளியிட வேண்டும் என்பதற்காக தேர்தல் நடத்தை விதிமுறைகளில் திருத்தங்கள் செய்யும் நடவடிக்கைகளில் தேர்தல் ஆணையம் ஈடுபட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிராகரிக்கிறது.

தேர்தல் ஆணையத்தின் இந்த நடவடிக்கையானது, செயல்திட்டங்களை வகுப்பதற்கான அரசியல் கட்சிகளின் சுதந்திரத்தைப் பாதிப்புக்கு உள்ளாக்கும்.

நியாயமான மற்றும் சுதந்திரமான தேர்தலை நடத்துவதற்கான அதிகாரத்தைத் தான் இந்திய அரசியலமைப்புச் சட்டம் தேர்தல் ஆணையத்திற்கு அளிக்கிறது. அரசியல் கட்சிகளின் கொள்கைகளை முறைப்படுத்துவதற்கான அதிகாரம் தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்படவில்லை. எனவே, தேர்தல் ஆணையத்தின் இது போன்ற நடவடிக்கைகள் விதிமுறை மீறல் ஆகும்; அரசியலமைப்புச் சட்டத்தை அவமதிப்பதாகும்; அரசியல் கட்சிகளின் சட்டப்படியான உரிமைகளைப் பறிப்பதாகும்.

தேர்தல் ஆணையத்தின் இது போன்ற நடவடிக்கைகளை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிராகரிப்பதோடு, அவற்றைக் கைவிடுமாறு வலியுறுத்துகிறது.

இவ்வாறு தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# மஹ்ஷா அமினி படுகொலைக்கு எதிராகப் போராடி வரும் ஈரான் மக்களுக்கு ஆதரவு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

ஈரான் நாட்டு காவல்துறையின் அங்கமான மத ஒழுக்கப்பண்பு வழிகாட்டுப்படை கடந்த செப்டம்பர் மாதம், 22 வயதேயான இளம்பெண் மஹ்ஷா அமினியைப் படுகொலை செய்ததை எதிர்த்துப் போராடி வரும் ஈரான் மக்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு அதன் ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது.

பெண்கள், இளைஞர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் தற்போதைய இந்தப் போராட்டங்கள், மதச்சார்பு கொண்ட அரசாங்கத்திற்கு எதிரான அவர்களின், முன்னெப்போதும் கண்டிராத, எழுச்சி, வீரம் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றை வெளிப்படுத்துவதாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. இந்தப் போராட்டங்கள் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்திருப்பதோடு, மதச்சார்பு கொண்ட அரசாங்கத்திற்கு எதிரான ஈரானிய பெண்களின் கிளர்ச்சிக்கு மகத்தான ஆதரவைப் பெற்றுத் தந்துள்ளன.

ஏற்கனவே, 30 பெண்கள் (பெரும்பாலானவர்கள் இளம்பெண்கள்) இந்த அரசாங்கத்தால் கொல்லப்பட்டுள்ளார்கள். எனினும், இந்த அரசாங்கத்தின் அராஜகப் போக்கால் மக்கள் எழுச்சியை அடக்கி, ஒடுக்கிவிட முடியவில்லை.

போராடி வரும் ஈரானிய மக்களுக்கு ஆதரவைத் தெரிவிக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, அம்மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்படும் அனைத்துவித வன்முறை வெறியாட்ட நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும் எனக் கோருகிறது; கைது செய்யப்பட்டுள்ள போராட்டக்காரர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பதோடு, மஹ்ஷா அமினியைப் படுகொலை செய்தவர்களைத் தண்டிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. அதே சமயம், எந்தச் சூழலிலும், ஈரான் நாட்டின் உள்விவகாரங்களில் அந்நிய சக்திகளின் தலையீடு இருக்கக் கூடாது என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும் வலியுறுத்துகிறது.

அமைதி மற்றும் நீதியை உத்தரவாதப்படுத்தக்கூடிய ஒரு தேசிய ஜனநாயக குடியரசு அமைந்திட வேண்டும் என்பதற்காக கடந்த 80 ஆண்டுகாலமாக அடக்குமுறைகளை வெற்றிகரமாக எதிர்கொண்டு வரும் ஈரான் துதே கட்சிக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு தெரிவித்துக் கொள்கிறது.



ஜி.சத்திய பாலன்

# கரிசல் பூமியில் வாழும் வரலாறு
# தோழர் லி.அய்யலுசாமி

கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 35 ஆண்டுகாலம் சட்டமன்ற உறுப்பினர் பதவியை தக்க வைத்திருந்தது. இதில் ஐந்து முறை சோ.அழகர்சாமியும், தலா ஒரு முறை லி.அய்யலுசாமியும், எஸ்.ராஜேந்திரனும் வெற்றி பெற்றிருந்தனர்.

லி.அய்யலுசாமியின் சொந்த கிராமம் கோவில்பட்டி அருகே உள்ள குலசேகரபுரம் என்ற பெருமாள்பட்டி ஆகும். தனது இளம் வயதில் சோ.அழகர்சாமி, வி.எஸ்.காந்தி, இரா. நல்லகண்ணு, லிங்கம்பட்டி அருமைநாயகம் போன்ற தலைவர்களின் தொடர்பால் விவசாய சங்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் அப்பகுதி மக்களை ஒன்று திரட்டி போராட்டக் களத்தில் நின்றவர். பல வீரியமிக்க விவசாய போராட்ட காலகட்டங்களில் தலைமறைவு வாழ்க்கையை சந்தித்தவர்.

1966 ஆம் ஆண்டு தமிழகம் முழுவதும் அதுவரை சந்தித்திராத பஞ்சத்தை சந்தித்தது. கோவில்பட்டி சுற்றுவட்டார பகுதி மானாவாரி விவசாயிகள் மிகப்பெரும் வறுமைக்கு ஆட்பட்டனர். ஆனால் அரசு கட்டாய வரி வசூலை தீவிரமாக அமல் படுத்தியது. வரி செலுத்தாத விவசாயிகளின் கால்நடைகள் மற்றும் கருவிகள் ஜப்தி செய்து மந்தையில் குவிக்கப்பட்டு அரசு நிர்வாகத்தால் ஏலம் அறிவிக்கப்பட்டது. அன்றைய தினம் வரிகொடா இயக்கத்தை முன்னின்று நடத்தியவர்கள் அன்றைய சட்டமன்ற உறுப்பினர் சோ.அழகர்சாமி, இரா. நல்லகண்ணு, லி. அய்யலுசாமி மற்றும் வில்லிசேரி இராமசுப்பு போன்ற விவசாயிகள் சங்கத்தின் முன்னணி தலைவர்கள் ஆவார்கள்.

வரி கட்டாமல் ஜப்தி செய்யப்பட்ட ஏழை விவசாயிகளின் கால்நடைகளை எந்த விவசாயிகளும் ஏலத்தில் வாங்க கூடாது என்று விவசாயிகளின் போராட்டத்தை முன்னெடுத்த தலைவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். இவர்களின் வார்த்தைக்கு ஒட்டுமொத்த கரிசல் பூமியும் கட்டுப்பட்டது. அரசு அறிவித்த ஏலத்தை விவசாயிகள் புறக்கணித்தனர். ஆதலால் கால்நடைகள் ஏழை விவசாயிகளிடம் எப்படி ஜப்தி செய்யப்பட்டதோ அப்படியே மீண்டும் திரும்பி ஓட்டிச் சென்று விவசாயிகள் வீடுகளில் கட்டப்பட்டது. கோவில்பட்டி வட்டாரம் சந்தித்த விவசாயிகள் போராட்டத்தில் வரி கொடா இயக்கம் முக்கிய வரலாற்று தடத்தை பதித்துள்ளது. அப்போராட்டத்தை முன் நின்று நடத்திய தோழர்களில் லி.அய்யலுசாமியும் ஒருவர்.

லி.அய்யலுசாமி தனது சொந்த கிராமமான குலசேகரபுரம் என்ற பெருமாள் பட்டியில் ஐந்து முறை பஞ்சாயத்து தலைவராக பணியாற்றி இருக்கிறார். இதில் மூன்று முறை போட்டி இல்லாமலும் இரண்டு முறை போட்டியிலும் வெற்றி பெற்றவர். கூட்டுறவு அமைப்பின் மூலம் விவசாயிகளினுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தலாம் என்கின்ற அன்றைய சோவியத் கட்டமைப்பின் மீது அவருக்கு அதிகமான ஈடுபாடு ஏற்பட்டது. அதன் மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படும் எனும் நம்பிக்கையில் கூட்டுறவு நிறுவனப் பணிகளை சிறப்புற செய்தார். அதில் முக்கியமானது கடலையூர் பால்பண்ணை கூட்டுறவு சங்கம். விவசாயம் பருவ மழை பொய்த்து போன காலகட்டத்தில் கூட விவசாயிகளுக்கு கறவை மாடுகள் மூலம் பால் பண்ணை தொழிலை அப்பகுதியில் அறிமுகப்படுத்தினார். அதற்கு தீவனம் உள்ளிட்ட மாற்று ஏற்பாடுகளையும் செய்தார். இவரது சீரிய செயல்பாடு மற்றும் மக்கள் சேவை காரணமாக அந்த கூட்டுறவு பால் பண்ணை இன்றுவரை சீரும் சிறப்புமாக செயல்பட்டு வருகிறது.



கூட்டுறவு பால்பண்ணை தேர்தல்களில் லி.அய்யலுசாமி தொடர்ச்சியாக வெற்றி பெற்றார். அவரது மக்கள் பணி காரணமாக அவரது காலத்திற்கு பின்பும் அந்த கூட்டுறவு சங்கத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர்களே அங்கே தேர்தலில் வெற்றி பெற முடியும் என்ற சூழலை உருவாக்கியவர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் 1991 ஆம் ஆண்டு நடந்த கோவில்பட்டி சட்டமன்றத் தேர்தலில் முதலில் அய்யலுசாமி போட்டியிட்டார். குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் தனது வெற்றி வாய்ப்பை இழந்தார். மீண்டும் 1996 ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றார். சட்டமன்ற உறுப்பினராக பணிபுரிந்த காலகட்டத்தில் ஒரு எளிய வெள்ளந்தி விவசாயியின் தோற்றத்தில் இருக்கும். லி.அய்யலுசாமியை அனைத்து மக்களும் எந்த கட்சி பாகுபாடு இன்றி அணுகுகின்ற நபராக இருந்தார்.

இன்றைய தலைமுறையின் கோவில்பட்டியின் எளிய சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற அடையாளத்தை அதிகம் பதித்தவராக விளங்கினார். தூத்துக்குடி மாவட்டத்தின் முதல் சமத்துவ புரத்தை கோவில்பட்டிக்கு கொண்டு வந்தார். தூத்துக்குடி மருத்துவமனை மருத்துவக் கல்லூரியாக மாற்றப்பட்ட பொழுது தலைமை மருத்துவமனையை எங்கு அமைப்பது என்கின்ற போட்டி சூழல் நிலவியபோது தனது விடாப்பிடியான போராட்டத்தால் கோவில்பட்டிக்கு கொண்டு வந்தவர்.

எட்டையபுரம் தனி தாலுகாவாக உருவாக அரசிடம் கோரிக்கை வைத்து வெற்றி கண்டவர். சட்டமன்றத்தில் விவசாய மானிய கோரிக்கையின் போது விவசாயிகளின் நலன்கள் குறித்தும் விவசாய நிலங்களை ஆக்கிரமித்து இருக்கின்ற கழைச்செடியான பார்தீனீய செடிகளை அப்புறப்படுத்துவதை அரசு கொள்கை முடிவாக எடுக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டி பேசியவர். தமிழகம் முழுதும் விவசாய நிலங்களை வறட்சி பகுதியாக அறிவிப்பதற்கு முன்பு அணாவரி சான்று வழங்க வேண்டும் என்ற பிரிட்டிஷ் ஆட்சி காலத்து காலாவதி சட்டம் நடைமுறையில் இருந்தது. அதை சட்டமன்றத்தில் சுட்டிகாட்டி அணாவரி சான்றை ரத்து செய்ய காரணமாக இருந்தார்.

தமிழகத்தின் பிரசித்தி பெற்ற மாதவரம் பால் பண்ணையை மீண்டும் திறக்க வேண்டும் என கோரிக்கை வைத்து சட்டமன்றத்தில் பேசினார். லி.அய்யலுசாமி சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலகட்டத்தில் தான் தூத்துக்குடியின் நாசகர ஸ்டெர்லைட் ஆலை துவக்க பணிகள் நடந்தது. அந்த ஸ்டெர்லைட் ஆலை எதிர்ப்பு குழுவின் தலைவராக இருந்தவர் அன்றைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாவட்ட செயலாளர் எம்.அப்பாதுரை. தூத்துக்குடி மாவட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எடுத்த ஸ்டெர்லைட் எதிர்ப்பு நடவடிக்கைகள் அனைத்திலும் லி. அய்யலுசாமி பங்கேற்றார். சட்டமன்றத்திலும் தனது எதிர்ப்பை பதிவு செய்தார்.

கோவில்பட்டியின் பிரதான தொழில்களில் முக்கியமானது தீப்பெட்டி ஆலைகளாகும். தீப்பெட்டி தொழில் இயந்திர மயமாக்களை கண்டித்து அன்றைய சிவகாசியின் நாடாளுமன்ற உறுப்பினர் வி. அழகிரிசாமியும் மறைந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் எஸ்.அழகுமுத்து பாண்டியன் போன்ற முன்னணி தோழர்கள் இணைந்து கோவில்பட்டியில் உண்ணாவிரதமும் தீப்பெட்டி தொழிலாளர்களை திரட்டி நெடிய போராட்டங்களும் நடத்தினர். கோவில்பட்டியின் பிரதான தொழிற்சாலை நூற்பாலை ஆகும். தொழிலாளர் கூலி உயர்வுக்காக நடந்த தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை வலுவாக நடத்தியவர்.

சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோதும் சரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உடைய மாவட்ட செயலாளராக இருந்தபோதும் சரி, அவர் எளிய மக்களை அதிகம் நேசித்தார். பொது வாழ்விலும் தனது அரசியல் வாழ்க்கையிலும் ஒரு தூய்மையான வாழ்வை வாழ்ந்தவர் லி.அய்யலுசாமி.

சட்டமன்ற உறுப்பினராக, விவசாயிகள் மற்றும் ஏழை மக்களின் தோழனாக கோவில்பட்டி மக்களின் மனதில் நீங்கா இடம் பெற்றவர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லி.அய்யலுசாமி.

லி.அய்யலுசாமி நினைவு தினம் 23.10.2022

தொடர்புக்கு 9443040082

# பன்முகத்தன்மைக்கு வேட்டு வைக்கும் பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பல்

## கே.சுப்பராயன் எம்.பி. குற்றச்சாட்டு

உபா சட்டத்தையும், என்.ஐ.ஏ.அமைப்பையும், பயன்படுத்தி ஜனநாயகத்தின் குரல் வளையை நெரிக்கும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்தும், தமிழ்நாட்டில் இணை ஆட்சி செய்ய துடிக்கும் கவர்னரை கண்டித்தும், மனித நேய மக்கள் கட்சி சார்பாக மாபெரும் மக்கள் திரள் ஆர்ப்பாட்டம் மனித நேய மக்கள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் ப.அப்துல்சமது தலைமையில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சு.வெங்கடேசன், மாணிக்தாகூர், மக்கள் கண்காணிப்பகத்தின் ஹென்றி திபேன், மதிமுக மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன் பங்கேற்று கண்டன உரை நிகழ்த்தினர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கே.சுப்பராயன் எம்.பி. பங்கேற்று பேசும்போது, இந்த மாபெரும் ஆர்ப்பாட்டத்தின் மூலம் இங்கே முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை உபா சட்டம் வாபஸ் பெறப்பட வேண்டும்; ரத்து செய்யப்பட வேண்டும் என்பதுதான்.

ஒரு ஜனநாயக அரசியல் அமைப்பில், இத்தகைய சட்டத்தை நிறைவேற்றி இருப்பது என்பது ஆட்சியாளர்கள் எவ்வளவு ஜனநாயக விரோதிகளாக இருக்கிறார்கள் என்பதை அம்மணமாக அம்பலப்படுத்தி இருக்கிறது. சிறுபான்மை மக்களை பழிதீர்க்க கூடிய கருவியாகவே என்.ஐ.ஏ வை வைத்திருக்கிறார்கள்; பயன்படுத்துகிறார்கள்.

ஒரு அரசியல் ஆயுதமாக அவற்றை பயன்படுத்துகிறார்கள். இவர்கள் அதிகாரத்தில் இருப்பதால் என்ன நடக்கும் என்பதை கடந்த ஏழரை ஆண்டு அனுபவத்தில் காட்டிவிட்டார்கள். ஏழரை ஆண்டு ஆட்சி அதிகாரத்தில் எதுவுமே நிகழ்த்தப்படவில்லை, நாடு சர்வ நாசம் ஆகியுள்ளதை மெய்ப்பித்துள்ளார்கள்.

ஒன்றே ஒன்று நடத்தப்பட்டிருக்கிறது. பல ஆயிரவருட காலம் ஆலவிருட்சமாக இந்த மண்ணில் விளைந்து வளர்ந்து நின்ற ஜனநாயக நெறிமுறைகள், வேற்றுமையிலும் ஒற்றுமை காண்கிற பண்பு, பன்முகத்தன்மை, அனைத்திற்கும் கொள்ளிவைக்கின்ற கட்சியாக இந்த ஆர்எஸ்எஸ், பாஜக கும்பல் இருக்கிறது. எறும்பைக் கூட நசுக்காத, எந்த ஒன்றுக்கும் தீங்கும் செய்யாத மகாத்மா காந்தியடிகளின் ரத்தத்தில் கை கழுவி கொண்ட கும்பல் தான் இந்த கும்பல். இந்த கும்பல் ஒரு நிமிடம் கூட அதிகாரத்தில் நீடிக்க தகுதியற்றவை.

ஆனாலும் அதிகாரத்தில் நீடிப்பது இந்தியாவின் துர்தாஷ்டம். ஆனால் ஒன்றை மறந்துவிடக்கூடாது, சகல அஸ்திரங்களையும் பயன்படுத்தி மோடி, அமித்ஷா, இருவரும் பெறமுடிந்தது 37சதவீத வாக்குகள் மட்டுமே, 63சதவீதம் மக்கள் பாஜக அதிகாரத்திற்கு வரக் கூடாதென்றுதான் வாக்களித்தார்கள். அவர்களது வாக்கு சதவீதம் தற்போது மேலும் கரைந்து வருவதை விவரங்கள் தெளிவாக காட்டுகின்றன. அதற்காக தான் இந்துத்வா என்ற ஆயுதத்தை கையில் எடுத்துள்ளார்கள், இதன் மூலம் இந்து மத மக்களின் பெரும்பான்மை மக்களை ஐக்கியப்படுத்தி தமக்கானதாக கட்டமைத்துக்கொண்டால் நிரந்தரமாக நாடாளலாம் என நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அது ஒரு போதும் நிறைவேறாது என்பதை இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் ஒவ்வொரு நாளும் வெளிப்படுத்தி வருகின்றன. சகோதரர்களே இஸ்லாமியர்களை பற்றி குறைசொல்ல இவர்களுக்கு எந்த தகுதியும் இல்லை. என்.ஐ.ஏ., உபா சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் முதலில் 2002குஜராத்தில் நடைபெற்ற இனப்படுகொலைக்கு அமித்ஷாவையும், மோடியையும் தான் கைது செய்ய வேண்டும். அவர்கள் தான் குற்றம் புரிந்தவர்கள்.

உள்ளே இருக்க வேண்டியவர்கள் வெளியே இருக்கிறார்கள் அதிகாரத்தில். வெளியே இருக்க வேண்டியவர்கள் உள்ளே இருக்கிறார்கள் என்பது ஒரு விபத்துதான். இந்த விபத்திற்கு காரணமான இந்த தீயசக்திக்கு எதிராக அனைத்து தரப்புகளும் ஒன்றுபட வேண்டும்.

இதனை புரிந்து கொண்டு அனைத்து தரப்பு மக்களையும் ஐக்கியப்படுத்த வேண்டும். பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு தீண்டாமை என்ற கொடுமையை உருவாக்கி தந்த தீய பிராமனிய மேலாதிக்கத்தை வீழ்த்துவதற்கு நாம் எல்லோரும் ஒரு தாய் மக்களாக அணிவகுத்து நின்று இந்த பாஜக – ஆர்எஸ்எஸ் அதிகாரத்திற்கு சமாதி எழுப்பும் வரை இங்கே பறக்கும் கொடிகள் தேர் கொடிகளாக மட்டுமல்லாமல்; போர் கொடிகளாக பறக்கட்டும். அதில் உங்களோடு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து போராடும் என சூளுரைத்தார்.

# தொழிலதிபர் எம்.ஏ.சி.எஸ். ரவீந்திரன் துணைவியார் மறைவு

## இரா.முத்தரசன் ஆறுதல்

விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் தொழிலதிபர் எம்.ஏ.சி.எஸ். ரவீந்திரன் அவர்களின் துணைவியார் ஆர்.நிர்மலா காலமானார். சாத்தூரில் நடைபெற்ற தகஇபெ மாநில மாநாட்டின் வரவேற்பு குழு தலைவராக இருந்து சிறப்பாக செயல்பட்டவர் எம்ஏசிஎஸ். ரவீந்திரன். விருதுநகர் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு வருகை தந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் சாத்தூரிலுள்ள எம்ஏசிஎஸ். ரவீந்திரன் வீட்டிற்கு சென்று ஆறுதல் கூறினார். அவருடன் மாநில செயற்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, தகஇபெ மாநில பொதுச்செயலாளர் மருத்துவர் த.அறம், தஔவாஇ மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார் ஆகியோர் சென்றிருந்தனர்.

# தீபாவளிக்கு அரிசி, பருப்பு, எண்ணைய் உள்ளிட்டவைகளை தட்டுப்பாடு இல்லாமல் வழங்கிடுக

## சிபிஐ மாவட்ட ஆட்சியரிடம் மனு

விருதுநகர் மாவட்ட ஆட்சியரிடம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நியாய விலைக்கடைகளில் தரமான அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் உள்ளிட்ட பொருட்களை தட்டுப்பாடு இல்லாமல் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டு மனு கொடுக்கப்பட்டது. மாநில செயற்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம், தஔவாஇ மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார், மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், ஒன்றிய செயலாளர் சக்கணன், நகர செயலாளர் முத்துக்குமார் ஆகியோர் சென்றிருந்தனர்.

# தஞ்சை தெற்கு மாவட்ட நிர்வாகிகள் தேர்வு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தெற்கு மாவட்டத்தின் மாவட்ட குழு கூட்டம் தஞ்சாவூர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் மாவட்ட குழு உறுப்பினர் தி.கோவிந்தராஜன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் இரா.முத்தரசன் அகில இந்திய மாநாடு நோக்கம் குறித்து விரிவாக பேசினார். தெற்கு மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி நடைபெற்ற பணிகள் குறித்து பேசினார். கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளராக கோ. சக்திவேல், மாவட்ட பொருளாளராக ந.பாலசுப்பிரமணியம், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களாக சி.சந்திரகுமார் உள்ளிட்ட 16 பேர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

தற்போது நெல் அறுவடை செய்து கொள்முதல் நிலையங்களில் ஈரப்பதம் காரணமாக கொள்முதல் செய்யப்படாமல் பல நாட்களாக திறந்தவெளியில் வீணாகி வருகிறது. 17 சதவீத ஈரப்பதம் குறித்த கொள்முதலில் 20% வரை ஈரப்பதம் வைத்து கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு உதவிட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# பட்டுக்கோட்டையாரின் 63 வது நினைவேந்தல் விழா

பட்டுக்கோட்டையில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய, நகரம் இணைந்து நடத்தும், மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நினைவேந்தல் அக்டோபர் 08 அன்று நடைபெற்றது. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் சிலைக்கு மருத்துவர் மு. செல்லப்பன் தலைமையில் மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினார். கௌரவ தலைவர் இரா.கல்யாணசுந்தரம், சிபிஐ ஒன்றிய செயலாளர் க. பூபேஸ் குப்தா, நகர செயலாளர் வ.விஜயன் முன்னிலையில், தலைவர் இரா. பிரகாசம் அறிமுக உரையாற்றினார். தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாநில செயற்குழு உறுப்பினர் ஆம்பல் ஆசிரியர் சி.இராமலிங்கம் சிறப்புரை ஆற்றினார். ரோஜா இராஜசேகரன், சிவசிதம்பரம் அறம் அறக்கட்டளை தலைவர் இராமசாமி, காளிதாஸ் புகழஞ்சலி செலுத்தினர். கலை இலக்கிய பெருமன்ற செயலாளர் சுப. பால தண்டாயுதம் வரவேற்புரை ஆற்றினார். துனை செயலாளர் எம்.எம்.சுகுமார் நன்றியுரை ஆற்றினார்.

**வேதாரண்யம்:** நாகை மாவட்டம், வேதாரண்யம் ராஜாஜிபூங்கா எதிரே, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் சார்பில் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் நினைவு நாளையொட்டி புகழஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது.

கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாவட்டத் தலைவர் புயல் குமார் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் தென்னடார் அம்பிகாபதி, கிளைத் தலைவர் தங்க.குழந்தைவேலு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில், பெருமன்ற மாவட்ட துணைத் தலைவர் ப.பார்த்தசாரதி, கிளை துணைச் செயலாளர் செந்தில்நாதன், பொருளாளர் கோவி.ராசேந்திரன், நல்லாசிரியர் விருது பெற்ற வீ.வைரக்கண்ணு, எஸ்.செல்வராஜ், கவிஞர் அ.மா.குணசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர்.

# தமிழ்நாடு ஏஐடியூசி கட்டட தொழிலாளர் சங்க மாவட்ட மாநாடுகள்



திருச்செங்கோடு புதிய பேருந்து நிலையம் எதிரில் உள்ள முத்துசெல்வம் சமுதாயக்கூடம் மண்டபத்தில் தமிழ்நாடு ஏஐடியூசி கட்டட தொழிலாளர் சங்கத்தின் நாமக்கல் மாவட்ட 7வது மாநாடு நடைபெற்றது. மாநாட்டிற்கு பி.செல்வராஜ் தலைமை தாங்கினார். எம்.நடேசன், ஏ.குமார், கே.கணேசன், எஸ்.மாரியம்மாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் திருச்சி க.சுரேஷ், சிபிஐ மாவட்டச் செயலாளர் கே.அன்புமணி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

டி.கே.சுப்பிரமணி ஆட்டோ தொழிலாளர் சங்கம் சி.ஜெயராமன் வி.தொ.ச. மாவட்ட செயலாளர் எஸ்.ஜெயராமன் மாவட்ட ஏஐடியூசி தலைவர் சி.நந்தகுமார் மாவட்ட செயலாளர் பி.தனசேகரன் ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் என்.முருகராஜ் மாநில பொதுச் செயலாளர் அரசு போக்குவரத்துக் கழகம் எஸ்.சின்னசாமி பி.எஸ்.என்.எல். மாவட்ட தலைவர் எஸ்.சுகுமார் நகர செயலாளர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்.செல்வராஜ் விவசாயிகள் சங்கம் பி.கார்த்திக் துணைச் செயலாளர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட தோழர்கள் வாழ்த்துரை வழங்கினர்.

**புதிய நிர்வாகிகள்:** கௌரவ தலைவராக பி.செல்வராஜ், தலைவராக சி.நந்தகுமார், துணைத்தலைவர்களாக எம்.நடேசன், ஜி.விஜயலட்சுமி, செயலாளராக ஏ.குமார், துணைச் செயலாளர்களாக ஆர்.கோபிராஜ், எஸ்.மாரியம்மாள், பொருளாளராக ஜி.முருகேசன், நிர்வாக குழு உறுப்பினர்களாக டி.கே.சுப்பிரமணி, சி.பெருமாள், எல்.மாரிமுத்து, பி.கதிர்வேல் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். ஏ.குமார் நன்றி கூறினார்.

**காஞ்சிபுரம் :** தமிழ்நாடு ஏஐடியூசி கட்டட தொழிலாளர் சங்க காஞ்சிபுரம் செங்கல்பட்டு ஒருங்கிணைந்த மாவட்ட மாநாடு செங்கல்பட்டு மறைமலைநகர் மக்கள் இல்லத்தில் மாவட்ட தலைவர் வி.ஆதி மூலம் தலைமையில் நடைபெற்றது.

இம்மாநாட்டினை மாநில செயலாளர் ஆர். துரைசாமி துவக்கிவைத்தார். மாவட்ட ஏஐடியுசி பொதுச்செயலாளர் எம்.ஜஹாங்கீர் சிறப்புரை ஆற்றினார். சங்க செயலாளர் பி.ரவிச்சந்திரன் வேலை அறிக்கையும், பொருளாளர் வி. வீராசாமி முன்வைத்த வரவு செலவு ஆண்டறிக்கையும் விவாதத்திற்கு பின்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. மாநில பொதுசெயலாளர் கே.இரவி நிறைவுரையாற்றினார். சிபிஐ மாவட்ட செயலாளர் ஏ.ராஜ்குமார், உள்ளாட்சி சங்க மாவட்ட தலைவர் என்.தேவராசன், கைத்தறி மாவட்ட செயலாளர் ஏ.மூர்த்தி வாழ்த்துரை வழங்கினர்.

**புதிய நிர்வாகிகள்:** தலைவராக வி.ஆதி மூலம், செயலாளராக வி.வீராசாமி, 'பொருளாளராக ஹரிகிருஷ்ணா, துணைத் தலைவர்களாக என்.ராஜேந்திரன், செல்வராஜ், எஸ்.அமுதா, துணைச் செயலாளர்களாக ஜி.செல்வராஜ், யூ.அருண் பாண்டியன், என்.புஷ்பராணி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## கோபி ஒன்றிய மாநாடு

தமிழ்நாடு ஏஐடியூசி கட்டட தொழிலாளர் சங்க 6வது கோபி ஒன்றிய மாநாடு கோபியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு வடக்கு மாவட்ட அலுவலகத்தில் ஒன்றிய தலைவர் கே.ஆர்.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. அதில் ஈரோடு மாவட்ட ஏஐடியூ சி பொதுச் செயலாளர் ஜி.வெங்கடாசலம் கொடியேற்றி வைத்து உரையாற்றினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில குழு உறுப்பினர் டி.ஏ.மாதேஸ்வரன் வாழ்த்துரையாற்றினார். தமிழ்நாடு ஏஐடியு சி வடக்கு மாவட்ட சங்க செயலாளர் எஸ். கந்தசாமி சிறப்புரையாற்றினார். புதிய ஒன்றிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். ஒன்றிய தலைவராக என் பி.பி.ரவி, ஒன்றிய செயலாளராக கே.ஆர். கிருஷ்ணமூர்த்தி, ஒன்றிய பொருளாளராக கே.சி.ராஜேந்திரன், ஒன்றிய துணைச் செயலாள்களாக எஸ். சிவலிங்கம், கே ஆர்.கோகுல் ராம், துணைத் தலைவர்களாக கே.கே.நாராயணன் மற்றும் ஆர். காந்தாமணி ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

### தாமரைக்குளம் சாயப்பட்டரை திட்டத்தை நிறுத்தி

# சாத்தூர் ஜவுளி பூங்கா திட்டத்திற்கு உடனே நிதி ஒதுக்கிடு செய்க

## இரா.முத்தரசன் பேச்சு




விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 4நாட்கள் பாதயாத்திரைக்கு தலைமை வகித்த மாநில குழு உறுப்பினர் செந்தில்குமார், காரியாபட்டி ஒன்றிய செயலாளர் வேல்ச்சாமி ஆகியோர் தலைமை வகித்தார்கள். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மாநில செயலாளர் இரா.முத்தரசன் பேசியதாவது, காரியாபட்டி வட்டம் தாமரைக்குளம் கிராமத்தில் ஒன்றிய அரசு ஜவுளி பூங்கா அமைப்பதாக அறிவித்தது. பின் அது மாற்றப்பட்டு சாயபட்டறை குழுமம் அமைக்க முயற்சி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தால் அப்பகுதியில் 10கிராமங்களில் விவசாயம் பாதிக்கப்படும். எனவே இத்திட்டத்தை நிறுத்திவைக்க வேண்டும். இம்மாவட்டத்தில் வேலையின்மை பிரச்சினை கடுமையாக உள்ளது. கடந்த காலங்களில் ஜாதி மோதல் களுக்கு வேலையின்மையே காரணம் என நீதிபதி ரத்தினவேல்பாண்டியன் தலைமையில் அமைந்த குழு அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. எனவே ஏற்கனவே ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்ட சாத்தூர் ஜவுளி பூங்கா திட்டத்திற்கு உடனடியாக நிதி ஒதுக்க வேண்டும். சாயபட்டரை திட்டம் தொடங்கினால்தன் ஜவுளி பூங்கா திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்படும் என பாஜக பிரச்சாரம் செய்வதும், அதற்கு பாஜக ஒன்றிய அரசு உடன்பட்டு காலங்கடத்துவது கண்டிக்கத்தக்கது.

பாஜக ஒன்றிய அரசு கொடுத்த 2கோடிப் பேர்களுக்கு வேலை வாய்ப்பு வாக்குறுதிகளை 8 ஆண்டுகளாகியும் நிறைவேற்றவில்லை. அரசு சொத்துக்களான பொதுத்துறை நிறுவனங்களை அடிமாட்டு விலைக்கு விற்பதில்தான் கவனம் செலுத்தி வருகிறது. இவ்வாறு இரா.முத்தரசன் பேசினார். மாநில செயற்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாநில குழு உறுப்பினர் பாலமுருகன் ,மாவட்ட துணை செயலாளர் சமுத்திரம், பொருலாளர் எஸ்.பழனிக்குமார், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ, கோவிந்தன், முத்துமாரி, கணேசமூர்த்தி, ஜீவா, நடராஜன், சுவாமிநாதன், முனியசாமி, ஒன்றிய செயலாள்கள் செல்வம், பலவேசம், சக்கணன், இராமசசந்திரன் , மாதர்சங்க பாண்டிச்செல்வி, மாரீஸ்வரி ,நகர செயலாளர் முத்துக்குமார் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.

சிறப்பு பொருளாதார மண்டலம் அமைப்பதற்காக கைப்பற்றிய

# 3200 ஏக்கர் நிலங்களை விவசாயிகளிடம் ஒப்படைத்திடுக!

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் தீர்மானம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில நிர்வாக குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் கொண்ட கூட்டு கூட்டம் அக். 2 அன்று பெரம்பலூர் சிபிஐ அலுவலகத்தில் சி.எம்.துளசிமணி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி தற்போதைய வேளாண் பிரச்சனைகள் மற்றும் வேளாண் அரசியல் நிலைகள் குறித்து பேசியபின், தோழர்களின் விவாதத்திற்கு பின் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு 2 தடுப்பணைகளை அமைக்க உள்ளதை தடுத்திட வேண்டும்.

23.9.2022 அன்று ஆந்திர முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி பாலாற்றின் குறுக்கே மேலும் இரு புதிய தடுப்பணைகளை கட்டிடவும் தற்போது உள்ள தடுப்பணைகளின் உயரத்தை அதிகரிக்க போவதாகவும் அறிவித்துள்ளார்.இது தமிழக மக்களை, விவசாயிகளை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது. 1892 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை மீறி ஆந்திர அரசு தொடர்ந்து இதுவரை 28க்கும் மேற்பட்ட தடுப்பணைகளைக் கட்டி வருகிறது. இதனால் திருப்பத்தூர், வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களுக்கு குடிநீரும் ,பாசன நீரும் முற்றாக தடைபடும் ஆபத்து உள்ளது.

ஆந்திர அரசின் இந்த அடாவடி நடவடிக்கையை கண்டிப்பதுடன் புதிய தடுப்பணைகள் மற்றும் தற்போதுள்ள தடுப்பணைகளை உயர்த்துவது என்ற திட்டத்தை தடுத்து நிறுத்திடும் நிலையில் மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்திடவும் உச்ச நீதிமன்றத்தில் தொடுத்துள்ள வழக்கை விரைவு படுத்திடவும் வேண்டும்.

பெரம்பலூர் மாவட்டம், திருமாந்துறை பகுதியில் மானாவரி பயிர்கள் நன்றாக விளையக்கூடிய 3200 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்தி சிறப்பு பொருளாதார மண்டலம் அமைப்பதற்காக ஆந்திராவை சேர்ந்த ஜிவிகே என்ற தனியாருக்கு ஏக்கர் 15 லட்சம் ரூபாய்க்கு தமிழக அரசு எடுத்துக் கொடுத்தது. குறைந்த விலையைபெற்று தன் நிலங்களை இழந்துவிட்ட 5 கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் தொழிலாளர்கள் தங்களுடைய வாழ்வாதாரம் இழந்து பாரம்பரியமான தன் சொத்துக்களை இழந்து விவசாய வேலை வாய்ப்பு வருமானத்தையும் இழந்து வறுமையில் தவிக்கிறார்கள்.

நிலம் கையகப்படுத்தி 15 ஆண்டுகள் ஆகியும் இதுவரை எந்த ஒருதொழிலும் தொடங்கப்படாமல் விவசாய நிலங்கள் அனைத்தும் தரிசு நிலங்களாக முற்புதர்கள்மண்டி கிடக்கிறது. கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் உரிய தொழில்கள் தொடங்கிடவில்லையெனில், அந்நிலங்களை திரும்ப எடுத்து உரிய விவசாயிகளுக்கேகொடுத்திட வேண்டும் என்ற சட்டபூர்வ வழிகாட்டல் படி சம்பந்தப்பட்ட விவசாய நிலங்களையும் வாழ்வாதாரத்தை இழந்திருக்கும் விவசாயிகளிடம் தமிழக அரசு திரும்ப ஒப்படைப்பு செய்திடவேண்டும்.

இரசாயன உரம் பற்றாக்குறையை போக்கி, உரிய காலத்தில் தட்டுப்பாடு இன்றிவழங்கிட வேண்டும். நடப்பாண்டு தொடக்கம் முதலே இரசாயன உரங்கள் கிடைக்காது விவசாயிகள் அவதிப்பட்டனர். உரிய காலத்தில் இந்த உரங்களை போட்டால்தான் மகசூல் உரிய அளவு கிடைக்கும். ஒன்றிய அரசும், மாநில அரசும் வழங்கிய உரங்களை, வழங்கிட உள்ள உரங்களின் கணக்கை மட்டுமே தொடர்ந்து செய்தியாக கொடுத்து வருகிறது. ஆனால் விவசாயிகளுக்கு உரிய உரங்கள் கிடைக்காது கடை கடையாக அலைந்து திரிகிறார்கள். வரும் சாகுபடிக்கு கூடுதலான உரங்கள் தேவைப்படும் சூழலில் தேவையான உரங்களை தட்டுப்பாடு இன்றி உடன் தருவித்து வழங்கியும்.. கூட்டுறவு சங்கங்களில் சில்லறை விற்பனை செய்திடவும் உரவினியோகத்தை கண்காணித்து முறைப்படுத்திட தனிஅலுவலர் ஒருவரை நியமித்து ஒவ்வொரு உரிமம் பெற்ற கடைகளிலும் விவசாயிகளுக்கு உரங்கள் தட்டுப்பாடில்லாமல் வழங்கிட சிறப்பு நடவடிக்கையும் எடுத்திட வேண்டும்.

தொடர் மழையினால் பாதிப்பிற்குள்ளான வேளாண் பயிர்களுக்கு நிவாரணம் வழங்கிட வேண்டும். தென்மேற்கு பருவ மழை மற்றும் வளிமண்டல சுழற்சியினால் ஏற்பட்ட தொடர் மழை என்பது சராசரி 70 சதம் கூடுதலாக பொழிந்துள்ளதாக வானிலை ஆய்வு கூறுகிறது.இதனால் குருவை நெல் பயிர்கள் அறுவடை செய்ய வேண்டிய நிலையில் சாய்ந்து மூழ்கி பல இடங்களில் பாதித்துள்ளது. சில இடங்களில் முளைத்து அழுகிடும் சூழல்உள்ளது. சம்பா விதை நாற்றங்காலிலேயே இழந்து விட்டது. காப்பீடு இல்லாததால் தமிழக அரசு அறிவித்தது போல மாநில பேரிடர் நிதியிலிருந்து நெல்பயிர் பாதிப்பிற்கு ஏக்கருக்கு ரூபாய் 35 ஆயிரம் வழங்கிட வேண்டும். மழையினால் பாதிப்பிற்குள்ளான நிலக்கடலை, வாழை மற்றும்இதர பயிர்களுக்கும் உரிய அளவு நிவாரணம் வழங்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சுங்கச்சாவடி வரிவசூல் பணியாளர்கள் போராட்டம்:

# கே.சுப்பராயன் எம்.பி. உரை

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், செங்குறிச்சி சுங்கசாவடி வரிவசூல் பணியாளர்களை பணிநீக்கம் செய்ததை கண்டித்து உள்ளிருப்பு போராட்டத்தில் குடும்பத்துடன் ஈடுபட்டனர். இதில் திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினரும், ஏஐடியூசி மாநில தலைவருமான கே.சுப்பராயன் வாழ்த்தி பேசினார். ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் ஆ.சௌரிராஜன், ஏஐடியூசி மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் ஆ.வளர்மதி, விதொச மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் கே.எஸ்.அப்பாவு, சிபிஐ ஒன்றிய செயலாளர் வி.செல்வம் , துணை செயலாளர் பி.ஆர்.நந்தகோபாலகிருஷ்ணன் ஆகிய தோழர்கள் உடன் இருந்தனர்.



### கண்டன ஆர்ப்பாட்டம்

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், செங்குறிச்சி சுங்கச்சாவடி மையத்தில் சுமார் 120 பணியாளர்கள் தொடர்ச்சியாக 13 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகின்றனர். இந்த தொழிலாளர்களை பணி நிரந்தரம் கோரி மத்திய தொழிலாளர் துறையில் வழக்கு தொடுத்துள்ளனர். வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் பணியாளர்களின் பணி நிலையில் எந்தவிதமான மாறுதலும் ஏற்படுத்தக் கூடாது என தொழிலாளர் துறை உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் தொழிலாளர் துறையின் உத்தரவுக்கு எதிராகவும், பணியாளர்களை பழிவாங்கும் நோக்கத்துடனும், திருச்சி டோல்வே பிரைவேட் லிமிடெட் நிறுவனம் மற்றும் அதன் ஒப்பந்ததாரரான வடமாநில நிர்வாகத்தினர் சேர்ந்து, 28 தொழிலாளர்களை கடந்த 1.10.2022 முதல் சட்ட விரோதமாக பணி நீக்கம் செய்துள்ளனர். அன்றுமுதல் இன்று வரை தொழிலாளர் அணைவரும் உண்ணா நிலைபோராட்டத்தில் உள்ளனர்.

எனவே, பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உடனடியாக நீதி வழங்க வலியுறுத்தியும் மாவட்ட நிர்வாகமும் தமிழக அரசும் உரிய முறையில் தலையிட்டு தீர்வு ஏற்படுத்த வேண்டி 06.10.2022 வியாழன் மாலை 3 மணி அளவில் உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சிபிஐ மாவட்டக்குழு உறுப்பினர் எம். வெங்கடேசன் தலைமை தாங்கினார்.

ஆர்ப்பாட்டத்தில் தொ.மு.ச.விழுப்புரம் மண்டலப் பொதுச்செயலாளர் வி.சேகர், சிபிஐ மாவட்ட செயலாளர் ராமசாமி, விசிக மாவட்ட செயலாளர் தனபால், துணை செயலாளர் அறிவுக்கரசு, பாமக மாவட்ட செயலாளர் ஜெகன், மாநில செயற்குழு வழக்குரைஞர் சுரேஷ், காங்கிரஸ் சேக்ஜவாத் வட்டார தலைவர், சிபிஐ எம் மாவட்ட செயற்குழு உறுப்பினர் பழனி, மதிமுக நகரதலைவர் துரை, தவக தனஞ்செயன், பிஎஸ்பி மண்டலப் பொறுப்பாளர் கலியமூர்த்தி, புரட்சி பாரதம் மாநில செயலாளர் ஆறுமுகம், எஸ்டிபிஐ, மக்கள் அதிகாரம் மற்றும் சமுக ஜனநாயக சக்திகள், பொதுமக்கள் 300பேர் கலந்து கொண்டனர்.

# நெசவு தொழிலை பாதுகாக்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

ஆண்டிப்பட்டி வட்டார பகுதிகளில் விசைத்தறி மற்றும் சலவை பட்டறை தொழில் மற்றும் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை சீரழிக்க பொய்யான தகவல்களை தெரிவிக்கும் பா.ஜ.க.வை சேர்ந்த நபரை குண்டர் சட்டத்தில் கைது செய்ய வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆண்டிப்பட்டி நகர் குழு சார்பில் தெருமுனை விளக்க கண்டன ஆர்ப்பாட்டம் முருகன் தியேட்டர் அருகில் ஆண்டிபட்டி பேரூராட்சி 10 வார்டு கவுன்சிலர் மீனாட்சி முனீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் வே.பரமேஸ்வரன் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்தார்.

மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம், மாவட்ட செயலாளர் கி.பெருமாள் ஆகியோர் கண்டன உரையாற்றினர். ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்து கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் நெசவு தொழிலாளர்களுக்கு எவ்வளவு இன்னல்கள் ஏற்பட்டாலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அரணாக நின்று பாதுகாக்கும் எனவும் இதனை நான் தமிழக முதல்வர் கவனத்திற்கு கொண்டு செல்வேன் எனவும் கூறினார்.

ஆர்ப்பாட்டத்தில் நெசவு தொழிலாளர்கள் சுமார் 500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடும் ஒன்றிய அரசை கண்டித்து பாதயாத்திரை

## கே.சுப்பராயன் எம்.பி. தொடங்கி வைத்தார்



காரியாபட்டி வட்டம் தாமரைக்குளம் கிராமத்தில் சாயப்பட்டரை குழுமம் அமைக்கும் ஒன்றிய அரசின் முயற்சியை கைவிடக்கோரியும், சாத்தூரில் அறிவித்த ஜவுளிப்பூங்கா திட்டத்திற்கு உடனடியாக நிதி ஒதுக்கக் கோரியும், சாயப்பட்டரை அமைத்தால்தான் சாத்தூர் ஜவுளி பூங்காவிற்கு நிதி ஒதுக்குவோம் என விருதுநகர் மாவட்ட தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து தாமரைக்குளத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் 4நாள் பாதயாத்திரை தொடங்கியது.

மாநில குழு உறுப்பினர் செந்தில்குமார், ஒன்றிய செயலாளர் வேலுச்சாமி ஆகியோர் தலைமை வகித்தார்கள். பாதயாத்திரையை தொடங்கி வைத்து கட்டுப்பாட்டுக்குழு தலைவர் கே.சுப்பாராயன் எம்பி பேசியதாவது. திருப்பூரைச் சுற்றி உள்ள பகுதியிலுள்ள ஆறு, குளம், கிணறுகள் எல்லாம் சாயக்கழிவுகளினால் செத்து விட்டது. எங்கு தோண்டினாலும் சாயத் தண்ணீர்தான் வருகிறது. கெமிக்கல் கலந்த விசத்தண்தண்ணீரால் பலவித நோய்கள் வருகிறது. ஐரோப்பிய நாடுகள் துணிகளுக்கு சாயம் ஏற்றுவதை நிறுத்தி விட்டன. சாயக்கழிவு தண்ணீரிலுள்ள விசத்தை நீக்க இன்னும் புதிய தொழில்நுட்பங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. நம் நாட்டில் சாயபட்டரை வைக்க மோடி பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அனுமதி அளித்துள்ளார். குழுமமாக நூற்றுக்கணக்கான சாயபட்டரை தொழில் துவங்க முயற்சித்து வருகிறது. அதில் ஒரு பகுதிதான் இந்த தாமரைக்குளம் சாயபட்டரை திட்டம்.

இத்திட்டம் இங்கு வந்தால் இதைச்சுற்றியுள்ள 10 கிராமங்கள் வரை பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. போராட தெரியாதவர்களுக்கு போராட கற்றுக் கொடுக்கிற குருபீடம் கம்யூனிஸ்ட் கட்சி. எனவேதான் இம்மக்களின் நலன் கருதி கம்யூனிஸ்டுகள் இப்பிரச்சினையை எடுத்திருக்கிறார்கள். நீங்கள் ஒன்று பட்டு போராடி வெற்றி பெற வேண்டும். இவ்வாறு கே.சுப்பாராயன் எக்ஸ் எம்பி பேசினார். நிகழ்ச்சியில் மாநில செயற்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், துணை செயலாளர் சமுத்திரம், பொருளாளர் எஸ்.பழனிக்குமார், தவிச சவுந்திரபாண்டியன், தவிதொச வரதராஜன், மாதர்சங்க மாரீஸ்வரி, இடைகமிட்டி செயலாளர்கள் கோவிந்தன், கணேசமூர்த்தி, ஜீவா, சாமிநாதன்,சக்கனன், நடராஜன், செல்வம், முனியசாமி , பலவேசம் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டார்கள். இரவு காரியாபட்டியில் விளக்க பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதில் கே.சுப்பராயன் எம்பி உள்ளிட்ட தலைவர்கள பேசினர்.

# திண்டுக்கல் மாவட்ட நிர்வாகிகள் தேர்வு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திண்டுக்கல் மாவட்டகுழு கூட்டம் கட்சி அலுவலகத்தில் பி.ஆர்.சுதந்திரதேவி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில செயலாளர் இரா.முத்தரசன், மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் புதிய செயற்குழு உறுப்பினர்களாக 11பேர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். மாவட்ட துணைச் செயலாளராக இரா.வினோத்குமார், மாவட்டப் பொருளாளராக பி.ஆர்.சுதந்திரதேவி ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்.

# நூல் நயம்

## தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி வளர்ச்சி வரலாறு




தமிழுக்கு பெருமை சேர்க்கிற நூல்களில் ஒன்று தொல்காப்பியம் ஆகும். இந்நூலின் பொருளதிகார ஆராய்ச்சி வளர்ச்சி வரலாறு என்ற ஆய்வு நூலை பெ.மாதையன் எழுதி இருக்கிறார்.

இலக்கியம், இலக்கணம் என்பது சமுதாய உருவாக்கத்தின் அங்கங்கள். இவை குறிப்பிட்ட சமுதாய வரலாற்றின் ஆவணங்கள். இவை குறித்த ஆய்வுகள், இவற்றின் பரவலாக்கத்திற்கான ஊடகங்கள், மேலும் இவை இலக்கிய இலக்கணங்கள் குறித்த கோட்பாடுகளை உருவாக்கப் பெரிதும் பயன்படுவதாக உள்ளன.

இந்த கோட்பாடுகள் திட்டமிட்டு வரையறுத்த நெறிமுறைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டால் அவை. ஒரு இனத்தின் அறிவு பாரம்பரியமாக கொடையாக அமைந்து, உலக இலக்கிய இலக்கண படைப்புக்கான கொள்கையாகவும் அமையும்.

தொல்காப்பியத் திணை கோட்பாட்டைக் திராவிடர் கோட்பாடாக கொண்டு அதை விரிவாக்கம் செய்துள்ள இன்றைய சூழலுக்குப், பல ஆண்டுகளுக்கு முன்னமேயே தனிநாயக அடிகளார் இந்த விரிவாக்கம் பற்றிப் பேசியிருந்தாலும், தொல்காப்பியத்தின் பின்வந்த இலக்கணங்கள் வேறுபட்ட கோட்பாடுகளை முன்வைத்து இருந்தாலும், அவ் இலக்கணங்கள் குறித்த ஆய்வுகள் வந்திருந்தாலும் எந்தவிதமான விழிப்புணர்வும் நம்மிடையே ஏற்படவில்லை.

தமிழ், தமிழர் வரலாற்றில் தொல்காப்பியம் பெற்றுள்ள முக்கியத்துவம். தொல்காப்பியப் பொருளதிகார ஆய்வு, இறையனார் களவியல் உரையில் இடம்பெற்றுள்ள நிலை. உரைகள் ஆய்வுத் தொடக்கமாக இருக்கும் நிலை, தொல்காப்பிய மூலாதாரங்கள் குறித்த ஆய்வுகளின் ஆவணப்படுத்தா நிலைகள் என்பவற்றை எடுத்துரைப்பதாக உள்ளது.

தொல்காப்பியப் பொருளதிகாரம் பிறிதொருவரால் இயற்றப்பட்டது, களவியலும்,கற்பியலும் இடைச்செருகல்கள் என்பன போன்ற கருத்துக்கள் நிலவும் தொல்காப்பிய ஆய்வு சூழலில், தொல்காப்பியம் ஒருவரால் எழுதப்பட்ட ஒருங்கிணைந்த இலக்கணம் என்னும் நோக்கில் சா.அகத்தியலிங்கம், கா.பாலசுப்பிரமணியம் ஆகிய இருவரும் செய்த ஆய்வுகள் பற்றிய ஆய்வுப் போக்குகள் எடுத்துரைப்பதாக ஒரு இயல் அமைக்கப்பட்டுள்ளது.

மற்றொரு இயல், மேலாய்வுகளின் அடிப்படையிலும்,எதிர்கால தேவைகளின் அடிப்படையிலும் தொல்காப்பியப் பொருளதிகார வாசிப்பு, தொல்காப்பியப் பொருளதிகாரக் கோட்பாட்டு உருவாக்கம் எனும் நிலைகளில் எதிர்காலத்தில் மேற்கொள்ளவேண்டிய ஆய்வுக் களங்களை முன்வைப்பதாக அமைந்துள்ளது. பெ. மாதையன் எழுதிய தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி வளர்ச்சி வரலாறு என்னும் இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும்

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | பெ.மாதையன் |
| பக்கம் | : | 284 விலை: 760 |
| வெளியீடு | : | பாவை பப்ளிகேஷன்ஸ், 142, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை–14 |

## தேரியாயணம்




திருநெல்வேலி தூத்துக்குடி பகுதிகளில் பரந்து கிடக்கும் தேரி நிலம், உயர்ந்த செம்மண். திரடுகளும், அகண்ட பள்ள வெளிகளுமாய் விரிந்து கிடக்கும். பாலை என்றும் சொல்ல முடியாத, பசுஞ்சோலை வகையிலும் சேர்க்கை இயலாத இந்த புதுவகை நிலப்பகுதிகளை கொண்டதே தேரி நிலமாகும். இந்த நிலப்பகுதி மக்களின் வாழ்க்கையும், அவர்களது வாழ்நிலைகளையும், சமூக சூழல்களையும் நாம் அறிந்து கொள்ளும் வகையில். தேரியாயணம் என்னும் சமூக நாவலை கண்ணகுமார விஸ்வரூபன் எழுதியுள்ளார்.

பொதுவாக மணலால் ஆன குன்றுகளையும், மணல் மேடுகளையும் தேரி என்று அழைப்பது வழக்கம். கன்னியாகுமரி கடற்கரையில் மணல் தேரி, நெல்லை தூத்துக்குடி மாவட்டங்களில் செம்மண் தேரிகள் உள்ளன. தமிழகத்தில் தூத்துக்குடி மாவட்டத்தில் திருச்செந்தூர் சாத்தான்குளம், திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி, ராதாபுரம் வட்டங்களில் ஏறத்தாழ 390 சதுர கிலோமீட்டர் பரப்பில் தேரி நிலம் காணப்படுகிறது.

நாவல் முழுவதும் தேரிக்காட்டின் இயல்புடன் கூடிய மக்களின் வாழ்க்கை,அவர்களின் மகிழ்ச்சியான தருணங்கள், காதல்கதைகள், திருமணங்கள், சாவுகள், மனத்தாங்கல்கள்,கோபங்கள், சண்டை சச்சரவுகள், துரோகங்கள், ஒருவருக்கொருவர் செய்யும் உதவிகள், சுயநல செயல்பாடுகள், அரசாங்க கெடுபிடிகள், புதிய வாழ்க்கை தொடங்குதல் போன்ற எத்தனையோ நிகழ்வுகளை விவரித்திருக்கிறார்.

பல்வேறு சிறுகதைகளை எழுதி 'சாலையோர ஆலமரம்' என்கின்ற சிறுகதைத் தொகுப்பு நூலை படைத்திருக்கும் கண்ண குமார விஸ்வரூபன். தான் சந்தித்த தேரி வாழ்க்கையை எந்த வித ஒப்பனையும் இல்லாமல் மிக எதார்த்தமாக படைத்து அளித்திருக்கிறார். பல்வேறு வட்டார வழக்கு நாவல்களை ஆதரித்த தமிழ் இலக்கிய உலகம். இந்த நாவலையும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம்.

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | கண்ணகுமார விஸ்வரூபன் |
| பக்கம் | : | 270 பக்கம்: 796 |
| வெளியீடு | : | பாவை பப்ளிகேஷன்ஸ் 142, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை – 14 |

வாரம் தோறும் வெளிவரும்
**ஜனசக்தி - நூல் நயம்**
புத்தக விமர்சன பகுதிக்கு அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களும் வரவேற்கப்படுகின்றன. புத்தகங்களை அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.
தொடர்புக்கு : 8220468816

அனுப்பவேண்டிய முகவரி:
**ஜனசக்தி**
பாவை பிரிண்டர்ஸ் மாடி
142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேடடை,
சென்னை - 600014

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே

# அலையாத்தி காட்டில் கல் நண்டு வளர்ப்பு







## அசத்திய விவசாயி

சென்னையை சேர்ந்தவர் இளஞ்செழியன் இவர் கடல் சார் படிப்பில் முதுநிலை பட்டம் படித்துள்ளார். ஒன்றை ஒன்று உட்கொண்டு வளர்ச்சி அடையும் கடல் வாழ் உயிரினங்களை வளர்க்க ஆர்வம் கொண்டவர். இதனால் இவர் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியை அருகே புளியந்துறை கிராமத்தில் 15 ஏக்கர் நிலப்பரப்பை வாங்கி முதலில் இறால் குட்டைகளை நிறுவினார். அதில் இறால் குஞ்சுகளை விட்டு வளர்த்து வந்தார். அப்பொழுது இறால்கலுக்கு வரும் நோயால் அதிக அளவு இறால்கள் அழிந்ததாலும் இதனால் உண்டாகும் தீமைகளை கருத்தில் கொண்டும் மாற்றுத் தொழில் செய்ய முடிவு செய்த போது அலையாத்தி காடுகளுக்கு நடுவே கொடுவா மீன் மற்றும் கல் நண்டு வளர்க்க முடிவு செய்தார்.

இதற்காக தனது 15 ஏக்கர் நிலத்தில் 1 ஏக்கர் நிலத்தை தானியங்கி முறையில் சுழற்ச்சியாக தண்ணீர் வெளியேறி உள்ளே வரும் படி வடிவமைத்து அதில் இயற்கை பேரிடர் காலங்களில் பாதுகாப்பு அரனாக விளங்கும் அலையத்தி காடுகளை வளர்க்க முடிவு செய்தார். இதற்காக கடந்த 2006 ஆம் ஆண்டு 1800 அலையத்தி செடிகளை வாங்கி வளர்த்தார். செடிகள் வளரும் வரை மற்றொருபுறம் திறந்தவெளியில் குட்டைகள் அமைத்து கொடுவா மீன், கல் நண்டு வளர்த்து வந்தார். திறந்தவெளியில் தனது உயிரினத்தையே ஒன்றை ஒன்று உட்கொண்டு வளர்ச்சி அடையும் கல் நண்டு மற்றும் கொடுவா மீன்கள் அதிகளவு வளர்ச்சி அடையாமல் உற்பத்தி பாதித்து குறைந்து காணப்பட்டன

அதனைத் தொடர்ந்து தான் உருவாக்கிய அலைத்திக்காடுகளுக்கு நடுவே கல் நண்டையும், கொடுவா மீனையும் வளர்க்க தொடங்கினார். அலையத்தி காடுகளின் வேர்களுக்கு இடையே கொடுவா மீன் மற்றும் கல் நண்டு வளர்ச்சி, உற்பத்தி சதவீதம் அதிகரித்தது. ஆண்டிற்கு ஒருமுறை மீன்கள், கல் நண்டுகள் பெரிதானதும் அவற்றைப் பிடித்து மொத்த வியாபாரத்திற்கும் சில்லறை வியாபாரத்திற்கும் விற்பனை செய்து வருகிறார்

இயற்கையான முறையில் இந்தியாவிலேயே முதன்முறையாக அலைத்திக்காடுகளை உருவாக்கி அதில் கொடுவா மீன் மற்றும் கல் நண்டு வளர்ப்பில் ஈடுபட்டு அதிக லாபம் ஈட்டி வரும் அவர் இது போன்ற முறையை கடலோரப் பகுதிகளில் பின் பற்ற அரசு மானியம் வழங்கினால் மற்றவர்கள் இந்த முறையை பின்பற்ற முன்வருவார்கள் எனவும், எதிர்காலங்களில் வரும் சுனாமி போன்ற இயற்கை இடர்பாடுகளில் இருந்து பொதுமக்களை காக்க முடியும். இதனால் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும் எனவே இந்த முறையை அரசு ஊக்குவிக்க முன்வர வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

– எம்.பிரபாகரன்

## 1 -ம் பக்கத் தொடர்ச்சி

*குருவம்மாள் செளந்தரராஜன், ராஜேந்திரன், சுகுமார் உட்பட 500 க்கு மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டு சமூக நல்லிணக்க முழக்கம் எழுப்பினர்.*

**திருவள்ளூர்:** *வில்லிவாக்கம் ஒன்றியத்தில் சமூக நல்லிணக்க பாதுகாப்பு மதசார்பற்ற கூட்டணி கட்சிகளின் தலைமையில் நடைபெற்ற மனித சங்கிலி போராட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது.*

**தென்காசி:** *தென்காசி மாவட்டம் செங்கோட்டையில் நடைபெற்ற மனித சங்கிலி போராட்டத்தில் சிபிஐ, சிபிஎம், விசிக, திக, மு.லீக், காங்கிரஸ் மற்றும் பல்வேறு கட்சிகள் அமைப்புகள் பங்கேற்றன. இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சாமி, போஸ், மாரியப்பன், ஆழ்வார் சுப்பிரமணியன், சுந்தர், பழனிச்சாமி, செல்லையா கருப்பையா உள்பட 100 பேர் கலந்து கொண்டனர். புளியங்குடியில் சிபிஐ ஒன்றியசெயலாளர் ப.வேலு உள்பட 300 பேர் கலந்து கொண்டனர்.*

*தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பாக விசிக மாவட்டச் செயலாளர் டேனிஅருள்சிங் தலைமையில் நடந்த மனித சங்கிலியை தென்காசி மாவட்ட காங்கிரஸ் தலைவர் பழனிநாடார் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் இசக்கித்துரை உள்பட 500 பேர் கலந்து கொண்டனர்!*

*சங்கரன்கோவில் தேரடி திடலில் நடந்த மனித சங்கிலியில் சதன்திருமலைக்குமார் எம்எல்ஏ தலைமை வகித்தார். சிபிஐ செயலாளர் கனகராஜ், சுப்பையா, உள்பட 200பேர் கலந்து கொண்டனர். திருவேங்கடம் மெயின் பஜாரில் நடந்த மனித சங்கிலி நிகழ்ச்சியில் விவசாய தொழிலாளர் சங்க தலைவர் செல்வராஜ், முருகன் 100பேர் கலந்து கொண்டனர். கடையத்தில் மாவட்ட குழு உறுப்பினர் பரமசிவன் தலைமையில் மனித சங்கிலி நடைபெற்றது. அன்பழகன், மதியழகன் அழகுதுரை, வெங்கடேஷ் உள்பட 200 பேர் கலந்து கொண்டனர். ஆம்பூரில் அரிகரன் தலைமையில் ஈஸ்வரன், கனகராஜ், கிருஷ்ணன்,சட்டநாதன் உள்பட100பேர் கலந்து கொண்டனர்.*

**அரியலூர்:** *அரியலூரில் பேருந்து நிலையம் எதிரே மெயின் சாலையில் நூற்றுக்கணக்கானோர் பங்கு கொண்ட மனிதசங்கிலி போராட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டக்குழு உறுப்பினரும், ஏஐடியூசி மாவட்டப் பொதுச் செயலாளருமான டி.தண்டபாணி, அரியலூர் நகர கிளை பெ. மணிகண்டன் உட்பட பலர் திரளாக கலந்து கொண்டனர்.*

**கிருஷ்ணகிரி:** *கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாநகரத்தில் நடைபெற்ற சமூக நல்லிணக்க மனித சங்கிலி பேரணியில் பெருந்திரளானவர்கள் கலந்து கொண்டனர்.*

**பல்லாவரம்:** *குரோம்பேட்டை, "சரவணா ஸ்டோர்ஸ்" அருகில் இருந்து தாம்பரம் வரை நடைப்பெற்ற மனிதச் சங்கிலியில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி ஆலந்தூர் தொகுதி குழுவின் சார்பில், காஞ்சி மாவட்ட செயலாளர் பி.கார்த்தி, துணை செயலாளர் ஜா.பூபாலன், பல்லாவரம் கிளை செயலாளர் கே.ரவி உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

**காஞ்சிபுரம்:** *காஞ்சிபுரத்தில் தாலுகா அலுவலகம் மையப்படுத்தி ராமா ஸ் கேப், மூங்கில் மண்டபம் வரை தோழர்கள் கைகோர்த்து கோஷங்களை எழுப்பினர். இதில் சிபிஐ, சிபிஐஎம், காங்கிரஸ், விசிக, திக மற்றும் பல்வேறு கட்சிகள், அமைப்புகள் உள்ளிட்ட ஜனநாயக சக்திகள் ஒன்று திரண்டு ஒரு கிலோ மீட்டர் வரை மனித சங்கிலி போராட்டம் முழக்கங்களுடன் வெற்றிகரமாக நடந்தது.*

**திருச்சி மாநகர்:** *சமூகநல்லிணக்க மனிதசங்கிலி திருச்சி மாநகரில் தலைமை தபால் நிலையம் அருகே நடைபெற்றது. இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் எஸ். சிவா, முன்னாள் மாநில நிர்வாக குழு உறுப்பினர் எம். செல்வராஜ், ஏஐடியுசி பொதுச்செயலாளர் க.சுரேஷ் மற்றும் காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் ஜவகர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்ரீதர், மதிமுக மாவட்ட செயலாளர் சோமு மற்றும் பல்வேறு கட்சியினர், அமைப்பினர் கலந்து கொண்டனர். மேலும் அந்தநல்லூர் ஒன்றியத்தில் நடைபெற்ற மனித சங்கிலியின் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகிலை சிவசூரியன், ஒன்றிய செயலாளர் எம். ஆர். எஸ்.ராஜலிங்கம், விரமுத்து உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*

**இராமநாதபுரம்:** *இராமநாதபுரம் மாவட்டத்தில் ராமேஸ்வரம் ராமநாதபுரம் பரமக்குடி, தொண்டி முதுகுளத்தூர் ஆகிய ஐந்து மையங்களில் மனிதச் சங்கிலி நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி, மனிதநேய மக்கள் கட்சி, எஸ்டிபிஐ, ஆகிய அரசியல் இயக்கங்களும் அத்துடன் 19க்கும் மேற்பட்ட ஜனநாயக அமைப்புகளும் இந்த மனித சங்கிலி போராட்டத்திற்கு ஆதரவு தெரி வித்து இந்த போராட்டத்தில் இணைந்தனர்.*

*ஐந்து மையங்களிலும் மனித சங்கிலியாக அல்ல மனித சுவராகவே அடர்த்தியாக நின்று 2 கிலோமீட்டர் வரையில் நீண்டது என்பது குறிப்பிடத்தக்கது.*

# 60 வயது நிரம்பிய விவசாயத் தொழிலாளர்கள் அனைவருக்கும் மாதம் ரூ.3000 ஓய்வூதியம் வழங்க வேண்டும்

## தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர்கள் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம்

**கிராமப்புறங்களில் செயல்படுத்தி வரும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் நூறு நாள் வேலை வாய்ப்புத் திட்டம் மத்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திமுக தனது தேர்தல் அறிக்கையில், நூறு நாள் வேலைத்திட்டப்பணியை 150 நாட்களாக உயர்த்திடவும், தினக் கூலியை ரூ.300 ஆக உயர்த்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.**

கலைஞர் மு.கருணாநிதி முதல்வராக இருந்தபோது கொண்டு வந்த சட்டப்பாதுகாப்புடன் கூடிய ‘‘விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தை’’ திரும்பவும் கொண்டு வர வேண்டும்.

உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் பதிவு செய்துள்ளோருக்கும், 60 வயது நிரம்பியோர் அனைவருக்கும் நிபந்தனை ஏதுமின்றி மாதம் ரூ.3000 ஓய்வூதியம் வழங்க வேண்டும்.

நீர்நிலை புறம்போக்குகளில் மூன்று தலைமுறையாக குடியிருந்து வருபவர்களை உச்ச நீதிமன்ற தீர்ப்பைக் காட்டி வீடுகளை இடித்து தரைமட்டம் ஆக்கி வருவதை கண்டித்தும், நீதிமன்றத்தின் மூலம் குழு ஆய்வு செய்து அதன் பிறகு நீர் நிலை புறம்போக்கு எனவும், அதில் நீர் வழிபாதை என உறுதி செய்த பிறகு மாற்று இடமும் வீடும் உறுதி செய்யப்பட்ட பிறகு வீடுகளை இடிக்க வேண்டும் என வலியுறுத்தியும்,

25 ஆண்டுகளுக்கு முன்பாக கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை இடித்துவிட்டு புதிய வீடுகள் கட்டித் தரக் கோரியும், அரசால் வழங்கப்பட்டு வரும் முதியோர் உதவித்தொகை வாங்கும் பயனாளிகள் பட்டியலில் உள்ளவர்கள் குறைக்கப்பட்டு வருவதை நிறுத்தி அனைத்து பயனாளிகளுக்கும் ரூபாய் ஆயிரம் வழங்கிட வலியுத்தியும் தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தினர் தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

**திருத்துறைப்பூண்டி:** தமிழ் மாநில விவசாயத் தொழிலார் சங்கத்தின் சார்பில் திருத்துறைப்பூண்டி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஒன்றியதலைவர் ஜவகர், ஒன்றிய செயலாளர் மகாலிங்கம், நகர தலைவர் பக்கிரிசாமி, நகர செயலாளர் வாசுதேவன் ஆகியோர் தலைமை வகித்தனர்.

கே.உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., மாவட்ட செயலாளரும், ஒன்றியக் குழு தலைவருமான அ.பாஸ்கர், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் பி.வி.சந்திரராமன், நகர செயலாளர் டி.பி.சுந்தர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**ஒரத்தநாடு:** ஒரத்தநாட்டில் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் சார்பில் ஒன்றிய தலைவர் சின்னத்தம்பி, ஒன்றிய செயலாளர் வெங்கடேஷ் ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சிபிஐ ஒன்றிய செயலாளர் வாசு. இளையராஜா துவக்கி வைத்து பேசினார். கோரிக்கைகளை விளக்கி ஏஐடியூசி பண்ணை தொழிலாளர் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் தி.திருநாவுக்கரசு, சிபிஐ முன்னாள் மாவட்ட துணைச்செயலாளர் வீ.கல்யாணசுந்தரம், மாவட்ட குழு உறுப்பினர் சீனி.முருகையன், வி.ச. ஒன்றிய செயலாளர் அ.அய்யாக்கண்ணு, சிபிஐ நகரசெயலாளர் மு.ராஜேந்திரன் மற்றும் சங்க நிர்வாகிகள், தொழிலாளர்கள் திரளானோர் பங்கேற்றனர்.

**தருமபுரி:** தருமபுரியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு




சங்க ஒன்றிய தலைவர் ஜி.ராஜகோபால் தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர் ஜி.பச்சாகவுண்டர் முன்னிலை வகித்தார். சங்க மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன், மாவட்ட தலைவர் ஜி.மாதையன் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.

நல்லம்பள்ளியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சங்க ஒன்றிய தலைவர் எல்.சி.கிருஷ்ணன் தலைமை வகித்தார். ஒன்றிய பொறுப்பு செயலாளர் என்.முருகேசன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் வெ. பை.மாதையன், ஒன்றிய பொருளாளர் ஆர். மல்லையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்க மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன் கோரிக்கைகளை விளக்கி விரிவாக பேசினார்.

**மயிலாடுதுறை :** மயிலாடுதுறை மாவட்டத்தில் அனைத்து ஒன்றியங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கட்சியின் மாவட்ட செயலாளர் அ.சீனிவாசன் சீர்காழியில் கலந்து கொண்டார். இ.வி.தொ.ச.மாவட்டசெயலாளர் ஆர்.இடும்பையன் மயிலாடுதுறையில் கலந்து கொண்டார்.

**சத்தியமங்கலம்:** சத்தியமங்கலம் புதிய பேருந்து நிலைய முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் சி.கே.முருகன் தலைமை வகித்தார்.

கோரிக்கைகளை விளக்கி, சங்கதின் மாநிலப் பொதுக்குழு உறுப்பினர் சு.மகேந்திரன், சிபிஐ மாவட்ட குழு உறுப்பினர் ஸ்டாலின் சிவகுமார், மாவட்டத் துணைச் செயலாளர் சக்திவேல், சத்தியமங்கலம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம். சுரேந்தர், தெற்கு ஒன்றிய செயலாளர் எஸ்.சி.நடராஜ், பவானிசாகர் வடக்கு ஒன்றிய செயலாளர் பி.ஏ வேலுமணி ஆகியோர் பேசினர்.

புஞ்சைப்புளியம்பட்டி,பவானிசாகர்,சத்தியமங்கலம் பகுதிகளிலிருந்து விவசாயத் தொழிலாளர்கள் 300க்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் பங்கேற்றனர்.

**திருவள்ளூர்:** திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலகம் அருகில் மாவட்டத் துணைத் தலைவர் கே.வி.செங்கொடி செல்வன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் என்.எஸ்.பிரதாப் சந்திரன், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்டச் செயலாளர் கே.கிருஷ்ணன், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் பி.பி.செந்தில், சிபிஐ மீஞ்சூர் ஒன்றியச் செயலாளர் பார்த்திபன், பிரகாசம் ஆகியோர் மீஞ்சூர் வட்டார வளர்ச்சி அலுவலர் ரவி அவர்களிடம் கோரிக்கை மனு அளித்தனர்.

**கன்னியாகுமரி:** கன்னியாகுமரியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சிபிஐ மாவட்டக்குழு உறுப்பினர் எஸ்.கே.கங்கா தலைமை தாங்கினார். கே.நாகராஜன், வி.அருள்குமார், ஜி.ஐயப்பன், எஸ்.கல்யாணசுந்தரம்




ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிபிஐ மாவட்டச் செயலாளர் தா.சுபாஷ் சந்திரபோஸ், மாவட்ட பொருளாளர் பி.தாமரை சிங், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஜி.சுரேஷ் மேசியதாஸ், எஸ்.நாராயண சுவாமி, இந்திய மாதர் தேசிய சம்மேளன அமைப்பாளர் எஸ்.செல்வராணி, பூதை பஞ்சாயத்து துணைத் தலைவர் எஸ்.அணில்குமார், அனைத்திந்திய முற்போக்குப் பேரவை மாநில துணைத் தலைவர் எஸ்.சுந்தரம், மாநகரச் செயலாளர் இசக்கிமுத்து, இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் கே.சஜேஷ், வெள்ளிமலை பஞ் சாயத்து உறுப்பினர் எம்.சுதாமதன் ஆகியோர் கருத்துரை ஆற்றினர்.

**அரவக்குறிச்சி:** அரவக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வி.தொ.ச. க.பரமத்தி ஒன்றியச் செயலாளர் ஆர்.குப்புசாமி தலைமை தாங்கினார். கோரிக்கைகளை விளக்கி சிபிஐ மாவட்டச் செயலாளர் கே.என். நாட்ராயன், ஏஐடியூசி மாவட்டத் தலைவர் கே.குப்புசாமி, க.பரமத்தி சிபிஐ ஒன்றியச் செயலாளர் எஸ்.பாலகிருஷ்ணன், சிபிஐ அரவக்குறிச்சி ஒன்றியச் செயலாளர் பி.சின்னகாளிமுத்து, க.பரமத்தி ஒன்றியத் தலைவர் என்.எலச்சிமுத்து, சிபிஐ மாவட்டக்குழு உறுப்பினர் வி.கே.வீராச்சாமி ஆகியோர் பேசினர்.

**தென்காசி:** தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் முத்துசாமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கணேசன் முன்னிலை வகித்தார். சிபிஐ தென்காசி மாவட்ட செயலாளர் டி. இசக்கித்துரை கோரிக்கைகளை விளக்கிப் பேசினார்.

ஆர்ப்பாட்டத்தில் சிபிஐ வட்டார செயலாளர் சம்சுதீன், வைரமுத்து, ராசைய்யா, சுப்பையா, குருசாமி, ஆறுமுகம் மற்றும் நூற்றுக்கும் அதிகமான பெண்களும் ஆண்களும் கோரிக்கையை வலியுறுத்தி முழக்கமிட்டனர்.




உச்சநீதிமன்ற வழக்கறிஞர் பிரஷாந்த் பூஷன் தமது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட புகைப்படம்









JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201 Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023 WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 15.10.2022 at Egmore RMS 1 / Patrika Channel.** Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய 24 வது மாநாடு

## செங்கொடிப் பயண தமிழ்நாட்டு வரவேற்பு நிகழ்ச்சிகள்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது மாநாடு ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் வருகிற 2022 அக்டோபர் 14ஆம் தேதி முதல் 18ஆம் தேதி வரை 5 நாட்கள் நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் ஏற்றப்பட உள்ள தியாக செங்கொடி கடந்த 23வது மாநாடு நடைபெற்ற கேரள மாநிலம் கொல்லத்தில் இருந்து எடுத்து வரப்படுகிறது.**

கடந்த 4.10.2022 அன்று கொல்லம் மாவட்டத்திலிருந்து நமது இளம் தோழர்களான இரா. திருமலை, சுக்ஜிந்தர் மகேசரி, வல்லியுல்லா காதரி, கா.பாரதி, தினேஷ் ஸ்ரீரங்கராஜ், யேசு பிரகாஷ், செஞ்சு மெஹாரி, வீரஜ், பிரேம்குமார், ரஹ்மான், ஹனீஷ், சுல்பி, சானவாஸ், த.அன்பரசு, ஆ.மணிகண்டன், தாமோதரன் என இந்தியாவின் பல மாநிலங்களின் இளைஞர், மாணவர் அமைப்புகளின் நிர்வாகிகள் இருசக்கர வாகனங்களில் இந்த செங்கொடியை ஏந்தி பவனி வருகிறார்கள்.

கடந்த 07.10.2022 அன்று மாலை கேரளாவிலிருந்து தமிழக எல்லையான கோவை மாவட்டத்திற்கு இந்த செங்கொடி பயணக் குழுவினர் வருகை தந்தனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம், மாவட்டச் செயலாளர் சிவசாமி ஆகியோர் தலைமையில் நூற்றுக்கணக்கான தோழர்கள் இந்த பயணக் குழுவை வரவேற்றனர்.

8.10.2022 காலை கோவையில் இருந்து புறப்பட்ட செங்கொடி பயணக் குழு கோவை மாவட்ட தோழர்கள் புடைசூழ, திருப்பூர் மாவட்ட எல்லையான தெக்கலூர் பகுதிக்கு வந்தது. இந்த பயணக் குழுவை திருப்பூர் புறநகர் மாவட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் கே.எம்.இசாக் தலைமையில் நூற்றுக்கணக்கான தோழர்கள் வரவேற்றனர். அங்கிருந்து புறப்பட்ட செங்கொடி பயணக் குழுவை அவிநாசி புதுபஸ்நிலையத்தில் கூடியிருந்த நூற்றுக்கணக்கான தோழர்கள் வரவேற்றனர். அடுத்து திருமுருகன்பூண்டி வழியாக திருப்பூர் மாநகர எல்லையான தண்ணீர் பந்தல் காலனிக்கு மதியம் 12.00 மணிக்கு வந்தடைந்த பயணக் குழுவை அங்கு கூடியிருந்த 500க்கும் மேற்பட்ட தோழர்கள் வரவேற்று பயணக்குழுவுடன் இரு சக்கர வாகனங்களில் அணிவகுத்து சென்றனர். அங்கிருந்து அனுப்பர்பாளையம், குமார் நகர், காந்தி நகர் வழியாக திருப்பூர் ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள குமரன் சிலை வளாகத்தை செங்கொடி பயணக்குழு வந்தடைந்தது.

சரியாக 1.00 மணி அளவில் சுட்டெரிக்கும் வெயிலில் சுடர்மிகு செங்கொடி பயணக் குழுவையும், வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட தோழர்களையும் திருப்பூர் மாநகர் மாவட்ட செயலாளர் எஸ். ரவிச்சந்திரன் எம்.சி. வரவேற்றுப் பேசினார். மாநில செயற்குழு உறுப்பினர் எம்.ரவி பிரச்சாரத்தை துவக்கி வைத்து பேசினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச்செயலாளர் மு.வீரபாண்டியன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தியாக வரலாறு, அதன் புகழ் வாய்ந்த போராட்டங்கள், கொள்கை ஆகியவை குறித்து குறிப்பிட்டதோடு, தற்போது ஒன்றியத்தை ஆளும் மக்கள் விரோத மோடி தலைமையிலான பாஜக ஆட்சியை அகற்றவும், மதவெறி, வெறுப்பு அரசியல் நடத்தும் ஆர்எஸ்எஸ் பரிவாரங்களின் கொள்கைகளை முறியடிக்கவும் தொடர்ந்து கருத்துப் போராட்டத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய வருவதைப் பற்றியும் குறிப்பிட்டு பேசினார். வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக ஆட்சிக்கு வராமல் தடுத்திட மதச்சார்பற்ற, ஜனநாயக, இடதுசாரி அமைப்புகள் ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும் என அறைகூவல் விடுத்தார்.

மாலை 3.30 மணிக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருப்பூர் மாவட்ட அலுவலகத்தில் இருந்து புறப்பட்ட செங்கொடி பயணக் குழு, திருப்பூர் புறநகர் மாவட்டத்தில் உள்ள வெள்ளியம்பாளையம் வழியாக ஊத்துக்குளி ஆர்.எஸ். சென்றடைந்தது. அங்கு திரண்டிருந்த தோழர்களின் வரவேற்பை ஏற்று பஞ்சாபில் இருந்து வந்திருந்த சுக்ஜிந்தர் மகேசரி உரையாற்றினார். பிறகு அங்கிருந்து திருப்பூர் மாவட்ட தோழர்கள் புடைசூழ ஈரோடு மாவட்ட எல்லையான விஜயமங்கலம் சுங்கச் சாவடியை நோக்கி செங்கொடி பயணக்குழு சென்றது.

மாலை 4:30 மணிக்கு விஜயமங்கலத்தில் இந்தியக் கம்யூனிஸட் கட்சியின் ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் சு.மோகன் குமார், ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் ஜி.டி. பிரபாகரன் ஆகியோர் தலைமையில் நூற்றுக்கணக்கான தோழர்கள் செங்கொடி பயணக் குழுவை மத்தள இசை முழங்க வரவேற்றனர். பயணக்குழு பெருந்துறையை நோக்கி சென்றது.

**சேலம்:** செங்கொடி பயணம் ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களை கடந்து சேலம் மாவட்டம் சங்ககிரிக்கு 9.10.2022 காலை 11.00 மணிக்கு வந்தடைந்தது. அங்கு நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சிக்கு நங்கவள்ளி ஒன்றிய செயலாளர் பழ.ஜீவானந்தம் தலைமை வகித்தார். அடுத்து பனமரத்துப்பட்டி, வீரபாண்டி ஒன்றியம் மற்றும் கொண்டலாம்பட்டி மண்டல குழு சார்பில் கொண்டலாம்பட்டி பகுதியில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சிக்கு மாவட்ட செயலாளர் ஏ.மோகன் தலைமை வகித்தார். மதிய உணவிற்கு பிறகு தர்மபுரி எல்லையான தொப்பூரில் தர்மபுரி மாவட்ட செயலாளர் எஸ்.கலைச்செல்வன் தலைமையில் திரளான தோழர்கள் வரவேற்று அழைத்துச் சென்றனர். ஈரோடு மாவட்ட செயலாளர் எஸ்.டி.பிரபாகரன், நாமக்கல் மாவட்ட செயலாளர் எஸ்.அன்புமணி, மார்க்சிஸ்ட் மாவட்ட செயலாளர் மேவை சண்முகராஜா, மாவட்ட துணை செயலாளர்கள் எம்.ராமன், ஏ.கந்தன், மாவட்ட பொருளாளர் டி.கண்ணன், நிர்வாக குழு மாவட்ட குழு உறுப்பினர்கள் டி.வி.கருணைதாஸ், எஸ்.பாலன், எம்.பாலன், என்.கே.செல்வராஜ், பா.தினேஷ், சங்கீதா பாலதண்டாயுதம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தருமபுரி:** 9 ம் தேதி மாலை தருமபுரி மாவட்ட எல்லையான தொப்பூரை வந்தடைந்தது. தருமபுரி மாவட்ட செயலாளர் எஸ்.கலைச்செல்வம் தலைமையில் இளம் கம்யூனிஸ்ட்களின் செங்கொடி பயணத்திற்கு வரவேற்பு கொடுக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து தொலைபேசி நிலையம் அருகிலும் வரவேற்பு கொடுக்கப்பட்டது. இதில் சிபிஐ மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.தேவராசன், மாநிலக்குழு உறுப்பினர்கள் எஸ்.சின்னசாமி, கா.சிதமிழ்க்குமரன்,எம்.மாதேஸ்வரன்,கமலாமூர்த்தி, ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி,அரூர் நகர. செயலாளர் முருகன், வட்டார செயலாளர்கள் நல்லம்பள்ளி பிரசாத், இண்டூர் மாது,பாப்பாரப்பட்டி பெருமாள், ஏரியூர் விஸ்வநாதன்,பாலக்கோடு மாதப்பன், பாப்பிரெட்டிப்பட்டி சுப்ரமணி,தீர்த்தமலை உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




# தி.மு.க. தலைவராக மு.க.ஸ்டாலின் தேர்வு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வாழ்த்து

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக மு.க. ஸ்டாலின் இரண்டாம் முறையாக, ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டிருப்பது பெருமகிழ்ச்சி அளிக்கிறது.

சமூக சீர்திருத்த புரட்சியில் நூற்றாண்டு பாரம்பரியம் கொண்ட திராவிட இயக்கத்தின் தொடர்ச்சியாக, பகுத்தறிவுப் பெரியார் ஈவெரா முன்னெடுத்த சுயமரியாதை, சமதர்ம கொள்கை வழிநின்று, அரசியல் அதிகாரம் வென்ற அறிஞர் அண்ணா கண்ட திமுகழகத்தில், முத்தமிழறிஞர் கலைஞரின் அடியொற்றி, கோபாலபுரத்தில் இளைஞர் அணி அமைத்து, பதினான்கு வயதில் பொதுவாழ்வை தொடங்கியவர்.

அரை நூற்றாண்டு பொது வாழ்வில், மேடு பள்ளங்களையும், அடக்குமுறை சவால்களையும் சந்தித்து பயணித்த தளபதி, முன்னேற்றக் கழகத்திலும், அரசு அமைப்புகளிலும் பல்வேறு பொறுப்புகளிலும் பங்கேற்று. பன்முகத் திறன் வளர்த்து, நாடு எதிர்நோக்கும் தலைவராக உயர்ந்துள்ள மு.க.ஸ்டாலின், வகுப்புவாத, மதவெறி, சாதிவெறி,. சனாதான பழைமைவாத சக்திகளிடமிருந்தும், பன்னாட்டு கார்ப்ரேட் சக்திகளின் நிதிமூலதன ஆக்டோபஸ் கரங்களிலிருந்தும்



இந்திய ஒன்றியத்தை மீட்டு பாதுகாக்க, மதச் சார்பற்ற, சமூகநீதி சார்ந்த ஜனநாயக மாற்றை கட்டமைத்து, வெற்றி காண விழைந்து, இரண்டாம் முறையாக திமுகழகத் தலைவராக பொறுப்பேற்கும் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறியுள்ளார்.



மதவெறி - பாசிச பா.ஜ.க.வை வேரறுப்போம்!
மக்கள் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்போம்!
அக்டோபர் 14-18
ஆந்திரா - விஜயவாடாவில்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாடு


Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.